விலை: 30
பக்கங்கள்: 28

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 | கதிர் 309 புர்ட்டாதி 15ஆம் நாள் | திங்கட்கிழமை | 01 ஒக்ரோபர் 2018 | வள்ளுவர் ஆண்டு 2049

## மேலும் இரண்டு கைதிகள் உணவு ஒறுப்பில் குதிப்பு

### தீவிரமாகிறது போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 1
அநுராதபுரம் சிறைச்சாலையில் இதுவரை 10 தமிழ் அரசியல் கைதிகள் உணவு ஒறுப்புப் போராட்டம் நடத்தி வந்த நிலையில் நேற்று மேலும் இருவர் உணவு >> 22

## அரசியல் கைதிகள் விடுதலையை வலியுறுத்தி இன்று உணவு ஒறுப்பு

### வவுனியாவில் அனைவரும் திரள வேண்டும் என அழைப்பு

வவுனியா, ஒக்.1
சிறைகளில் நீண்டகாலமாக அடைக்கப்பட்டுள்ள அரசியல்கைதிகளை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வவுனியாவில் இன்று உணவு ஒறுப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. >> 22



## 2 கிலோ கேரளக் கஞ்சா வவுனியாவில் சிக்கியது

வவுனியா, ஒக்.1
கேரளக் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று வவுனியா போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.
நேற்றுமுன்தினம் இரவு யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பேருந்து நொச்சிமோட்டைப் >> 25

# அரசியல் கைதிகள் விடயத்தில் அரசியல் தீர்மானமே வேண்டும்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிலைப்பாடு

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 1
பாரதூரமான வழக்குகள் உள்ள அரசியல் கைதிகள் ஒவ்வொருவர் தொடர்பிலும் நாளை செவ்வாய்க்கிழமை, நீதி அமைச்சில் சட்டமா அதிபருடன் நான் கலந்துரையாடவுள்ளேன். ஆனால் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனுக்கு இதில் உடன்பாடு இல்லை. அரசியல் கைதிகள் விடயத்தில் அரசியல் ரீதியான தீர்மானமே எடுக்கப்படவேண்டும் என்று அவர் வலியுறுத்துகின்றார். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: >> 25

## தமிழ் மக்களின் வேணவாக்களை முதலமைச்சர் எடுத்துரைத்திருக்கிறார்

### கூறுகிறார் சுமந்திரன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஒக். 1
கடந்த 5 ஆண்டுகளில் வடக்கு மாகாண முதலமைச்சர் தமிழ் மக்களின் வேணவாக்களை உரத்துச் சொல்லியிருக்கின்றார் என்பது எனது கணிப்பு. அதற்கு அவர் தனது ஆளுமையைப் பயன்படுத்தியுள்ளார். ஆனால் >> 23

## போர்க்குற்ற விவகாரம்

## மைத்திரிபாலவே முதல் சாட்சியமளிக்கவேண்டும்

### கூட்டமைப்பு வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 1
போரின் இறுதி வாரங்களில் நடந்தது தனக்குத் தெரியும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருப்பதால், உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழு முன்பாக அவரே முதலாவதாக சாட்சியமளிக்க வேண்டும் என்று >> 25

## தொடருந்து கட்டண மாற்றம் இன்று முதல் நடைமுறைக்கு

கொழும்பு, ஒக்.1
எட்டு ஆண்டுகளின் பின்னர் இன்று முதல் தொடருந்துக் கட்டணங்கள் அதிகரிக்கின்றன. தொடருந்துக் கட்டணங்கள் 15 வீதத்தால் அதிகரிக்கின்றன. ஆகக் >> 25

## மின் தாக்கி சிப்பாய் உயிரிழப்பு

வவுனியா, ஒக்.1
மதவாச்சி, பூனாவில் உள்ள வூபயா இராணுவ முகாமில் மின்சாரம் தாக்கிச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது.
இராணுவ முகாமில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது அவர் மின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார். அவர் நோயாளர் காவு வண்டி மூலம் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும், அவர் முன்னரே உயிரிழந்து விட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். >> 25

## தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி. ஒருவர் என்னை அடிக்கடி விமர்சிக்கின்றார்

### கூறுகிறார் முதலமைச்சர் விக்கி

யாழ்ப்பாணம், ஒக். 1
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் என்னை அடிக்கடி விமர்சிக்கின்றார். நான் முரண்பாட்டு அரசியலைத் தொடர விரும்ப வில்லை. இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் >> 22

## இலங்கையில்

## கண்டுபிடிக்கப்பட்ட கொத்துக்குண்டுகள் தொடர்பில் விளக்கமளிக்கவேண்டும்

### மீண்டும் வலியுறுத்துகிறார் சூக்கா

கொழும்பு, ஒக். 1
இலங்கையில் போர் இடம்பெற்ற பகுதிகளில் கண்ணிவெடிகளை அகற்றுபவர்கள் கொத்துக்குண்டுகளின் எச்சங்களை கண்டுபிடித்துள்ளமை குறித்து இலங்கை விளக்கமளிக்கவேண்டும். கொத்துக்குண்டுகள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட தடைசெய்யப்பட்ட ஆயுதங்கள் குறித்த >> 25

## மானிப்பாய் வாள்வெட்டு வாள்களுடன் இளைஞன் கைது

### ஆவாக் குழு உறுப்பினராம் என்கிறது பொலிஸ்

யாழ்ப்பாணம், ஒக். 1
மானிப்பாயில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் இளைஞன் ஒருவர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார். அவர் ஆவாக் குழுவின் முக்கிய உறுப்பினராக இருக்கலாம் என்று பொலிஸார் >> 23

## ஆண்டிறுதி வரையே அரசுக்கு காலக்கெடு

### ரெலோவின் தேசிய மாநாட்டில் தீர்மானம்

மட்டக்களப்பு, ஒக். 1
தமிழ் மக்களின் வேணவாக்களைத் திருப்திப்படுத்தும் வகையில் புதிய அரசமைப்பு அமையவேண்டும். ஆண்டிறுதிக்குள் >> 25

## வடக்கு - கிழக்கு வீடமைப்பு விரைவில் ஒப்பந்தம் கைச்சாத்து

யாழ்ப்பாணம், ஒக். 1
வடக்கு - கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்படவுள்ள வீடமைப்புப் பணிகளுக்கான ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது. ஒப்பந்தம் வரையப்பட்டு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு >> 25

## இளைஞனை விரட்டிய கும்பல் பொலிஸாரிடம் வசமாக சிக்கினர்

### கொக்குவிலில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 1
கொக்குவில் ஆடியபாதம் வீதியில் இளைஞனை தாக்குவதற்கு 8பேர் கொண்ட கும்பல் விரட்டியுள்ளது. தப்பித்து ஓடிய இளைஞன் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்துள்ளார். இளைஞனை குழு ஒன்று விரட்டிச் செல்வதைக் கண்ட பொலிஸாரும் கலைத்துச் சென்றனர். தாக்குதல் நடத்தச் சென்ற கும்பலைச் சேர்ந்த 3 பேரைக் கைது >> 22

## பலாலி வானூர்தித் தள அபிவிருத்தி நிதி அமைச்சால் தாமதமாகின்றது

யாழ்ப்பாணம், ஒக். 1
பலாலி வானூர்தித் தள ஆரம்ப அபிவிருத்திப் பணிகளை சிவில் வானூர்தித் திணைக்களம் முன்னெடுப்பதற்காக ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் சமர்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு நிதி அமைச்சின் அவதானம் இன்னமும் கிடைக்கப்பெறவில்லை. அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.
பலாலி வானூர்தித் தளத்தை >> 25

## சாரதி அனுமதிக்கான மருத்துவப் பரிசோதனை

# மருத்துவர்களின் எண்ணிக்கையை உடனடியாக அதிகரிக்க வேண்டும்

### சரா எம்.பி. கோரிக்கை: நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் வஜிர உறுதி

யாழ்ப்பாணம், ஒக். 1

சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்கான மருத்துவச் சோதனை மேற்கொள்வதில் இடர்பாடுகளை மக்கள் எதிர்நோக்கி வருகின்றனர். போதியளவு மருத்துவர்கள் இல்லாமையினால் இந்தப் பிரச்சினை ஏற்படுகின்றது.



உடனடியாக இந்த விடயம் தீர்க்கப்பட வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினையை உடனடியாகத் தீர்த்து வைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மருத்துவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என்று. உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

அரச தலைவர் செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மக்கள் பணி நடமாடும் சேவை நிகழ்வு வட்டுக்கோட்டையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் பங்கேற்றிருந்தார்.

இங்கு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பிப்பவர்கள் மருத்துவ சோதனைச் சான்றிதழும் சமர்பிக்க வேண்டும். மருத்துவச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்காக அதிகாலையிலிருந்து வரிசையில் நீண்ட நேரம் நின்றே மருத்துவச் சான்றிதழைப் பெறவேண்யுள்ளது. தொடர்ச்சியாக இந்தப் பிரச்சினை சுட்டிக்காட்டப்படுகின்றபோதும் இன்றுவரை தீர்க்கப்படவில்லை.

யாழ்ப்பாண மாவட்டச் செயலக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினர், போதிய மருத்துவர்கள் இல்லை என்று சொல்லிவிட்டுப் பேசாமல் இருக்கின்றனர். மக்கள் தொடர்ச்சியாகப் பாதிக்கப்படுகின்றார்கள். இந்தப் பிரச்சினை உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும என்றார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் வஜிர, நீண்டகாலமாகத் தொடரும் இந்தப் பிரச்சினையைக் கவனத்தில் எடுத்து உடனடியாகத் தீர்க்கப்படும் என்றார். மருத்துவர்களை மேலதிகமாக நியமிக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டார். (5)

## பன்னாட்டு நீதிபதிகள் மூவர் இலங்கைக்கு வருகின்றனர்!

கொழும்பு, ஒக்.1

பன்னாட்டுநீதிபதிகள் மூவர் இலங்கைக்குவரவுள்ளனர் என்று தெரியவருகின்றது.

லத்தீன் அமெரிக்கா, தென்னாபிரிக்கா மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளைப் பிரதிநிதிதுவம்செய்யும்3நீதிபதிகளே இலங்கை வரவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 4ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள அமர்வு ஒன்றில் பங்கேற்கும் வகையில் இவர்கள் வருகின்றனர் என்றும், அதன்போதுஅவர்கள்தமது நாடுகளில்உள்ளஅரசமைப்புச் சபைகள் தொடர்பான கருத்துக்களை வெளியிடுவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் முக்கிய அரசியல் பிரமுகர்களையும் இவர்கள் சந்திப்பர் என்றும் தெரியவருகின்றது. இலங்கையில் அரசமைப்பு உருவாக்கம் நடைபெற்றுவரும் நிலையில் இவர்களின் வருகைமுக்கியத்துவம்மிக்கதாகஇருக்கும்என்றுஅரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ற)

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் இன்று ஆர்ப்பாட்டம்.

மட்டக்களப்பு, ஒக்.1

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் பன்னாட்டுச் சிறுவர் தினமான இன்று மட்டக்களப்பில் கவனவீர்ப்புப் போராட்டம்நடத்தப்படவுள்ளது. மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல்ஆக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

இதுதொடர்பில்தெரிவிக்கப்பட்டதாவது

போர்க் குற்றவாளிகளைக் காப்பாற்றும் அரசு எம்மீது அக்கறையற்றுள்ளது. பன்னாடுகள்நேரடியானஅழுத்தத்தைக் கொடுத்து எமது பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியே போராட்டம் நடத்துகின்றோம்.

வலிந்துகாணாமல்ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களில் உள்ள சிறுவர்கள் பல்வேறு ஏக்கங்களுடனும், கண்ணீருடனும்தமதுஉறவுகளை எதிர்பார்த்துள்ளனர். இந்தச் சிறுவர் தினத்திலாவதுபன்னாட்டுச்சமூகம் அவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு எமது உறவுகள் கிடைக்க வழியேற்படுத்தவேண்டும் - என்றனர். (ற)

## நாடு திரும்பிய மைத்திரி அதிரடிகள் காட்டலாம்

### அரசியல் நோக்கர்கள் எதிர்வுகூறல்

கொழும்பு, ஒக்.1

ஐ.நாபொதுச்சபைக்கூட்டத் தொடரில் பங்கேற்க அமெரிக்கா சென்றிருந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனநேற்றுநாடுதிரும்பி யுள்ள நிலையில் அவர் பல இறுக்கமான அரசியல் நகர்வுகளைமுன்னெடுக்கலாம் என்று ஊகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அமைச்சரவை மாற்றம் உட்படப்பலஅதிரடிநடவடிக்கைகளை அவர் முன்னெடுக்கக் கூடிய சாத்தியங்கள் உள்ளன என்று அரசியல் நோக்கர்கள்குறிப்பிடுகின்றனர்.

நிதியமைச்சின் செயலராக, உள்ள ஆர்எச்எஸ் சமரதுங்கஓய்வுபெறுவதால், அவருக்குப் பதிலாகத், தனது தெரிவான ஒருவரை அரச தலைவர்நியமிக்கக்கூடும். அமைச்சரவை மாற்றம் ஒன்றுக்கும் வாய்ப்புகள் உள்ளது. அமைச்சரவையில் இரண்டு புதுமுகங்கள் இடம்பெறக் கூடும்.

அவர்களில்ஒருவர்தயாசிறி ஜெயசேகர. மற்றொருவர் ஐ.தே.கவைச் சேர்ந்த ரவி கருணாநாயக்க. எனினும் இந்தஇரண்டுநியமனங்கள் தொடர்பாகவும்இன்னமும் அதிகாரபூர்வமாகஉறுதிப்படுத்தப்படவில்லை என்றும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். (ற)

## இளைஞர்களின் செயலால் கைப்பற்றப்பட்டது கஞ்சா

### வாகனத்தையும் கைவிட்டு சந்தேகநபர்கள் தப்பியோட்டம்



கிளிநொச்சி, ஒக்.1

சந்தேகத்துக்குஇடமாகப்பயணித்த வாகனம் ஒன்றை இளைஞர்கள் விரட்டிச் சென்று பிடித்தபோது அந்த வாகனத்தில் பொதி செய்யப்பட்ட நிலையில் கஞ்சா சிக்கியது. இந்தச்சம்பவம் நேற்றுமுன்தினம் பிற்பகல் கிளிநொச்சி, மலையாளபுரத்தில் நடந்துள்ளது.

மாலை 7 மணியளவில் சந்தேகத்துக்கு இடமான வாகனம் ஒன்று பயணிப்பதைக் கண்டஇளைஞர்கள்அதைப் பின்தொடர்ந்துள்ளனர். அதை அவதானித்த வாகனத்திலிருந்தவர்கள்குறுக்கு வீதிகள் ஊடாக வேகமாகப் பயணித்தனர். அவர்கள் வழிதவறிகுளம்ஒன்றுக்குச் செல்லும் பாதை வழியாகச் சென்றுவிட்டனர். அதையடுத்து நான்கு பொதிகளை வீசி விட்டு, வாகனத்தையும் கைவிட்டுத்தப்பியோடியுள்ளனர்.

அவர்கள் வீசிய சுமார் ஒரு கிலோ அளவிலான நான்கு பொதிகளைஆராய்ந்தபோது அவற்றில் கஞ்சா இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதுதொடர்பாகக்கிளிநொச்சி மாவட்ட போதை ஒழிப்பு சிறப்புப்பொலிஸாருக்குஅறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த பொறுப்பதிகாரி சதுரங்க தலைமையிலான குழுவினர் கஞ்சாப் பொதிகளையும், வாகனத்தையும் பொலிஸ்நிலையம் எடுத்துச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-35)

## கசிப்புடன் பெண் கைது துன்னாலையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 1

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டார் மற்றும் கசிப்பை வீட்டில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவர் சந்தேகத்தில், நெல்லியடிப் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

துன்னாலைஆட்டுப்பட்டி பகுதியில் கசிப்புக் காய்ச்சப்படுவதாக கிடைத்த தகவலைஅடுத்துபொலிஸார் அந்தப் பகுதியில் சோதனையில் ஈடுபட்டனர். சந்தேகநபரின் வீடும்சோதனைக்குஉட்படுத்தப்பட்டது. இதன் போது 20 போத்தல் கசிப்பு மற்றும் கோடா போத்தல் என்பன கைப்பற்றப்பட்டதுடன் கசிப்பு உற்பத்தி செய்ய பயன்படும் பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன. சந்தேகத்தின் அடிப்படையில் 38 வயதுடைய பெண் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (5,7,26)

## கஞ்சாவுடன் இளைஞன் கைது

யாழ்ப்பாணம், ஒக். 1

5 கிராம் கஞ்சாவை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 27 வயது இளைஞன் வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் நேற்று இரவு கைது செய்யப்பட்டுள்ளான். (5,7,26)

## கட்சி தாவிய பிரதேச சபை உறுப்பினர்



வவுனியா, ஒக்.1

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் நேற்றுக் கட்சி மாறினார்.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்டு வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்குத் தெரிவானவர் ஆர். விஸ்வநாதன். இவர் பூம்புகாரைச் சேர்ந்தவர்.

நேற்று இவர் முன்னாள் பிரதி அமைச்சர்பிரபாகணேசனின் ஜனநாயக மக்கள் காங்கிரஸில்இணைந்துகொண்டார். பிரதேசசபையில்தமிழ்த்தேசியக்கூட்டமைப்புஆட்சியமைப்பதற்கு இவர் ஆதரவு வழங்கியிருந்தார். (ற-110)

# வடக்கில் நிலத்தடி தண்ணீர் மாசடைந்து குறைந்துபோகிறது

## விவசாய அமைச்சின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.1

வடக்கு மாகாணத்தில் உள்ள நிலத்தடி தண்ணீர் மட்டமானது வெகுவாகக் குறைவடையும் அதேவேளை, பல்வேறு காரணங்களால் விரைந்து மாசடைகின்றது என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சுரேந்திரநாதன் தெரிவித்துள்ளார் .

யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தின் பொருளாதாரத்தில் முதன்மைப் பங்கு வகிக்கும் விவசாயத்துறை, அந்தத் துறையுடன் இணைந்ததாக நீர்ப்பாசனத்துறை, அதனுடன் இணைந்ததாக இந்தக் குடிதண்ணீர் காணப்படுகிறது. அந்த வகையிலே குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பில் பல்வேறு பிரச்சினைகளை நாங்கள் கோடிட்டுக் காட்ட முடியும். வடக்கு மாகாணத்தின் நிலத்தடி தண்ணீர் மட்டமானது தற்போது மிகவேகமாக குறைவடைந்து வருகின்றது. அதே போன்று வடக்கு மாகாணத்தில் உள்ள குடிதண்ணீருடன் உவர்நீர் கலக்கின்ற செயற்பாடுகள் அவதானிக்கபபட்டுள்ளன. இதனால் எமது நன்னீர் நிலைகள் வேகமாக உவர்நீராக மாற்றமடைகின்றன. விவசாய இரசாயனப் பொருள்கள் எங்களுடைய நவீன விவசாய முறைகள் காரணமாக நிலத்தடிநீருடன் கலக்கின்ற ஒரு பிரச்சினையும் வடக்கு மாகாணத்தில் காணப்படுகின்றன. சரியான முறையில், திட்டமிட்ட முறையில் மலக்கழிவுகள் அகற்றப்படாமல் அவை நிலத்தடி நீருடன் சேர்ந்து கலக்கின்ற செயற்பாடுகள் தற்போது அவதானிக்கப்பட்டுள்ளன. மேலும் எங்களுடைய தொழிற்சாலைகளில் இருந்து வெளிவரும் கழிவுகள் எங்களுடைய மேற்தரப்பு நீருடன் கலத்தலும் எமது மாகாணத்தில் காணப்படுகின்றது.

வடக்கு மாகாணம் போருக்குப் பின்னர் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில் மேற்பரப்பு நீர், மற்றும் நிலத்தடி நீர் என்பன தற்போது பலராலும், பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. கட்டுமான வேலைகள், தொழிற்சாலைகளுடைய பெருக்கம், உல்லாச விடுதிகள் மற்றும் தங்கமிடங்களுடைய பெருக்கம், நகரமயமாக்கல் போன்ற செயற்பாடுகள் விரைவாக நடைபெற்று வருவதால் எமது மேற்பரப்பு நீர், மற்றும் நிலத்தடி நீர் பெருமளவு மாசுக்கு உட்படுகின்றன. வடக்கு மாகாணத்தில் விவசாயத்திலே தாக்கம் செலுத்துகின்ற குளங்கள், நீர்த் தேக்கங்களிலே இருந்து பாரிய அளவிலே மண் அகழ்கின்ற செயற்பாடுகள் எங்களுடைய நிலத்தடி நீரிலே தாக்கத்தைச் செலுத்துகின்றன. பெற்றோலியப் பொருள்கள் நிலத்தடி நீருடன் கலத்தல் போன்ற செயற்பாடுகளும் நீரை மாசுபடுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஆகவே எமது அமைச்சுக்குட்பட்ட திணைகளங்கள் மூலம் வருடாவரும் பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம். மரநடுகைத் திட்டங்கள், பாரிய மற்றும் நடுத்தர குளங்கள் சீரமைப்பு, குளங்கள் தூர் வாரப்படல், நீர்ப்பாசனக் கால்வாய்கள் சீரமைப்பு, உவர் நீர்த் தடுப்பணைகள் அமைக்கப்பட்டு கடல் நீர் நன்னீருடன் கலக்கின்ற செயற்பாடுகள் தடுக்கப்படுதல், வறட்சியால் பாதிக்கப்பட்ட தீவுப் பகுதிகள், இடரால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான குடிதண்ணீர் விநியோகம் போன்றவற்றை எமது அமைச்சுக்கூடாகச் செயற்படுத்திவருகிறோம். இந்தத் துறைக்காக எங்களுடைய கொள்கைத்திட்டமிடல் ஆலோசனைகளாக வடக்கு மாகாணத்தில் இனங்காணப்பட்டுள்ள பாரிய மற்றும் நடுத்தரக் குளங்கள் 63 காணப்படுகின்றன. இவை இணைப்புச் செய்யப்பட வேண்டும், மற்றும் சிறிய குளங்களாக இனங்காணப்பட்டுள்ள 457 குளங்கள் இணைப்புச் செய்யப்பட்டு முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும்.

நீர்வளத்தைப் பாதுகாப்பதற்காக தேசிய ரீதியிலும், மாகாண ரீதியிலும் காணப்படுகின்ற நிறுவனங்கள் சரியான முறையிலே ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும், தேசிய ரீதியில் உருவாகக்கப்பட்டுள்ள நீதி முகாமைத்துவக் கொள்கைகள் மெருகூட்டப்படவேண்டும். நீர்வளத்துறைப் பாதுகாப்பில் பொதுமக்களின் பங்கு ஊக்குவிக்கப்படவேண்டும். நீர்வளத் திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டு சரியான தரவுகள் வடக்கு மாகாணத்தில் எடுக்கப்படல் வேண்டும்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு குளாய் நீர்விநியோகத்திட்டம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார்.

(21)

# அந்திய செலவாணியை பெற்றுத்தரக் கூடிய விவசாயிகளை சந்தித்ததில் பெருமை

## *விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவிப்பு*

நாட்டுக்கு அந்திய செலவாணியை பெற்றுத்தரக் கூடிய விவசாயிகளை முதன் முதலில் இங்கு சந்தித்ததில் நான் பெருமையடைகிறேன் என்று விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

வாகரை பிரதேச செயலர் பிரிவில் அம்மந்தனாவெளி கிராமத்தில் மேற்கொள்ளப்படும் பிப்பிஞ்சா உற்பத்திகளை நேற்று மாலை பார்வையிட்டதுடன், வாகரை பிரதேச செயலர் பிரிவில் பிப்பிஞ்சா உற்பத்தியாளர்கள் மற்றும் விவசாயிகளை சந்தித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், வாகரை பிரதேச மக்களின் பிரதான தொழில் மீன்பிடி என்று அறிந்திருந்தும் அம்மக்கள் இன்று அதனுடன் நாட்டுக்கு அந்தியச் செலவாணியை பெற்றுத்தரக் கூடிய விவசாய தொழிலை செய்து நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்கின்றார்கள் என்றால் அதன் மதிப்பு ஏற்றுமதி பொருள்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளையே சாரும்.

இன்று நாட்டின் ஏற்றுமதி குறைந்து காணப்படுகின்றது. அதனால் தான் அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரித்து காணப்படுகின்றது. விவசாயிகளை ஊக்கப்படுத்துவதன் மூலம் விவசாயத்தை அபிவிருத்தி செய்து நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு அரசு விவசாயிகளுக்கு பல்வேறு உதவித்திட்டங்களை செய்து வருகின்றது. அதில் ஒரு பகுதி தான் இன்று வாகரை பகுதியில் இடம் பெற்று வரும் பிப்பிஞ்சா உற்பத்தியாகும்.

பிப்பிஞ்சா உற்பத்திக்காக அரசு ஒன்பதாயிரம் மில்லியன் ரூபாய் களை ஒதுக்கியுள்ளது அதில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு தொள்ளாயிரம் மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. விவசாயத்துறையை மட்டக்களப்பு மாவட்டத்தில் அபிவிருத்தி செய்வதற்கு அரச தலைவர் கூடிய கவனம் செலுத்தியுள்ளார்.

நாம் இன்று வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் உணவுகளையே அதிகம் உண்டு வருகின்றோம் அதனை தவிர்த்து நாம் உற்பத்தி செய்து நாம் உண்போம் என்ற திட்டத்தில் உற்பத்திகளை செய்யும் திட்டங்களை ஆரம்பிக்க வேண்டும் அதன் மூலம் தான் எமது நாட்டின் பொருளாதாரத்தை நாம் முன்னேற்ற முடியும்.

கூட்டரசின் மூலம் அரச தலைவர் விவசாயத்துறைக்கு அதிக பங்களிப்புக்களை செய்து வருகின்றார் மூவாயிரத்தி ஐநூறு ரூபாவிற்கு உரத்தினை கொள்முதல் செய்த நெல் உற்பத்தியாளர்களுக்கு ஐநூறு ரூபாவுக்கும் ஏனைய பயிர் உற்பத்தியாளர்களுக்கு ஆயிரத்தி ஐநூறு ரூபாவிற்கும் வழங்கி வருகின்றோம் விவசாயிகள் கஸ்டப்படக் கூடாது என்பதற்காக அரசு மிகுதிப்பணத்தினை செலுத்துகின்றது.

இளைஞர்களை விவசாயத்தில் அதிகம் ஈடுபடக் கூடியவர்களாக மாற்றி அவர்களின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதுடன் நாட்டின் பொருளாதாரத்தினையும் எதிர்காலத்தில் முன்னேற்றுவதற்கு இப்பகுதி இளைஞர்கள் முன்வர வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கல்குடா தொகுதி அமைப்பாளரும் வாகரை பிரதேச சபை பிரதித் தவிசாளருமான டி.எம்.சந்திரபால, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் எம்.பி.முஸம்மில், ஓட்டமாவடி பிரதேச சபையின் பிரதி தவிசாளர் யூ.எல்.அஹமட் லெப்பை, வாழைச்சேனை பிரதேச சபையின் பிரதி தவிசாளர் ரி.யசோதரன் மற்றும் விவசாய அமைச்சின் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# பால் உற்பத்தியாளர்களின் கொடுப்பனவுகள் தாமதம்

## *உற்பத்தியாளர்கள் விசனம்*

யாழ்ப்பாணம் .ஒக் .1

வன்னிப் பகுதியில் மில்கோ நிறுவனம் கொள்வனவு செய்யும் பாலிற்கான பணத்தை முன்னர் 15 நாள்களுக்கு ஒரு தடவை உற்பத்தியாளர்களுக்கு வழங்கியது. ஆனால் தற்போது 45 தினங்களின் பின்பே வழங்கப்படுவதாக அதன் வாடிக்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வன்னியின் பெரும் பகுதியிலும் உற்பத்தி செய்யும் பால் உற்பத்தியினை தற்போது 3 நிறுவனங்கள் கொள்வனவு செய்கின்றனர். அவை குறிப்பாக லீற்றர் 65 ரூபா முதல் 70 ரூபா வரையில் உள்ளது . இதில் அரச கொள்வனவு நிறுவனமான மில்கோ நிறுவனமும் பால் கொள்வனவில் ஈடுபடுகின்றது. இவர்களால் கொள்வனவு செய்யப்படும் பாலிற்கான பணம் முன்னர் 15 நாள்கள் இடைவெளியில் வழங்கப்பட்டு வந்தன.

இந்த நிலையில் குறித்த நிறுவன உற்பத்தி சந்தையில் சுழற்சியின் தன்மையை காரணம் காட்டி தற்போது 45 நாட்கள் முடிந்த பின்பே முதல் 15 நாள்களிற்கான பணம் வழங்கப்படுகின்றது. இதனால் அங்கத்தவர்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொள்ளும் நிலமைக்கு காரணம் வெளிநாட்டுப் பால்மாக்கள் இறக்குமதியே எனவும் அங்கத்த வர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இது தொடர்பில் மில்கோ அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது ,

தற்போது நாட்டின் மொத்த தேவையின் 39 வீதத்தினையே எமது நாட்டின் உற்பத்தி நிறைவு செய்கின்றது. இதனால் எஞ்சிய 61 விகிதமான தேவைக்காக இறக்குமதி அனுமதிக்கப் படவேண்டிய நிலமையுள்ளது. இந்த நிலையில் உள்ளூர் உற்பத்தியை விட அதிகவிலையில் உள்ள இறக்குமதிப் பொருள்கள் வெளிநாட்டு மோகம் காரணமாகச் சந்தை வாய்ப்பு அதிகமாகவும் உள்ளூர் உற்பத்தி சுழற்சி குறைவாகவும் காணப்படுகின்றது.

இவ்வாறு உள்ளூர் உற்பத்திக்கான போதிய சந்தை விற்பனை போதாமையே உடனுக்குடன் வாடிக்கையாளர்களின் பாலிற்கான கொள்வனவுப் பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்படுகின்றது. இருப்பினும் அனைவரின் பணமும் அவர்களிற்கே வழங்கப்படுகின்றது. என்றார். (105)

# காரைநகரில் அரசு அனுமதி வழங்கியும் அமைக்கப்படாத பொலிஸ் நிலையம்

## காரை. பிரதேச செயலர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம். ஒக். 1

காரைநகர் பிரதேசத்தில் பொலிஸ் நிலையம் அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ள நிலையிலும் இன்றுவரை அதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. இதனால் அங்கு இடம் பெறும் குற்றங்களை கட்டுப்படுத்த முடியாத நிலை இருப்பதாக காரைநகர் பிரதேச செயலர் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தனாவிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் பிரதேச செயலர்கள் மற்றும் திட்டமிடல் அதிகாரிகளுக்கும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தனாவுக்கும் இடையில் மாவட்ட செயலகத்தில் அதிகாரிகள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் இடம் பெற்றது. இந்தக் கலந்துரையாடலிலேயே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது.

காரைநகர் பகுதிக்கு நிரந்த பொலிஸ் நிலையமோ அல்லது தற்காலிக பொலிஸ் காவலரணோ இல்லை. எமது பிரதேசங்களில் ஏதாவது குற்றச் செயல்கள் இடம்பெற்றால் ஊர்காவற்துறை பொலிஸார் வருகை தந்து விசாரணை செய்ய வேண்டும். அவ்வாறு அவர்கள் வருவதற்கு பல மணி நேரம் எடுக்கின்றது. அப்படியானால் எவ்வாறு எமது பிரதேசங்களில் குற்றங்களை கட்டுப்படுத்துவது. அதுமட்டுமல்லாது ஊர்காவற்துறையில் பொலிஸ் நிலையம் அமைந்திருப்பதால் எமது மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் போதிய புரிந்துணர்வு மற்றும் தொடர்பாடல் இல்லாத நிலமையும் காணப்படுகின்றது.

எமது பிரதேசத்துக்கு என தனியாக பொலிஸ் நிலையம் அமைக்க அரசு அனுமதி அளித்துள்ளது. எனினும் அதற்கான பூர்வாங்க வேலைகள் இன்னும் முன்னெடுக்கப் படவில்லை. எனவே விரைவாக இதற்கு தீர்வினை பெற்றுத்தாருங்கள் என கோரிக்கை விடுத்தார்.

இதனை கருத்தில் எடுத்த உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் இது எனது அமைச்சு சார்ந்த விடயம் அல்ல என்றாலும் இது தொடர்பில் நான் சம்பந்தப்பட்ட தரப்புடன் பேசுகின்றேன். பிரதேச செயலராகிய நீங்களும் உங்கள் மாவட்டச் செயலருக்கு இது தொடர்பில் கடிதம் ஒன்றை அனுப்புங்கள் அவர் சம்பந்தப்பட்ட தரப்புக்கு அதனை தெரிவிப்பார். அதில் நானும் அக்கறை எடுத்து தீர்வினை பெற்றுத்தருகின்றேன் - என்றார்.

(8)

# பருத்தித்துறை மருத்துவமனையில் விரைவில் இலத்திரனியல் சேவை

**பருத்தித்துறை, ஒக். 1**

**தென்பகுதி மருத்துவமனைகளில் நடைமுறையில் உள்ள இலத்திரனியல் சேவைகள் விரைவில் பருத்தித்துறை மருத்துவமனையில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.**

இந்தத் திட்டத்தின் பிரகாரம் மருத்துவமனையில் சிகிச்சை பெறவரும்நோயாளர்கள்பற்றியவிபரங்கள் கணினியில் பதிவேற்றம் செய்துவைக்கப்பட்டுநோயாளர்களுக்கு அதற்கான நோயாளர் அட்டை வழங்கப்படும். இந்த அட்டையின் மூலம் மருத்துவமனையில் உள்ள வெளிநோயாளர் பிரிவுக் கருமபீடம், மருத்துவரின் அறைப் பிரிவு, மருந்தகம், ஆய்வு கூடம், எக்ஸ் கதிர்ப் பிரிவு, ஊசி போடும் அறை போன்றவற்றின் கணினிகளில் பதிவேற்றப்படும்.

இந்த அட்டையை வைத்துள்ள நோயாளிஎந்தவொருமருத்துவமனையிலும் சிகிச்சை பெறமுடியுமெனவும் சிகிச்சை பெறவரும் போதுவழங்கப்படும்அட்டையின் இலக்கத்தைத் தெரிவித்தால் அதன் மூலம் நோயாளியின் முழு மருத்துவ விவரங்களைக் கொண்டு தொடர் சிகிச்சை பெறமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இலத்திரனியல்மருத்துவமனைத் திட்டம் கம்பகா மாவட்ட தோம்பே மருத்துவமனை மற்றும் பருத்தித்துறை மருத்துவமனை ஆகியவற்றில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் நாட்டு நிலைமை காரணமாகப் பருத்தித்துறை மருத்துவமனையில் இந்தத் திட்டத்தைத் தொடர முடியாமல் போனது. தற்போது இந்தத் திட்டம் தென்பகுதியில் உள்ள பல மருத்துவமனைகளில் நடைமுறையில் உள்ளதால் கொழும்பு சுகாதாரத் திணைக்களத்தினர் யாழ்ப்பாண மாவட்ட மட்டத்தில் உள்ள சாவகச்சேரி, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, தெல்லிப்பழை ஆகிய நான்கு ஆதார மருத்துவமனைகளில் நடைமுறைப்படுத்துமாறு அறிவித்துள்ளனர்.

இதனடிப்படையில்பருத்தித்துறை மருத்துவமனை மருத்துவர்கள், துணை மருத்துவர்கள் அடங்கிய குழுவினர்அண்மையில்தோம்பே மருத்துவமனைக்குச் சென்று அங்கு திட்டம் தொடர்பான பயிற்சிகளைப்பெற்றுத்திரும்பியுள்ளனர். (ம-9)

## சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 1

**கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலை**

கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலையின்சிறுவர், முதியோர்தின நிகழ்வுகள்இன்றுநடைபெறவுள்ளன.

பாடசாலையின்அதிபர்சி.நந்தகுமார் தலைமையில் பாடசாலை மண்டபத்தில்காலை9மணிக்கு இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. முதன்மை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் ஐயூப் அஸ்மின் கலந்துகொள்கிறார்.

சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணக் கல்வி வலய சேவைக்கால ஆலோசகர்மேரிதிரேசாமரியநாயகம் கலந்துகொள்கிறார்.

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி**

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியில்பன்னாட்டுசிறுவர், முதியோர்தினநிகழ்வுகள்இன்று நடைபெறவுள்ளன.

பீடாதிபதி கலாநிதி சதாசிவம் அமிர்தலிங்கம் தலைமையில் இன்றையநிக்ழ்வுகள்நடைபெறவுள்ளன.

முதன்மை விருந்தினராகக் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முன்னாள் அதிபர் ஆறுமுகம் சிறீஸ்கந்தமூர்த்தி கலந்து கொள்ளவுள்ளார்.


**அரியாலை சன சமூக நிலையம்**

அரியாலை சனசமூக நிலையம் நடத்தும் பன்னாட்டு சிறுவர் மற்றும் வழிகாட்டிகள் தினம் இன்று திங்கட்கிழமை நிலையத் தலைவர் வி.சுதாகர் தலைமையில் நடைபெறவுள்ளது.

விளையாட்டு நிகழ்வுகள் சனசமூக நிலைய மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

சிறுவர்கள் பங்குபற்றும் வலைப்பந்தாட்டம், கிரிக்கெட், கயிறு இழுத்தல், கால்பந்தாட்டம், சமநிலை ஓட்டம், பட்டம் பறக்கவிடுதல் போன்ற போட்டிகளும் இன்று இடம்பெறவுள்ளன.

மாலை 6 மணிக்கு காசிப்பிள்ளை கலையரங்கில் கலை நிகழ்வுகளும் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன. (ம-17,11)



வடமராட்சி கிழக்கு சரித்திர பிரசித்தி பெற்ற பூர்வீக நாகதம்பிரான் ஆலயத்தின் கப்பல் திருவிழாவானது கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை 2 மணியளவில் ஆலய வடக்கு வீதியில் சிறப்பாக நடைபெற்றது. மூலமூர்த்தியான நாகேஸ்வர பெருமான் கப்பல் வாகனத்தில் பிள்ளையார் வள்ளி தெய்வானை சகிதம் வடக்குவீதியில் எழுந்தருளினார். (ம)

## இயற்றாலையில் 5 வறிய குடும்பங்களுக்கு பிரதேசசபை உறுப்பினர் பிரபாகரன் உதவி

யாழ்ப்பாணம், ஒக். 1

இயற்றாலை ஜே/343 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவில் வசித்துவரும் ஐந்து குடும்பங்களின் வறிய நிலமை தொடர்பில் பிரதேச சபை உறுப்பினர் பிரபாகரன் கேட்டறிந்ததுடன் அவர்களுக்கு சில உதவிகளையும் செய்து கொடுத்தார்.

இந்த ஐந்து குடும்பங்களையும்சேர்ந்தவர்களில்ஒருவர்வரணிப்பிரதேச சபை உறுப்பினர் சி.பிரபாகரனைச் சந்தித்து தமது நிலைமையை எடுத்துக்கூறியுள்ளார். இதையடுத்துஅவர்களின்இருப்பிடத்துக்குச்சென்ற பிரபாகரன்தனதுஇளைஞர் அணிவட்டத்தின்உதவியுடன்அவர்களுக்கு முதல்கட்டமாகசிலஉதவிகளைச்செய்துள்ளார். அடுத்தகட்டமாகமேலும் சில உதவிகள் செய்து கொடுக்கப்படும் என்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு பிரபாகரன் உறுதி வழங்கியுள்ளார். (ம-9)

## ஆசிரியர் தின விழா

யாழ்ப்பாணம், ஒக். 1

மூளாய் சைவப் பிரகாச வித்தியாலயம் பன்னாட்டு ஆசிரியர்தின விழாவை இன்று கொண்டாடுகிறது. வித்தியாலயத்தின் உப அதிபர் க.பாலச்சந்திரன்தலைமையில்ரதிதேவிமண்டபத்தில்காலை8மணிக்கு இன்றைய நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. முதன்மை விருந்தினராக ஓய்வுநிலைக்கோட்டக்கல்விப்பணிப்பாளர்சிறி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக மூளாய் சமாதான நீதவான் செ.சிவசுப்பிரமணியம், குறித்த வித்தியாலயத்தின் முன்னாள் ஆசிரியர் க.மனோகர், மதிப்புறு விருந்தினராகமூளாய்இந்துஇளைஞர்மன்றத்தின்தலைவர்சி.யனார்த்தனன் ஆகியோர் கலந்துகொள்கின்றனர். (ம)



## கைதடி கிழக்கு சனசமூக நிலையத்தின் இந்து வாலிபர் சங்கத்தினது வைரவிழா

கைதடி கிழக்கு சனசமூக நிலைய இந்து வாலிபர் சங்கத்தின் வைர விழாவை முன்னிட்டு நூல் வெளியீடும் நுழைவாயில் திறப்பும், சரஸ்வதி சிலை திறப்பு விழாவும் கடந்த வெள்ளிக்கிழமை மாலை சின்னத்தம்பி அம்பலவானர் கலையரங்கில் நடைபெற்றன.

கைதடி கிழக்கு வீரமாகாளி அம்மன் ஆலய சிவஸ்ரீ முத்துக்குமார கணேசக்குருக்கள் முன்னிலையில் இந்துவாலிபர்சங்கதலைவர் ம.பத்மரூபன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், சிறப்புவிருந்தினராக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி திருமதி விக்னேஸ்வரி பவநேசன், மதிப்புறு விருந்தினராக சுவிஸ் வாழ் அங்கத்தவர் முருகேசு ரவீந்திரராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தநிகழ்வில்நுழைவாயிலைத் தலைமை விருந்தினர் கலாநிதி என்.சண்முகலிங்கமும், சரஸ்வதி சிலையை சங்கரப்பிள்ளை விக்னேஸ்வரனும் திறந்து வைத்தனர். இந்து வாலிபர் சங்கத்தின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடப்பட்ட இந்து நாதம் என்ற நூலின் ஆய்வுரையை குருசாமி வித்தியாலய அதிபர் ந.ஜெயரூபன் ஆற்றினார். மதிப்புறுவிருந்தினரான முருகேசு ரவீந்திரராஜா முதல் பிரதியைப் பெற்றார். (ம-159,9)

## 'மருத்துவம் பேசுகிறது' நூல் வெளியீடு

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் பெண் நோயியல் மகப்பேற்று நிபுணர் சி.சிவச்சந்திரன்எழுதியபெண்களின்கர்ப்பகாலப் பிரச்சினைகள் மற்றும் அவர்கள் சார்ந்த ஏனைய விடயங்கள் தொடர்பிலான 'மருத்துவம் பேசுகிறது' நூல் வெளியீடு கடந்த 27ஆம் திகதி மருத்துவமனையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சகர்மருத்துவர்த.குகதாசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகயாழ்ப்பாணப்பல்கலைக்கழக வணிகக்கல்விமுகாமைத்துவபீட முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் மா.நடராஜசுந்தரம் கலந்து கொண்டார்.

"மருத்துவம் பேசுகிறது" நூலை முதன்மைவிருந்தினர்வெளியிட, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளர் சி.குணசீலன்பெற்றுக்கொண்டார். நூலின்வெளியீட்டுரையைமருத்துவமனையின் திட்டமிடல் மருத்துவ அதிகாரி மருத்துவர் கமலநாதனும் நயப்புரையை யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையின் பெண் நோயியல் மகப்பேற்று நிபுணர் கே.சுரேஷ்குமாரும் நிகழ்த்தினர். (ம-9)



# வாசிப்பு மாதத்தையொட்டி நாடளவில் பல நிகழ்வுகள்

தென்மராட்சி, ஒக். 1

**தேசிய வாசிப்பு மாதம் இன்று முதல் ஆரம்பிக்கும் நிலையில், இன்றிலிருந்து வாசிப்பை ஊக்குவிக்கும் முகமாக பல்வேறு வேலைத்திட்டங்கள் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படவுள்ளன.**

கல்வி அமைச்சின் தேசிய நூலகவாக்கல் சபை, "இனங்களுக்கிடையில்புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கான வாசிப்பு" என்னும் தொனிப்பொருளை மையமாகக் கொண்டு நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துமாறு அறிவித்துள்ளது. நூலகங்கள் தம்மிடம் இருப்பில் உள்ள புத்தகங்களின் தொகுப்பைக் காட்சிப்படுத்த வேண்



டும். நூலகத்தைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்.

வாசிப்பை ஊக்கப்படுத்தும் வகையிலான செயற்றிட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்றும் கல்வி அமைச்சின் தேசிய நூலகவாக் கல் சபை குறிப்பிட்டுள்ளது.

இதன்படி சுற்றுநிரூபத்துக்கு அமைய இன்று முதல் வாசிப்பு மாதத்தை யொட்டிய தமது செயற்பாடுகள் இடம்பெறும் என்று வட மாகாணத்தில் உள்ள பொது நூலகங்கள் பலவும் அறிவித்துள்ளன. தமக்கு அருகில் உள்ள பாடசாலைகளுக்குச் சென்று வாசிப்புத் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்றிட்டங்களை மேற்கொள்ளவும் சில நூலகங்கள் திட்டமிட்டுள்ளன என்று தெரியவருகிறது. (ம-9,159)

## மத்தியஸ்த தின விழா

யாழ்ப்பாணம், ஒக். 1

தேசிய மத்தியஸ்த தின விழா கொழும்பு - அலரி மாளிகையில் நாளைமறுதினம் கொண்டாடப்படவுள்ளது. காலை 9 மணிமுதல் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் அலதா அத்துகோரல, பிரதி அமைச்சர் சாரதி துஸ்மிந்த ஆகியோரின் அழைப்பின் பேரில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரும் நிகழ்வில் பங்குபற்றுகின்றனர்.

மத்தியஸ்த சபைத் தவிசாளர்கள் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொள்கின்றனர். (ம)



பன்னாட்டு முதியோர் தினத்தை முன்னிட்டு கடந்த 28ஆம் திகதி கைதடி அரச முதியோர் இல்லத்தில் இராணுவத்தினரால் சில நிகழ்வுகள் நடத்தப்பட்டன. (ம)

## சாவகச்சேரி பொதுச்சந்தையில் களஞ்சிய அறைகளை கடைகளாக மாற்றவும்

### சந்தைக்குழு அறிவுறுத்தல்

சாவகச்சேரி, ஒக். 1

சாவகச்சேரி பொதுச் சந்தையில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிகக் கடைத் தொகுதியில் தற்போது களஞ்சியமாகப் பயன்படுத்தப்படும் 'கடை' அறைகளை உடனடியாக கடைகளாகப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கடைகளின் வாடகையாளர்கள் அதற்கு முன்வராத பட்சத்தில் அவற்றினை மீளப்பெற்றுக் கடை நடத்துபவர்களுக்கு வழங்கவேண்டும் எனவும் சாவகச்சேரி நகர சபையின் சந்தைக் குழுவினரால் தீர்மானிக்கப்பட்டது.

2000ஆம் ஆண்டு இடம்பெற்ற போரின்போது சாவகச்சேரி நவீன சந்தை உட்பட சந்தைக்குள் நான்கு பக்கமும் அமைந்திருந்த 118 கடை அறைகளும் முற்றாக அழிவடைந்து காணப்பட்டன.

2002ஆம் ஆண்டு மீளக்குடியமர்ந்த காலத்தில் 32 கடை அறைகளைக் கொண்ட தற்காலிகக் கடைத் தொகுதி அமைக்கப்பட்டு கடைகளை இழந்த வாடகையாளர்களுக்கு குறைந்த மாதாந்த வாடகையில் வழங்கப்பட்டது.

அவற்றில் சில கடைகளை வாடகைக்குப் பெற்றவர்கள் அதிக வாடகைக்குகைமாற்றிவிட்டுச் சென்றுள்ளனர். அதிக வாடகைக்குப் பெற்றவர்கள் கடை அறைகளைக் களஞ்சியமாகப் பயன்படுத்தி வருகின்றனர். இந்த நிலையில் கடந்த 27ஆம் திகதி கடைத்தொகுதியினை பார்வையிட்ட சபையின் சந்தைக்குழுவினர் தற்போது களஞ்சியமாகப் பயன்படுத்தும் கடை அறைகளை உடனடியாகத் திறந்து கடையாகச் செயற்படுத்துமாறும் தவறின் கடை அறைகளின் முன்னைய வாடகையாளருடன் சபை செய்து கொண்ட ஒப்பந்தம் கைவிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-9,159)

## உந்துருளி விபத்தில் மூவருக்கு காயங்கள்

சாவகச்சேரி, ஒக். 1

சாவகச்சேரி கெருடாவில் பகுதியில் சாலை வளைவில் திரும்பிய உந்துருளி சாலையோரத்தில் நடந்து வந்த 81 வயது முதியவருடன் நேற்றுமுன்தினம் மோதி விபத்துக்குள்ளானதில் மூதாட்டியும் ஏனைய இருவரும் காயமடைந்தனர்.

மூதாட்டியும், உந்துருளியில் பயணித்த சரசாலையைச் சேர்ந்த 20 வயது இளைஞரும் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

உந்துருளியைச் செலுத்தி வந்த சரசாலையைச் சேர்ந்த 17 வயது சிறுவன் சிறு காயங்களுடன் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ம-9,159)

## கொடிகாமத்தில் டெங்குக்கு எதிரான செயற்றிட்டங்கள்

தென்மராட்சி, செப். 30

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் கொடிகாமம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட தவசிகுளம் பகுதியில் நேற்றுமுன்தினம் 405 இடங்கள் டெங்கு தொடர்பில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

இவ்வாறாக ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 405 இடங்களில் 7 இடங்களில் டெங்கு பெருகுவதற்கு ஏதுவான சூழல் இருந்ததை அடுத்து அவற்றைத் துப்புரவு செய்யுமாறு கெடுவிதிக்கப்பட்டது. தவறினால் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சார்ந்தோருக்கு அறிவுறுத்தப்பட்டது. (ம-9,159)

## கரைச்சியில் டெங்கு தொடர்பில் 616 இடங்களில் பரிசோதனை

தென்மராட்சி, செப். 30



கிளிநொச்சி கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகப் பிரிவுக்குட்பட்ட அம்பாள்குளம் சாந்தபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் 616 இடங்கள் டெங்கு தொடர்பில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இந்தத் திடீர் நடவடிக்கையின்போது 48 இடங்களில் டெங்கு உற்பத்தியாவதற்கு ஏது நிலைகள் அவதானிக்கப்பட்டுள்ளன. இதையடுத்து அத்தகையவர்களுக்கு எதிராகச் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. அடுத்த இரண்டு வாரங்களுக்குள் துப்புரவு செய்யத் தவறுவோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று கரைச்சி சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர். (ம-9,159)

## மல்வில் கிருஷ்ணன் கோவில் சனீஸ்வர ஹோமப் பெருவிழா

பளை செப்.29

பளை இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் கோவில் சனீஸ்வர ஹோமப் பெருவிழா எதிர்வரும் ஆறாம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் இடம்பெறும்.

ஏழரைச் சனி, அட்டமத்துச் சனி, கண்டச் சனி, ஜென்மச் சனி என சனீஸ்வர தோஷம் உள்ளவர்களுடன் ஏனைய அடியார்களையும் கலந்துகொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்தனர். (ம-9)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக். 1

தமிழகத்தைச் சேர்ந்த அரிகர தேசிக சுவாமிகளின் திருமுறைப் பண்ணிசைச் சொற்பொழிவு இன்று நடைபெறவுள்ளது.

நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள அகில இந்து மாமன்ற மண்டபத்தில் இன்று மாலை 5 மணியளவில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. (ம)

## பனம் கைப்பணியாளர் சங்கங்கள் ஊடாக பனம் களியைப் பெறுவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 1

பனை அபிவிருத்திச் சபை யாழ்ப்பாண மாவட்டத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட பனம் கைப்பணியாளர் சங்கங்கள் ஊடாக இம்முறை கூடுதலான பனம் களியைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதுவரைக்கும் நாற்பது வரையிலான பனம் கைப்பணி உற்பத்தியாளர் சங்கங்கள் உருவாக்கப்பட்டு சபையினால் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் அவற்றினூடாகவே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரியவருகிறது.

இந்தச் சங்கங்கள் பனம் பழத்தில் இருந்து பனங் களியைப் பெறும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. பனங் களியை எவ்வாறு பனம் பழத்தில் இருந்து பெறுவது தொடர்பான பயிற்சிகளைப்பனை அபிவிருத்திச் சபை, சம்பந்தப்பட்ட உற்பத்தியாளர் சங்கங்களுக்கு வழங்கியும் வருகிறது. இந்தப் பனம் கைப்பணி உற்பத்தியாளர் சங்கங்களால் உற்பத்தி செய்யப்படும் சகல பனம் உற்பத்திப் பொருள்களுக்குமான சந்தை வாய்ப்புக்களை பனை அபிவிருத்திச்சபை ஏற்படுத்திக் கொடுக்கவும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. (ம-17)



## குடிதண்ணீர், மின்சார வசதிகள்

# கிளிநொச்சி மாவட்டம் தொடர்ந்தும் பின்னிலை

## கிளிநொச்சி மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் கேதீஸ்வரன் தெரிவிப்பு



யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்ற பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் மக்கள் கருத்தறியும் செயற்பாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

**கிளிநொச்சி, ஒக்.1**

**குடிதண்ணீர் மின்சார வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் போருக்குப் பின்னரும் கிளிநொச்சிமாவட்டம்தொடர்ந்தும்பின்னிலையிலேயேஉள்ளது, கிளிநொச்சியில் 4 ஆயிரத்து 39 குடும்பங்களுக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை ஒருலட்சத்து 13ஆயிரத்து 468 பேர் தற்போதும் பவுசர் மூலம் குடிதண்ணீரைப் பெற்றுவருகின்றனர். கிளிநொச்சி மாவட்ட மக்கள் தொகையில் 50 வீதமானவர்கள் பயன்படுத்தும் குடிதண்ணீர் பாதுகாப்பற்ற குடிதண்ணீராகவே உள்ளது என்று கிளிநொச்சி மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது

**மின்சாரம்**

கிளிநொச்சி மாவட்டத்தில் 4ஆயிரத்து 39 குடும்பங்களுக்கு இதுவரை மின்இணைப்பு வழங்கப்படவில்லை என்று கிளிநொச்சி மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

43ஆயிரத்து 818 குடும்பங்கள் வாழ்கின்ற எமது மாவட்டத்தில் இதுவரை 4ஆயிரத்து 39 குடும்பங்கள் மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. அதற்குரிய முதன்மைக் காரணமாக இருப்பது மின்னிணைப்பு கட்டமைப்பை விரிவாக்கம் செய்வதிலேஇதுவரைகிடைத்திருக்கும் முதலீடு குறைவாக உள்ளது. ஆகவே இந்த கட்டமைப்பு விரிவாக்குதிலே ஒரு தேவை ஏற்பாட்டைச் செய்து அரச தலைவருடைய நாளைய வெளிச்சம் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவேண்டுமானால் எங்களுடைய இந்த மக்களுக்கு மின்னிணைப்பைப் பெற்றுக்கொடுப்பதற்கான செயற்பாடுகளை செய்த இந்த ஆணைக்கு (பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு) கவனத்தில் எடுக்க வேண்டும். எமது மாவட்டத்திலே மற்றொரு முக்கிய பிரச்சினையாக இருப்பது மின்சாரக் கட்டணங்களுக்காக நீண்ட காலமாக சிட்டை கணிக்கப்படுவதில்லை. கிட்டத்தட்ட ஒருவருடங்கள் முழுமையடைந்த பின்னர். மொத்தமாக ஒரு வருடத்துக்குரிய சிட்டையைக் கணித்துக் கொண்டுவந்து மக்களிடம் வழங்குகின்றார்கள் இதனால் ஒரே தடவையில் குடிமகன் ஒருவரால் 38ஆயிரம், 50ஆயிரம் ரூபாவைப் பெற்று மின்கட்டணத்தைச் செலுத்த வேண்டிய ஒரு துர்பாக்கிய நிலை காணப்படுகின்றது. ஆகவே இந்த மின்சாரக் கட்டணத்தை மதிப்பீடு செய்வதிலே அந்தந்த மாதத்தில் உரிய கட்டணத்துக்கான சிட்டைகளை வழங்குவதனூடாக வறிய குடும்பங்களாகிய அவர்கள் இன்னொரு கடன்சுமைக்குள் தள்ளப்படுகின்ற சூழலை இல்லாமல் செய்ய வேண்டுமென்பது எனது கோரிக்கையாக இருக்கின்றது.

சாதாரண குடும்பத்தினர் ஒரு மின்னிணைப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாக இருந்தால் ஏறக்குறைய அவர்கள் 38 ஆயிரம் ரூபாவைச் செலவு செய்ய வேண்டியுள்ளது. இந்த 38 ஆயிரம் ரூபாவைப் பெற்றுக்கொள்ள முடியாது பல குடும்பங்கள் எல்லா வசதிகளும் இருந்தும் கூட மின்னிணைப்பைப் பெற முடியாமல் இருக்கின்றனர். நாங்கள் ஏற்கனவே ஒருகுறிக்கப்பட்ட அளவு மீள்குடியமர்ந்த மக்களுக்கு 20 ஆயிரம் ரூபா மாத்திரமே வழங்கி வருகின்றோம். உண்மையில் அந்தத் தொகை இன்றைய மின்சார சபைத் தொகையுடன் சேர்ந்து 30 ஆயிரம் ரூபாவாக அதிகரித்து வழங்கப்படவேண்டும் என்பது என்னுடைய இன்றுமொரு எதிர்பார்ப்பாக உள்ளது.

**குடிதண்ணீர்**

கிளிநொச்சி மாவட்டத்தில் கிட்டத்தட்ட 34 ஆயிரத்து 318 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 13 ஆயிரத்து 468 பேர் தற்போது பவுசர் மூலம் குடிதண்ணீரைப் பெற்றுவருகின்றனர். கடந்த மூன்று மாதங்கள் எங்களுக்கு மிகப் பிரச்சினையாக இருந்தது. இருக்கக் கூடிய உள்ளூராட்சி சபைகளிலே நீரை வழங்குவதற்கான அந்த ஏற்பாடுகளை அவர்களிடம் கோரியபோதும் .நிதி வசதிகள் உள்ளூராட்சி சபைகளில் இல்லாததன் காரணமாக அவர்களும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளார்கள். ஆகவே இந்த குடிதண்ணீரை வழங்க வேண்டியவர்களுக்காக இரண்டு முக்கியமான விடையங்கள் கவனத்தில் எடுக்கப்படவேண்டும். ஒன்று உள்ளூர் நீர் நிலையான பூநகரிக் குளத்தைச் சீரமைப்பது, அதற்கு நாங்கள் ஏற்க்கெனவே ஒரு கருத்திட்டத்தை வடக்கு மாகாண சபையிடம் வழங்குவதற்கு தயாரித்துள்ளோம். பூநகரி நீர்த் திட்டத்தை நடைமுறைப்படுத்த பூநகரிக்குளத்தை சீரமைப்பதைக் கவனத்தில் எடுக்கவேண்டும், இரண்டாவதாக உள்ளூராட்சி சபைகளுடைய நீர்க் கட்மைப்புப் பொறிமுறைகளை மேம்படுத்துவதற்காக ஒரு சிறப்பு நிதி ஏற்பாடு அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பது எனது இரண்டு கோரிக்கைகளாக உள்ளது. இவை தவிர இதுவரை 4.1 சதவீதம் மட்டுமே பாதுகாப்பான நீர் வழங்கும் மாவட்டமாக கிளிநொச்சி காணப்படுகிறது. எங்களிடம் ஆக 7 மழைநீரை நன்னீராக்கும் திட்டம் மாத்திரமே உள்ளன. 50 வீதத்துக்கு மேற்பட்ட சனத்தொகையினர் கிளிநொச்சியில் பாதுகாப்பற்ற குடிதண்ணீரை அருந்திக் கொண்டிருக்கும் ஒரு துர்பாக்கிய நிலை உள்ளது. எனவே பாதுகாப்பான குடிதண்ணீர் வழங்கும் திட்டங்கள் இன்னும் விரிவாக்கப்பட வேண்டும்.

நெருக்கடியான பல கிராமங்களிலே இந்தத் திட்டங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. வெளியிடங்களில் இருந்தும் எமது மாவட்டத்துக்கான குடிதண்ணீர் தேவையாக உள்ளது. எனவே மாகாணத் திணைக்களம் முன்வைத்துள்ள பாலியாறு அபிவிருத்தித் திட்டம் கவனத்தில் எடுக்கப்படவேண்டும்.

ஏனெனில் அது ஒரு மிகப் பொருத்தமான குடிதண்ணீர் வழங்கும் திட்டமாகும் - என்றார். (21)

## குடிமக்கள் குழுவினருக்கு சிறப்புச் செயலமர்வு






வவுனியா, ஒக்.1

யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டத்தின் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்துடன் இணைந்து செயற்படும் குடிமக்கள் குழு அங்கத்தவர்களுக்கான சிறப்புச் செயலமர்வு நேற்றுமுன்தினம் வவுனியாவில் நடைபெற்றது.

வடக்கு, கிழக்கு மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் இணைப்பாளர் அன்ரனி யேசுதாசன் தலைமையில் நடைபெற்ற செயலமர்வில் சமூகக் கணக்காய்வை எவ்வாறு மேற்கொள்வது, உள்ளூராட்சி மன்றங்களின் வரவு செலவுத் திட்டத்தில் மக்களின் பங்களிப்பு எவ்வாறு இருக்க வேண்டும், அவற்றைக் கண்காணிக்கும் விதங்கள் தொடர்பில் விளக்கமளிக்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

(ற-110)

### மேலதிக மாவட்டச் செயலரின் அரச விடுதியில் கொள்ளை முயற்சி

மன்னார்,ஒக் .1

மன்னார் மாவட்ட மேலதிக மாவட்டச் செயலரின்அரசவிடுதிநேற்றுமுன்தினம் இரவு கொள்ளையரால் உடைத்து தேடுதல் இடம்பெற்றுக்கொண்டிருந்த நிலையில் மேலதிக மாவட்டச் செயலர் அங்கு சென்ற நிலையில் திருடர்கள் தப்பியோடிவிட்டனர்.

மன்னார் மாவட்ட மேலதிக மாவட்டச் செயலராகப் பணியாற்றும் குணபாலனின் அரச விடுதியில் நேற்று முன்தினம் இரவு 7 மணிக்கு 3 திருடர்கள் பாதுகாப்பு கேற்றை உடைத்து உள்ளே நுழைந்ததோடு விடுதியின் வாசல் கதவினையும் உடைத்து உள்ளே நுழைந்துள்ளனர்.

இவ்வாறு கதவுகளை உடைத்து உள்ளே நுழைத்தவர்கள் அனைத்து இடங்களிலும் பெறுமதியான பொருள்களைத் தேடி தேடுதல் வேட்டையில் ஈடுபட்டதோடு பல பொருள்களையும் எடுத்துச் செல்ல தயாராகியுள்ளனர். இந்த நிலையில் குறித்த நேரம் மழை பொழிந்த வண்ணம் இருந்தமையினால் மேலதிக அரச அதிபர் விடுதிக்கு திரும்பியுள்ளார். இதனை அவதானித்த 3 திருடர்களும் கொண்டு செல்வதற்காக சேகரித்த பொருள்களையும் கைவிட்டுத் தப்பியோடியதனால் பொருள்கள் பாதுகாக்கப்பட்டது.

இதேநேரம் குறித்த மேலதிக மாவட்டச் செயலர் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துரைப்பற்று பிரதேச செயலராக இருந்த போது ஓமந்தையில் உள்ள இவரது வீட்டிற்குள் நுழைத்து பலலட்சம்ரூபாபெறுமதியானதங்கநகைகளும் பணமும் கொள்ளையிடப் பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (105)

## கச்சாய் நூலக வாசிப்பு மாத நிகழ்வுகள்

சாவகச்சேரி பிரதேச சபை, கச்சாய் பொது நூலகத்தின் நடப்பாண்டு தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளன. அடுத்த மாதம் பாடசாலை மாணவர்கள், முன்பள்ளிச் சிறார்கள் மற்றும் வாசகர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஆவணவாக்கல் சபையால் அறிவிக்கப்பட்ட "இனங்களுக்கு இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கான வாசிப்பு" எனும் தொனிப்பொருளில் நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நூலக விழிப்புணர்வு ஊர்வலம், போதைப் பொருளைக் கட்டுப்படுத்துவதற்கான தெரு நாடகம், எழுத்தாளர்கள், விரிவுரையாளர்களால் நூல்களின் பயன்பாடு தொடர்பான செயலமர்வுகள், வாசிப்பு முகாம், வாசிப்புப் போட்டிகள், சிறுவர் முதியோர் தின விழாக்கள், மாணவர்களுக்கான பயன்தரு திரைப்படக் காட்சிப்படுத்தல்கள், யாழ்ப்பாணம் பொது நூலக அனுசரணையுடன் கஸ்டப் பிரதேசங்களின் நடமாடும் நூலக சேவை , மாணவர்களிடையே வாசிப்பு, கட்டுரை, கவிதை, சிறுகதை, பொது அறிவு போட்டிகளை நடத்தல், முன்பள்ளி மாணவர்களுக்கான வர்ணம் தீட்டல், போட்டி, நூலகவளங்களை முக நூல்கள் மூலம் வாசகர்களை அதிகரித்தல், புதிய அங்கத்தவர்களை இலவசமாக இணைத்தல், துண்டுப்பிரசுரங்கள் வெளியிடல், ஒக்ரோபர் மாதத்தில் நூலக பாவனை நேரம் அதி கரித்தல், தாழ்வாரத்தில் நூலகம் பற்றி வீடு வீடாக விழிப்புணர்வுப் பிரச்சாரம், சஞ்சிகை வெளியிடல் போன்ற செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட வுள்ளனஎன்றுதெரிவிக்கப்பட்டது. (ற-159,9)

## சிறுவர், முதியோர் தின நிகழ்வு

பளை ஒக்.1

பளை தர்மக்கேணி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் பன்னாட்டு சிறுவர் மற்றும் முதியோர் தினத்தையொட்டிய சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள் இன்று காலை 11 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். அதிபர் வே.செல்வகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி கல்வி வலய விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் கு.பிரதீபனும் சிறப்பு விருந்தினர்களாக பச்சிலைப்பள்ளி பிரதேச சமூக சேவைகள் அலுவலர் சு.ஜெயானந்தராஜா மக்கள் வங்கியின் பளைக் கிளையின் முகாமையாளர் சி.ஜெரோன் ஆகியோரும் கலந்து கொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (9)

## முதியோர் சங்கக் கட்டடத் திறப்பு நிகழ்வு

பூநகரி, முழங்காவில் முதியோர் சங்கக் கட்டடத் திறப்பு நிகழ்வும் பூநகரி பிரதேச செயலக முதியோர் தின விழாவும் இன்று மாலை 2 மணிக்கு முழங்காவில் முதியோர்பராமரிப்புநிலைய மண்டபத்தில் நடைபெறும். நிகழ்வில் வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் ஒரு மில்லியன் ரூபா செலவில் இந்தக் கட்டடம் திறந்து வைக்கப்படவுள்ளது. உதவிப் பிரதேச செயலர் யோ.கிரிஜா தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்குப் பூநகரி, பிரதேச சபைத் தவிசாளர் அ.ஐயம்பிள்ளை, மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் தலைமைப்பீட சமூக சேவைகள் அலுவலர் நா.இராஜா மனோகரன் ஆகியோரும் கலந்து கொள்வர். (9)

### முல்லைத்தீவில் சர்ச்சைக்குரிய

# நீரியல்வள அதிகாரிகளின் இடமாற்றத்தைச் செயற்படுத்துக

### வலியுறுத்துகின்றார் சாந்தி எம்.பி.

முல்லைத்தீவு, ஒக்.1

முல்லைத்தீவு மாவட்டத்தில் பணியாற்றும் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் 3 பேர் இடமாற்றப்படுவர் என்று வழங்கப்பட்ட வாக்குறுதி நிறைவேற்றப்பட வில்லை. இடமாற்றத்துக்கான எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டியுள்ளார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா.



அவர் மேலும் தெரிவித்தாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுருக்கு வலைத் தொழிலுக்கு முற்றாகத் தடை விதிக்கப்படும் என்றும், மாவட்டத்தில் பணியாற்றும் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அலுவலகத்தைச் சேர்ந்த சர்ச்சைக்குரிய 3 உத்தியோகத்தர்களும் இடமாற்றப்படுவர் என்றும் கடற்றொழில் அமைச்சர் தெரிவித்திருந்தார்.

கடந்த 19ஆம் திகதி நடந்த சந்திப்பில் அவர் அதற்கான பணிப்புரையை பணிப்பாளர் நாயகத்துக்குப் பிறப்பித்திருந்தார். அந்தச் சந்திப்பில் முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழில் சமாசத் தலைவர் பேதுருப்பிள்ளை பேரின்பநாதன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் ஆகியோரும் பங்கு கொண்டிருந்தனர். இந்தச் சந்திப்பை எதிர்க்கட்சித்தலைவர் ஏற்பாடு செய்திருந்தார்.

அதில் சுருக்கு வலைத் தொழிலை உடனடியாகத் தடை செய்யுமாறும், 3 உத்தியோகத்தர்களும் ஒக்ரோபர் முதலாம் திகதி நடைமுறையாகும் வகையில் இடமாற்றப்படுவர்கள் என்றும் அமைச்சர் உறுதியளித்தார்.

சுருக்குவலை அனுமதிகளைத் தடை செய்வதற்கான உத்தரவு மாவட்ட அதிகாரிகளுக்குப் பிறப்பிக்கப்பட்ட போதும், இடமாற்றம் தொடர்பில் இதுவரை எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை- என்றார்.(ந - 105)

## மன்னார் மறைமாவட்ட ஆயர் இத்தாலிக்குப் பயணம்



மன்னார்,ஒக் 1

மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை இத்தாலிக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

இத்தாலியின் பலெர்மோ ஆன்மிகத்தளத்தைச் சேர்ந்த சுமார் 35 பிள்ளைகளுக்கு உறுதிப்பூசுதல் எனும் திருவருட் சாதனத்தை வழங்கும் வகையில் ஆயர் அங்கு சென்றிருந்தார்.

இந்த நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை பலெர்மோ மறை மாவட்டத்தின் பேராயர் கொறாதோ லொற பிச்சேயினை அவர் சந்தித்துள்ளார்.

இதன் போது பலெர்மோ மறைமாவட்ட பேராலயத்தையும், பலெர்மோ மறைமாவட்ட முத்திப்பேறுபெற்ற பினோ புலிசியின் கல்லறையையும் அவர் தரிசித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (56)

## தவறான முடிவெடுத்து குடும்பப்பெண் உயிரிழப்பு

வவுனியா, ஒக். 1

வவுனியா செட்டிகுளம் முதலியார்குளம் பகுதியில் குடும்பப்பெண்ணொருவர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக்கொண்டார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியளவில் தூக்கில் தொங்கிய நிலையில் குறித்த பெண்ணின் சடலம் அவதானிக்கப்பட்டது. தகவல் செட்டிகுளம் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. திடீர்ச்சாவு விசாரணை அதிகாரி ஹமீத்தின் உத்தரவை அடுத்து சடலம் மீட்கப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வவுனியா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது. (ம-110)

## சிறுவர் தின நிகழ்வு

வவுனியா - பாவற்குளம் சமுர்த்திவங்கியும் கணேஸ்வரா மகா வித்தியாலயமும் இணைந்து நடத்தும் சிறுவர் தின நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு கணேஸ்வரா மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி முதல்வர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக செட்டிகுளம் பிரதேச செயலர் சிவகரன் கலந்து கொள்ளவுள்ளார். (422)

## கைத்தொழிற் பயிற்சி

முல்லைத்தீவு,ஒக்.1

விஞ்ஞான,தொழில்நுட்ப, ஆராய்ச்சி,திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சின் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவின் எண்ணக் கருவின்படி தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் தலைவர் கலாநிதி சராங்கா அலஹபெருமவின் வழிகாட்டலில் 25 ஆயிரம் தொழில் வாய்ப்புக்கள் (கட்டுமானத்துறை,சுகாதாரத்துறை, ஹோட்டல் மற்றும் சுற்றுலாத்துறை, மோட்டார்வாகனத்தொழிற்துறை) எனும் தொனிப் பொருளில் தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையினால் நாடு பூராகவும் முன்னெடுக்கப்படும் சிறப்புப் பயிற்சித் திட்டத்தின் ஓர் அங்கமாக முல்லைத்தீவு மாவட்டதேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் பயிலுநர்களுக்கான அடிப்படைப் பயிற்சியின் ஆரம்ப நிகழ்வானது மாவட்ட முகாமையாளர் செல்வி.சு.சிவகௌரி தலைமையில் இன்று காலை 9.30 மணியளவில் மாங்குளம் வீதிமுள்ளியவளையில்(கொமர்ஷல் வங்கிக்கு எதிரில்) அமைந்துள்ள மாவட்ட அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

# விளையாட்டுக்கழகம்,கோவில்களுக்கு உதவி

முல்லைத்தீவு.ஒக்.1

வடமாகாணசபை உறுப்பினர் து. ரவிகரனால் கோவில்கள் மற்றும் விளையாட்டுக் கழகத்துக்கு ரூபா இரண்டு இலட்சம் பெறுமதியில் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

விளையாட்டுக் கழகத்துக்கு விளையாட்டுப் பொருள்களும், கோவில்களுக்கு காசோலைகளும் வழங்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மேலும் அறியவருகையில்.

2018ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டிலிருந்தே இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் முல்லைத்தீவு குமுழமுனை. ஐக்கியம் விளையாட்டுக் கழகத்தினருக்கு ரூபா ஒரு இலட்சம் பெறுமதியில். 29 கடினப் பந்துகள், இரண்டு துடுப்பு மட்டைகள் மற்றும் துடுப்பாட்ட ஆடுகள விரிப்பொன்று ஆகியன வழங்கப்பட்டன.

விளையாட்டு உத்தியோகத்தர் முகுந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வானது, முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில், கடந்த 29 ஆம் திகதி இடம்பெற்றது. இந்த நிகழ்வில் ஐக்கிய விளையாட்டுக்கழகத் தலைவர் இ.கவாசுக்கர், செயலர். சுதாலதன், பொருளாளர் ச. அருள்நாதன் ஆகியோர் கலந்து கொண்டு ரவிகரனிடம் இருந்து விளையாட்டுப் பொருள்களைப் பெற்றுக்கொண்டனர். அத்துடன் இதில் கரைதுறைப்பற்றுப் பிரதேச சபை உறுப்பினர் சி .லோகேசுவரனும் கலந்துகொண்டார்.

மேலும் புதுக்குடியிருப்பு, கைவேலி சிறி முறிகண்டிப் பிள்ளையார் கோவிலின் மறுசீரமைப்பு வேலைகளுக்காக, ரூபா ஐம்பதாயிரம் பெறுமதியான காசோலையும், ஒட்டுசுட்டான், புதியநகர் இத்திமடி சித்தி விநாயகர் கோவிலுக்கு ரூபா ஐம்பதாயிரம் பெறுமதியான காசோலையும் வழங்கப்பட்டுள்ளது.

இவற்றை ரவிகரன் கடந்த வாரம் கோவில்களின் நிர்வாகத்தினரிடம் கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.





# விளையாட்டுகள் எந்தளவுக்கு முக்கியமோ அந்தளவுக்கு அறநெறி வகுப்பும் முக்கியம்!

## கைதடி இந்து வாலிபர் சங்க வைர விழாவில் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் உரை

விளையாட்டு வீரர்கள் எதற்காகப் பயிற்சி செய்கிறார்கள், எப்படி உடலைக் கெட்டியாக வைத்திருக்கிறார்களோ, அவ்வாறே நல் வாழ்க்கைக்கு, மனம் இளகி நிற்க, மக்களுடன் மனம் திறந்து தோழமையுடன் பேச அறநெறிப் பாடசாலைச் சூழலும் பயிற்சியும் தேவையாக இருக்கின்றன.



இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கைதடி கிழக்கு சனசமூக நிலைய இந்து வாலிபர் சங்க வைரவிழாவின் பரிசளிப்பும், கலை நிகழ்வுகளும் சங்கத் தலைவர் பத்மரூபன் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

கைதடி கிழக்கு சின்னத்தம்பி அம்பலவாணர் கலையரங்கில் மாலை 6 மணிக்கு ஆரம்பமான நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அறநெறி வகுப்புகள் தேவையற்றவை என்று எம்முட்பலர் கூறுவதைக் கேட்டுள்ளேன். " 'டியூசன்' வகுப்பு முக்கியமா அறநெறிப் பாடசாலை முக்கியமா?" என்று சிலர் கேட்கின்றார்கள்.

"இந்து சமயம் பற்றி அறிய அறநெறிப் பாடசாலைகளுக்குப் போய்த்தான் படிக்க வேண்டுமா?" என்று வேறு சிலர் கேட்கின்றார்கள். அவர்களிடம் நான் கேட்கும் கேள்வி,"விளையாட்டு வீரர்கள் ஏன் பயிற்சி எடுக்கின்றார்கள்?" விளையாட்டு நடை பெறுந் தினம் அன்றுதானே அவர்களுக்கு வேலையுண்டு. அது ஏன் தினமும் ஓடுகின்றார்கள், பயிற்சி எடுக்கின்றார்கள், உடலைக்கெட்டியாக வைத்துக் கொண்டுள்ளார்கள் என்று கேட்டால் விளையாட்டுக்களுக்கு பயிற்சி அவசியம் என்கின்றார்கள்.

அதே போல் நல் வாழ்க்கைக்கு, மனம் இளகி நிற்பதற்கு, இறைவனுடன் சார்ந்து நிற்பதற்கு, தியானம் பண்ணுவதற்கு, மக்களுடன் மனம் திறந்து தோழமையுடன் பேசுவதற்கு அறநெறிப் பாடசாலைச் சூழலும் பயிற்சியும் தேவையாக இருக்கின்றன. உங்கள் மதம் பற்றித் தெரிந்து வைத்திருக்க அறநெறிப் பாடசாலைகள் அவசியமாக இருக்கின்றன.

சைவ சமயத்தின் வளர்ச்சியை எந்தவொரு பிறசக்திகளோ மற்றைய மதங்களோ அழித்துவிட முடியாது என்பதற்கு இந்து வாலிப சங்கங்களின் எழுச்சிமிகு செயற்பாடுகள் கட்டியம் கூறுகின்றன.

கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என ஔவைப்பிராட்டி அன்று கூறினார்.

காரணம் கோவில் இருந்தால் அங்கு சமயம் இருக்கும், சாப்பாடு இருக்கும், சயன வசதிகள் கூட இருக்கும் என்பதே.

**கட்டாயம் செல்லுங்கள்**

சிறு பிள்ளைகளுக்கிடையே சமய அறிவை மேம்படச் செய்வதற்கு அறநெறிப் பாடசாலைகளை அமைத்து கல்வி நெறி வகுப்புக்கள், பா ஓதல்,பண்ணிசை வகுப்புக்கள், பாலவிகார் வகுப்புக்கள் என சைவம் சார்ந்த பவகுப்புக்களை ஞாயிற்றுக்கிழமைகளிலும் முக்கிய தினங்களிலும் முன்னெடுக்க வேண்டியது அவசியம்.

ஏனைய மதங்களைச் சார்ந்த பிள்ளைகள் தூய உடை அணிந்து ஞாயிற்றுக் கிழமைகளில் அவர்களின் மதம் சார்ந்த வகுப்புக்களுக்குத் தவறாது சமூகமளிக்கின்றார்கள். அதேபோன்று எமது பிள்ளைகளும் இறைபக்தியுடன் கூடிய எளிய வாழ்க்கை முறைக்குத் திரும்புவதற்கு நாம் அவர்களை சிறுவயதில் இருந்தே பயிற்றுவிக்க வேண்டும்.

**ஒழுக்கக் கேடு**

இன்று இளைஞர்களிடையே காணப்படுகின்ற குழப்பங்களுக்கு மூலகாரணம் அவர்களிடையே சிறு பராயந் தொடக்கம் ஒழுக்க உணர்வை வளர்க்காமையே. தாய் தந்தையரின் நேரடிக் கண்காணிப்பின்கீழ் பிள்ளைகள் வளராமை, பிள்ளைகளின் கைகளில் தேவைக்கு அகதிகமாகப் பணப் புழக்கம் ஏற்படுவதுபோன்ற இன்னோரன்ன குறைபாடுகளே மாணவர்களைக் குழப்ப நிலைக்கு இட்டுச் செல்கின்றன.

**பெற்றோருந்தான்!**

பல பிள்ளைகள் தீய வழியில் செல்வதற்கு அவர்களுக்குத் தெரியாமலேயே அவர்களின் பெற்றோர்கள் காரணமாகின்றார்கள். "தம்பி இப்பொழுது எங்கே போகின்றாய்?" என்று பெற்றோர்கள் மகனிடம் கேட்பதில் தவறே இல்லை. "அது உங்களுக்குத் தேவையில்லாத விடயம்" என்று கூறிவிட்டு விசை வண்டியில் விருட்டென்று செல்பவருக்கு வீட்டில் இரவு உணவுவைக்காது விடுதல் பிழையில்லை.

இதன் காரணமாக "நான் தனித்து வாழப் போகின்றேன்" என்று சொல்லும் மகனுக்குத் "தாராளமாக" என்று கூறுவதில் பிழையில்லை, தவறில்லை. ஆனால் இவற்றை எல்லாம் விட ஆரம்பத்தில் இருந்தே குழந்தைப் பருவத்தில் உங்கள் குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடி அவர்களின் அன்பையும் மதிப்பையும் பெறுவதே காலக்கிரமத்தில் நன்மைதரும்.

**தவறாக வழிநடத்தும் எண்ணம் படையினரிடம்**

தமது இனம்பற்றியவிழிப்புணர்வுகள் எதுவும் அற்றவர்களாக வாழ வேண்டும் என்றுதிட்டமிட்டு அவர்களுட் சிலரை சதிகாரக் கும்பல்கள் பிழையான வழிகளில் வழிநடத்துகின்றார்கள் என்பதை எமது இளைய சமுதாயம் உணர வேண்டும். இவ்வாறான நோக்கம் படையினர் இடையே இருப்பதைச் சில படையினரே வெளிக்கொண்டு வந்துள்ளனர். ஆகவே சூழல் எமது இளைய சமுதாயத்தவர்களுக்கு எதிராகவே இருப்பதை நாம் உணர வேண்டும்.

இவற்றை உடனடியாகவே அவதானித்து கட்டுப்படுத்துவதற்கும் பிள்ளைகளைச் சரியான பாதையில் இட்டுச் செல்வதற்கும் பெற்றோர்கள் பலர் தவறிவிடுகின்றார்கள். இவற்றிலிருந்து எமது இளையோர் பாதுகாக்கப்பட வேண்டுமாயின் அவர்களின் நண்பர்களாலும் உறவினர்களாலும் ஏனைய இளைஞர்களாலுமே முடியும் - என்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைப்பீட மாணவர்களின் நாட்டியாஞ்சலி, தமிழ்நாடு சொல்லருவி பட்டுக்கோட்டை இராஜப்பர் தலைமையிலான 'இன்றைய சூழலில் திருமண வாழக்கை பூந்தோட்டமா? போராட்டமா?' என்னும் தலைப்பில் பட்டிமண்டபம் என்பன இடம்பெற்றன. பூந்தோட்டம் என்னும் பொருளில் பேராசிரியர் தி.வேல்நம்பி இ.சர்வேஸ்வரா ஆகியோரும் போராட்டமா என்னும் பொருளில் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன், ந.ஐங்கரன் ஆகியோர் வாதிட்டனர்.

பாடசாலை மாணவர்களுக்கான சமயத் தமிழ் அறிவுப் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்குச் சான்றிதழும் பணப்பரிசில்களும், வைர விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் நல்லையாதீனம் சிறிலசிறி சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ். சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தா, விருந்தினர்களாக பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் மருத்துவர் ப.நந்தகுமார் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (4)

---

### நாடாளுமன்ற அமர்வைப் புறக்கணித்து

# தமிழர் அரசியல் பிரதிநிதிகள் அ.புரம்நகரில்கூடவேண்டும்

*ஜனநாயகப் போராளிகள் கட்சி வேண்டுகோள்*

வவுனியா, செப்.ஒக்1

தமிழர்களின் நிலப்பரப்பைப் பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வுகளைப் புறக்கணித்து அரசியல் கைதிகள் உணவு ஒறுப்பில் ஈடுபட்டுள்ள அநுராதபுரம் நகரில் ஒன்றுகூட வேண்டும் என்று ஜனநாயகப்போராளிகள் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.துளசி விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

தமிழர் தரப்பில் பல தசாப்த காலமாகப் புரையோடியுள்ள அரசியல் கைதிகள் விடயத்தில் காத்திரமானதும், ஏற்புடையதுமான அரசியல் அழுத்தத்தைப் பிரயோகிக்கும் அவசரமானதொரு நிலை தமிழர்களின் அரசியல் பிரதிநிதிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

தமிழர்களின் உரிமை சார் போராட்டங்களில் இதுவரை அர்ப்பணிக்கப்பட்ட தியாகங்களுக்கு சற்றேனும் குறைவில்லாத தியாகங்களுக்கு உரித்துடையவர்கள் சிறைகளில் பல ஆண்டுகளாகச் சிறையிருப்பவர்கள்.

அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் பல்வேறுபட்ட அரசியல் மற்றும் சட்ட வியாக்கியானங்களைக் கேட்டிருக்கின்றோம். அவை எவையும் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான நியாயப்பாடுகளுக்கு வலுச் சேர்க்கவில்லை. கால இழுத்தடிப்பையே சிங்கள அரசுகள் தொடர்ந்து செய்து வருகின்றன.

தமிழ் அரசியல் பிரதிநிதிகள் எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வைப் புறக்கணித்து அரசியல் கைதிகள் உணவு ஒறுப்பில் ஈடுபடும் அநுராதபுரம் நகரில் கூடி இருந்து கைதிகளின் ஊசலாடும் உயிர்களை விட இலங்கை நாடாளுமன்ற ஜனநாயகம் ஒன்றும் பெரிதல்ல என்பதைப் பன்னாடுகளுக்கும், இலங்கை நீதித்துறைக்கும் கூற வேண்டும். இந்தக் கடப்பாடு தமிழ் அரசியல்ப் பிரதிநிதிகளுக்கு உண்டு.

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின்போது காக்கப்பட்ட மௌனத்தைப்போன்று அரசியல் கைதிகள் விடுதலை விவகாரத்திலும் தமிழ் மக்களின் அரசியல்ப் பிரதிநிதிகள் என்று கூறிக்கொள்வோர் அனைவரும் அமைதி காப்பீர்களாயின் தமிழர் உரிமைகள் மற்றும் அபிலாசைகள் மீது நீங்கள் கொண்டிருக்கும் பற்றுறுதியைக் கேள்விக்குட்படுத்தும் நிலை தமிழ் மக்களுக்கு உருவாகும் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றோம் - என்றுள்ளது. (ற-110)

---

### கிராம மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் வலி.கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவில்

# 72 வேலைத் திட்டங்களுக்கு ரூ.99.55 மில்லியன் ஒதுக்கீடு

அச்சுவேலி,ஒக். 1

வலி.கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவில் கிராம மீள் எழுச்சி "கம்பரெலிய" வேலைத்திட்டத்தின் கீழ் 72 வேலைத்திட்டங்கள் 99.55 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்படவுள்ளன.

பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள 31 கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் தலா மூன்று மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. பிரதேச செயலக பிரிவில் 58 வீதிகள் சீரமைப்பு, 7 குடும்பங்களுக்கு மலசலகூடங்கள், 5 பாடசாலைகளின் விளையாட்டு மைதானங்கள் சீரமைப்பு, 2 கோவில்கள் சீரமைப்பு என்ற வகையில் 72 வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

வேலைத்திட்டங்களின் தெரிவுகள் மற்றும் அதற்கான அனுமதிகள் நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றிருப்பதால் வேலைகள் நடைபெறுவதற்கான முன் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. வீதிகள் சீரமைப்பு பிரதேச சபை ஊடாகவும் ஏனய வேலைகள் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் மூலமாகவும் மேற்கொள்ளப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (4,11)

---

# யாழ். திறந்த பல்கலைக்கு நிகழ்ச்சித்திட்ட உதவியாளரை விண்ணப்பிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 1

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் பணியாற்றுவதற்காக நிகழ்ச்சித்திட்ட உதவியாளருக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இளமாணிப்பட்டத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அத்துடன் தகவல் தொழில்நுட்பத்தில் சிறப்புத் தேர்ச்சி அடைந்திருத்தல் சிறப்புத் தகைமையாகக் கொள்ளப்படும்.

விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட சுயவிபரக்கோவை அடங்கிய விண்ணப்பப் படிவத்தை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் "உதவிப்பணிப்பாளர், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, கொக்குவில்" எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என்று இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் கோரியுள்ளது. (4)

# வடக்கு மக்களுக்கான குடிதண்ணீர்த் தேவை ஒரு வீதமேனும் முழுமைப்படுத்தப்படவில்லை

## மன்னர்கள் அமைத்த குளங்களே உள்ளன

## வலி. தென்மேற்கு தவிசாளர் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், ஒக்.1

ஏராளமான திணைக்களங்கள் அரச பணியாளர்கள் வடக்கு மாகாணத்தில் இருந்தும் மனிதர்களுக்குத் தேவையான குடிதண்ணீரில் ஒரு வீதமான தேவையைக் கூடப் பெற்றுக் கொள்ள முடியாமலேயே உள்ளோம்.

இவ்வாறு வலி. தென்மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் ஜெபநேசன் சுட்டிக்காட்டினார்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் மக்கள் கருத்துக்களைக் கேட்டறியும் கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்றது. அதில் உரையாற்றும்போதே, அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

12 இலட்சத்துக்கும் குறைவான சனத்தொகையைக் கொண்டதாகவே வடக்கு மாகாணம் காணப்படுகிறது. அந்த மக்களுக்கான குடிதண்ணீர் நிலத்தடிநீரை அடிப்படையாகக் கொண்டே எடுக்கப்படுகிறது.

**10 கோடி உயிரினம்**

வடக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையிலே 10 கோடிக்கும் மேற்பட்ட உயிரினங்கள் உள்ளன. அவற்றுக்குரிய குடிதண்ணீரும் நிலத்தடி நீரில் இருந்துதான் எடுத்துக் கொள்ளப்படுகிறது. 10 கோடி உயிரினங்களுக்குத் தேவையான நன்னீர் தேவையுடன் ஒப்பிடும் போது ஒரு வீதமான நன்னீர்த் தேவையே மனிதனுடையதாகின்றது. ஆகவே மனிதனுக்குத் தேவையான அந்த ஒரு வீத நன்னீரை (குடிதண்ணீர்) பெறுவதற்காகத்தான் வடக்கு மாகாணத்திலே அமைச்சுகள், திணைக்களங்கள், பொது அமைப்புகள் என உருவாக்கப்பட்டுள்ளன. ஆனாலும் அந்த ஒரு வீதமான குடிதண்ணீர்த் தேவையானது வடக்கு மாகாணத்தில் உள்ள மக்களுக்கு முழுமையானதாகக் கிடைக்கவில்லை என்பதுதான் கவலை தருகிறது.

**மன்னர்கள் அமைத்தவை**

எங்களுடைய நீர்த்தேவையை அடிப்படையாக வைத்து பாரம்பரியமாக உருவாக்கப்பட்ட நீர் நிலைகளையே நாம் இன்னும் பயன்படுத்துகிறோம். உதாரணமாக பராக்கிரமபாகு மன்னன் உருவாக்கிய 500க்கும் மேற்பட்ட குளங்களைத்தான் இன்றும் தூர்வாரி, சீரமைத்துப் பயன்படுத்துகின்றோம். அப்போது வெறும் மண்வெட்டியையும், சம்மட்டியையும் வைத்தே மன்னர்கள் அந்தக் குளங்களை உருவாக்கினார்கள். நவீன இயந்திரங்கள், பொறியியலாளர்கள் எங்களிடம் இருந்தும் வடக்கு மாகாணத்தில் உள்ள மக்களுக்கான ஒரு வீதக் குடிதண்ணீர்த் தேவையைக் கூட நாம் முழுமைப் படுத்தமுடியாமல் உள்ளோம். 10 கோடி உயிரினங்களுக்கும் சமாந்தரமான முறையில் நீரை வழங்க வேண்டுமானால் நாம் நீரைச் சேமிக்க வேண்டும்.

நீரைத் தேக்கக் கூடிய பல வழிமுறைகள் உள்ளன. ஆனால் அந்த வழிமுறைகள் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. குறிப்பாக 100 வருடங்களாகப் புதிய குளங்கள் உருவாக்கப்படவில்லை, உருவாக்கியதாக அறியவில்லை. ஏற்கனவே மன்னர் காலத்தில் நீர்த் தேவையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட குளங்களையே இன்றும் பயன்படுத்துகின்றோம்.

**புதிய திட்டங்கள் வேண்டும்**

புதிய திட்டங்களை, நீரைச் சேமிப்பதற்கான வழிமுறைகளை இந்தத் திணைக்களங்கள் மேற்கொள்ளவேயில்லை. எனவே மழை நீரைச் சேமிப்பதற்குரிய தனி அலகு ஒன்று தேசிய ரீதியில் உருவாக்கப்பட்டு மழைவீழ்ச்சியைப் பெற்று அதை நிலத்தடி நீராக மாற்றி அனைத்து உயிரினங்களுக்கும் தேவையான நீர்த்தேவையை முழுமை செய்யும் திட்டமாக அரசு கொள்கைத் திட்டங்களை உருவாக்க வேண்டும். வடக்கு மாகாணத்திலே வீதிகள் அமைக்கப்பட்டுள்ளன. அந்த வீதிகளில் உள்ள பாலங்களில் நன்னீர்த் தடுப்பணைகள் எவையும் அமைக்கப்படவில்லை. கிளிநொச்சியில் பரந்தன் தொடக்கம் பூநகரி வரை இருக்கின்ற 35 கிலோமீற்றர் வீதியில் 125 பாலங்கள் உள்ளன. அந்தப் பாலங்களில் ஒன்றைத் தவிர மற்றைய எவற்றிலும் நன்னீர்த் தடுப்பணைகள் இல்லை. இதுவரை வடக்கு மாகாணத்தில் வறண்ட பிரதேசமாக பூநகரியும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அந்தப் பாலங்களில் ஒரு சிறிய தடுப்பணைகளை அமைத்தால் அந்தப் பிரதேசத்தில் ஏராளமான நன்னீர் சேமிக்கப்படும்.

நாங்கள் மனிதர்களாகையால் எங்களுடைய நீர்த் தேவையை இந்தத் திணைக்களங்கள் ஊடாக இப்படியான கூட்டங்கள் ஊடாகக் கதைத்துக் கொண்டிருக்கிறோம். அதேபோல் விலங்குகள், பறவைகள், தாவரங்கள் உள்ளிட்ட அனைத்து உயிரினங்களுக்குமான தேவைகளையும் கதைக்க வேண்டும். அதையும் இந்தப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ஆராய வேண்டும் - என்றார்.

(4,21)

## வருடாந்தம் இலங்கைக்கு 2 மில்லியன் சுற்றுலாப் பயணிகள்

யாழ்ப்பாணம், ஒக். 1

வருடாந்தம் சுமார் 2 மில்லியனுக்கும் மேற்பட்ட உல்லாசப் பிரயாணிகள் நாட்டுக்கு வருகின்றனர் என்று சுற்றுலாத்துறை அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வி. சிவஞானசோதி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வரும், உலக சுற்றுலாத் தினச் சிறப்புநிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார். நாட்டின் சுற்றுலாத்துறை கடந்த மூன்றரை வருடங்களில் பெருமளவில் முன்னேற்றம் அடைந்துள்ளது. அரசு முன்னெடுத்து வரும் சிறப்புச் செயற்றிடம் காரணமாக அந்நியச் செலாவணியாக 3 ஆயிரத்து 500 மில்லியன் அமெரிக்க டொலரைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு இதன் மூலமாக உருவாக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (4)

## உதவாத இனிப்புகள் தீ வைத்து அழிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 1

வலி.வடக்கு கீரிமலைப் பகுதியில் தென்னிலங்கை வர்த்தகர்களின் வியாபார நிலையங்களில் பாவனைக்கு உதவாத பல்லாயிரம் ரூபா பெறுமதியான இனிப்புப் பண்டங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டன. அவற்றைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தீ வைத்து அழித்தார். தென்னிலங்கை மீனவர்கள் வார நாள்களில் தமது இடங்களுக்குச் சென்று வாரஇறுதி நாள்களில் இங்கு வந்து தாம் தம்முடன் எடுத்துவரும் இனிப்புப் பண்டங்களை விற்பனை செய்கின்றனர். அவை தரமானவை என்று கருதி ஏராளமானவர்கள் வாங்கி உட்கொண்டுவந்துள்ளனர். இந்த நிலையில், சில நாள்களுக்கு முன்னர், தமது விற்பனைப் பண்டங்களைத் தமக்கான கொட்டகைகளில் வைத்து விட்டு சொந்த இடங்களுக்கு சென்றபோது கட்டாக்காலி நாய்கள் பண்டங்களைச் சேதமாக்கியுள்ளன என்று அந்தப்பகுதிக்குரிய பொதுசுகாதாரப் பரிசோதகருக்குத் தெரிவித்துள்ளனர். அங்கு சென்று அவற்றை ஆராய்ந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சேதமாக்கப்பட்ட .பொருள்களுடன் பாவனைக்கு உதவாத ஒரு தொகை இனிப்புப் பண்டங்கள் இருப்பதையும் பரிசோதனையில் கண்டறிந்தார். அதுபற்றி குறித்த வியாபாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டு பாவனைக்குதவாத நிலையிலிருந்து அவை தீ வைத்து அழிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. "குறித்த வர்த்தகர்கள் தமது பொறுப்பற்ற செயலை ஏற்றுக்கொண்டனர். அதனையடுத்து அங்கு காணப்பட்ட பாவனைக்கு உதவாத இனிப்புப் பண்டங்கள் கைப்பற்றப்பட்டு எரியூட்டப்பட்டன" என்று பிரதேச பொதுச்சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார். அழிக்கப்பட்ட பண்டங்கள் 50ஆயிரம் ரூபாவுக்கும் மேற்பட்டவை என்று தெரிவிக்கப்பட்டது. (4,114)

## தென்மராட்சிப் பாடசாலைகளில் டெங்கு பரவும் நீரேந்து பொருள்கள்

### ஏராளம் அடையாளங்காணப்பட்டன

சாவகச்சேரி, ஒக்.1

பாடசாலைகள், கட்டட அமைப்புப் பணி இடம்பெறும் பகுதிகளில் நீரேந்து பொருள்களில் டெங்குக் குடம்பிகள் காணப்பட்டமை தெரியவந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தால் நடத்தப்படும் டெங்கு ஒழிப்பு வார செயற்பாடுகளின் போது, நடத்தப்பட்ட பரிசோதனைகளில் இவை தெரியவந்தன.

கடந்த 26 ஆம் திகதி ஆரம்பமான .தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தில் இந்தமுறை பாடசாலைகள் மற்றும் கட்டடங்கள் அமைக்கப்படும் பகுதிகள் தளங்கள் பார்வையிடப்பட்டன. கடந்த 28 ஆம் திகதி பாடசாலைகளிலும் 29 ஆம் திகதி கட்டட அமைப்புத் தளங்களிலும் டெங்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

பெரும்பாலான பாடசாலைகளில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய நீரேந்து பொருள்கள் பெருமளவில் காணப்பட்டன. குழுவில் சென்ற பொலிஸார் பாடசாலைகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமெனத் தெரிவித்தனர். அவ்வாறு காணப்பட்ட 40 பாடசாலைகளின் அதிபர்கள், வலயக் கல்வி அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டு அறிவுறுத்தல்கள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் வழங்கப்பட்டன.

மழைகாலம் ஆரம்பிக்கவுள்ளதால் மாணவர்களின் நலன்கருதி பாடசாலைகளில் காணப்படும் நீர் ஏந்து பொருள்களைப் பாடசாலைச் சமூகத்தினர் மூலமாக துப்புரவுப் பணிகளைச் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

அடுத்தமுறை டெங்குப் பரிசோதனை நடைபெறும் வேளையில் இவ்வாறான நிலை காணப்படின் பாடசாலை நிர்வாகத்துக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்துள்ளனர்.

கட்டடங்கள் அமைக்கப்படும் இடங்களில் நடத்தப்பட்ட டெங்குப் பரிசோதனையில் பெரும்பாலான இடங்களில் டெங்கு நுளம்பின் குடம்பிகளைக் கொண்ட நீர் ஏந்து பொருள்கள் காணப்பட்டுள்ளன.

அரச திணைக்கள அலுவலகங்கள், தனியார் கட்டடங்கள் போன்றவற்றில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன, பெரும்பாலான இடங்களில் டெங்கு உற்பத்தியாகக்கூடிய இடங்களாகக் காணப்பட்டன. நீர்ஏந்து பொருள்களை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டுமென்று கட்டடங்களை அமைப்போருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று சுகாதாரத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

(4,9,159)

## சிறுநீரக நோயாளர்களுக்கான கொடுப்பனவை அதிகரியுங்கள்

### அமைச்சர் வஜிர அபேவர்த்தனவிடம் மாவட்டச் செயலர் வேதநாயகன் கோரிக்கை

யாழ்ப்பாணம். ஒக். 1

யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மைக்காலமாகச் சிறுநீரக நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அவர்களுக்குக் கொடுப்பனவுகளை வழங்க நடடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தனவிடம் யாழ்ப்பாண மாவட்டச்செயலர் நா.வேதநாயகன் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் பிரதேச செயலர்கள் மற்றும் திட்டமிடல் அதிகாரிகளுக்கும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தனவுக்கும் இடையில் அதிகாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலான கலந்துரையாடல் மாவட்டச்செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலிலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது,

எமது மாவட்டத்தில் அமைச்சின் ஊடாக சிறுநீரக நோயாளிகளுக்கு மாதாந்த உதவித் தொகை வழங்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் அண்மைய காலங்களில் மட்டும் போதனா மருத்துவமனையில் 350 சிறுநீரக நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். இவ்வாறு நோயாளர்கள் சடுதியாக அதிகரிக்க எமது நிலத்தடி நீர் மாசடைவே காரணம் என்று கூறப்படுகின்றது. எனவே எமது மாவட்டத்தில் சிறுநீரக நோயாளிகளாக இனம் காணப்பட்டுக் கொண்டிருக்கும் நோயாளிகளுக்கும் அமைச்சின் ஊடாக வழங்கப்படும் உதவித் தொகையை வழங்க வேண்டும் என்று கோரினார்.

அதுமட்டுமன்றி, யாழ்ப்பாண மாவட்டத்தில் 5 ஆயிரம் மாற்றுத் திறனாளிகள் உள்ளனர். அவர்களுக்குத் தேவையான உதவிகள் வழங்க வேண்டியுள்ளன என்பதையும் சுட்டிக்காட்டினர்.

இதன்பின்னர் கருத்துத் தெரிவித்த அமைச்சர் வஜிர,

சமூக சேவைகள் அமைச்சின் ஊடாக வழங்கப்படும் உதவித் திட்டங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும். மாற்றுத் திறனாளிகள் தொடர்பான விவரங்களைப் பெற்றுள்ளோம். அவர்களுக்கு இந்த வருட இறுதிக்குள் நல்லதொரு முடிவைப் பெற்றுக்கொடுப்பேன் என்று உறுதியளித்தார்.

(4,8)


# நாடு முழுவதும் விபத்துகளால் 8 மாதங்களில் 890 பேர் இறப்பு




கொழும்பு, ஒக். 1
நாடுமுழுவதும்கடந்தஎட்டுமாதங்களில்இடம்பெற்ற விபத்துகளில் ஆயிரத்து 890 பேர் உயிரிழந்துள்ளனர் என்று
பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.
உயிரிழந்தவர்களில் 570 பாதசாரிகள் உள்ளடங்குகின்றனர்.
மோட்டார் வாகனங்களில் பயணித்த 123 பேரும், சாரதிகள் 151பேரும், பயணிகள் 259 பேரும், ஈருருளியில் பயணித்த 144 பேரும் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் விடுத்திருக்கும் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# இரண்டாவது குழந்தைப் பருவத்திலுள்ள முதியோரைப் பராமரிப்பது எமது பொறுப்பு

## உலக சிறுவர் மற்றும் முதியோர் தினச் செய்தியில் ரணில் தெரிவிப்பு



**கொழும்பு, ஒக். 1**
**மனிதனிடம் காணப்படும் மிகவும் உன்னதமான வளம் பிள்ளைகள் என்பதில் இரு கருத்துகளுக்கு இடமில்லை. அவர்களது வாழ்வை மேம்படுத்துவதற்கு எந்தவொரு அர்ப்பணிப்பையும் செய்யப் பெற்றோர் தயாராக உள்ளனர். முழு வாழ்வையும் தமது பிள்ளைகள் மற்றும் சமூகத்துக்காக அர்ப்பணித்த இரண்டாவது குழந்தைப் பருவத்தில் வாழ்வோர் எனக் கருதப்படும் முதியோரையும் அவ்வாறே கவனித்துப் பராமரிப்பது எமது பொறுப்பு.**

இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.
பன்னாட்டு முதியோர் தினம் தொடர்பில் அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது,
"துணிச்சலுடன் முன்னோக்கிப் பயணிக்க சிறுவர்களுக்குப் பக்கபலமாக இருங்கள்" என்பது உலக சிறுவர் தினக் கருப்பொருளாகக் காணப்படும் போது,"மனித உரிமைகளுக்காக முன்னின்ற மூத்த குடிமக்களை மதிப்பளிப்போம்" என்பது உலக முதியோர் தினக் கருப்பொருளாகக் காணப்படுகிறது.
சிறுவர்கள் மற்றும் முதியோர் தொடர்பாக எமது கடமைப் பொறுப்பு யாது என்பதைப் புதிதாக சிந்திப்பதற்கு இந்தக் கருப்பொருள்கள் எம்மை ஊக்குவிக்கின்றன.
ஒருபுறத்தில் போட்டித்தன்மை வாய்ந்த கல்வி ஒழுங்கின் பிடியில் குழந்தைப் பருவம் சிக்கியுள்ளதுடன், மறுபுறத்தில் நவீன தொடர்பாடல், தொழிநுட்ப முன்னேற்றம் சிறுவர் உலகை ஆக்கிரமித்து வருகிறது. மதுபானம், போதைப் பொருள்களின் அச்சுறுத்தல், சிறுவர் முறைகேடுகள், சிறுவர்களைத் தவறான வழியில் பயன்படுத்தல் போன்றனவும் சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறுகின்றன. இந்த எல்லா வகையான தடைகளின் மத்தியிலும் வாழ்வை ஒழுங்கமைப்பதற்கு வளர்ந்தோரான எமது உதவியும் வழிகாட்டலும் பிள்ளைகளுக்குக் கிடைக்க வேண்டியுள்ளது.
வேறுபட்ட சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் மத்தியில் ஆதரவற்றவர்களாகமாறும் வயதான முதியோரைக் கவனித்துப் பராமரிப்பதற்கு மனிதாபிமான ரீதியில் பங்களிக்க வேண்டும். பன்னாட்டு ரீதியாக முதியோர் பராமரிப்புச் சேவையிலிருந்து அறிவு மற்றும் அனுபவங்களைப் பெற்றுக்கொண்டு அதற்கு விரிவான வேலைத்திட்டமொன்றைச் செயற்படுத்துவதும் அத்தியாவசியமானது.
உலக சிறுவர் முதியோர் தினத்தைக் கொண்டாடும் இன்றைய தினத்தில் சிறுவர் உலகைப் பாதுகாப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்கும், வயதான முதியோருக்குக் கிடைக்க வேண்டிய அன்பு, கண்ணியம், அவதானத்தை வழங்கவும் திடசங்கற்பம் பூணுவோம் - என்றுள்ளது.
(4)



# வீதியைச் சீரமைக்கவில்லையென்று வீதியில் ரயர் கொழுத்தி ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஒக். 1
பொகவந்தலாவயில் கெம்பியன் நகரில் இருந்து இரானிகாடு வரையான முதன்மை வீதி சுமார் 10வருடகாலங்களுக்குமேலாகச் சீரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.
அதனைச் சீரமைத்துத் தரவில்லை என்று கூறி எதிர்ப்புத் தெரிவித்து, நேற்றுப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.
வீதிஅபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான குறித்த வீதி 8 கிலோமீற்றர் நீளமுடையது.
அதைச் சீரமைப்பதாகக் கூறி இரண்டு தடவைகள் அடிக்கல் நட்டும் மேற்கொண்டு எதுவும் நடக்கவில்லை.
அதனால் மதியம் 12மணி தொடக்கம் 2மணிவரை வீதியை மறித்து ரயர்களை எரித்து பிரதேசமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்
இந்த வீதியைச் சீரமைக்கச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அமைச்சர்களும் நடவடிக்கை எடுக்காவிட்டால் அடுத்த கட்ட நடவடிக்கையாக அம்பகமுவ பிரதேச செயலாளர் காரியாலயத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று பிரதேச மக்கள் குறிப்பிட்டனர். (4)

# மலர்ந்த குடிமக்களின் வாழ்க்கைக்கு தங்கமுலாம் பூசுகிறது சிறுவர் பருவம்

## அரசதலைவர் மைத்திரி வாழ்த்துச் செய்தி

கொழும்பு, ஒக். 1
சராசரி மனிதனுக்கு அவனது வாழ்நாள் முழுவதிலும் செலவிடுவதற்குத் தேவையான அறிவைச் சேகரித்துத் தரும் சிறுவர் பருவமானது, மலர்ந்த குடிமகனின் வாழ்வுக்கு தங்கமுலாம் பூசும் வாழ்க்கைப் பருவம் என்று குறிப்பிடலாம்.
இவ்வாறு அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
பன்னாட்டுச் சிறுவர் முதியோர் தினத்தையொட்டி அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,
சிறுவர் பராயம் என்னும் திரைப்படத்தை இரண்டாவது முறையாகவும் திரையிட இயலாதென்பது ஒரு பிரபலத் தத்துவக் கூற்று.
வியக்கத்தக்க வர்ணனைகளையும் தெய்வீக நாதங்களையும் கொண்டு மெருகூட்டப்பட்ட சிறுவர்களின் உலகத்தை எட்டிப் பார்ப்பதற்கு பெரியவர்களாகிய எமக்கு பன்னாட்டுச் சிறுவர் தினம் பெரிய வாய்ப்பாக அமைகின்றது. எட்டிப்பார்த்த போதிலும் எம்மால் ஒருபோதும் அணுக முடியாதவாறு சிறுவர் பராயம் கடந்து வந்திருந்தது. அந்த ஞாபகங்களால் ஈரமாகிய இதயத்துடன் சிறுவர்களை நோக்கவும் எம்மைப் புரிந்து கொள்ளவும் பன்னாட்டுச் சிறுவர் தினம் எம்மை அழைக்கிறது என்பதே எனது நம்பிக்கை.
'வீரியத்துடன் முன்னோக்கி செல்க - சிறுவர்களைப் பலப்படுத்துக' என்ற தொனிப்பொருளிலான இந்த வருட சிறுவர் தினக் கொண்டாட்டங்கள் அந்தப் பொறுப்பை மீண்டும் மீண்டும் நினைவூட்டுவதாகவே உள்ளன.

**முதியோர்**

அறிவும் அனுபவமும் அவற்றால் பக்குவமடைந்த வாழ்க்கை பற்றிய புரிந்துணர்வுடன் உலகை நோக்கக்கூடிய ஆற்றல் முதுமையின் வரப்பிரசாதமே.
மனிதர்களாக நாம் அனுபவிக்கும் உரிமைகளை எமக்காக வென்றெடுத்தவர்களை எமக்காக வென்றெடுத்தவர்களும் எமது சமூகத்திலுள்ள மூத்த குடிமக்களே.
உலக சனத்தொகையில் அதிகரித்துவரும் மூத்தோர் விகிதத்தை மானிட சமூகத்தின் மேம்பாட்டுக்கு உபயோகிக்கவும் புதிய வழிமுறைகளைக் கண்டறியவும் மூத்தோரின் அனுபவங்களைப் பெறவும் ஏதுவாக அமையும். இவை இளையோருக்கும் முதியோருக்கும் இடையில் ஆக்கபூர்வமான உறவைக் கட்டியெழுப்ப முடியும் - என்றார். (4)

# நன்மையான விடயங்களைச் செய்ய கட்சி பேதங்களெதுவும் பாராதீர்கள்

## பிரதியமைச்சர் ஹர்ச டி சில்வா கோரிக்கை

கொழும்பு, ஒக். 1
எந்த அரசாக இருந்தாலும் அந்த அரசு செய்யும் நன்மையான விடயத்தை வரவேற்று அதனைச் செயற்படுத்த கட்சி பேதங்கள் இன்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இவ்வாறு பிரதியமைச்சர் கலாநிதி ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.
'சுவசெரிய அம்பியூலன்ஸ் சேவை'யை விரிவுபடுத்தும் வகையிலான நிகழ்வு அனுராதபுரத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே இவ்வாறு கூறியுள்ளார்.
'1990 சுவசெரிய அம்பியூலன்ஸ் சேவை'யை ஆரம்பிக்கும் போது பல்வேறு தரப்பினர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தனர். ஆர்ப்பாட்டங்களையும் நடத்தினர்.
எனினும் இந்தச் சேவை மூலமாக ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட நோயாளிகள் பயனடைந்துள்ளனர் என்று ஹர்ச டி சில்வா மேலும் குறிப்பிட்டுள்ளார். (4)

# பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் சி.ஐ.டி விசாரணை நடத்தும்

கொழும்பு, ஒக். 1
பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக டி சில்வாவிடம் அடுத்த சில தினங்களில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் வாக்குமூலம் பெறவுள்ளனர் என்று பிரதியமைச்சர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.
பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக டி சில்வாவுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுத் தொடர்பில் வெளிப்படையான வகையில் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.
அரசதலைவர் மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோரைக் கொலை செய்யும் சதித்திட்டம் தொடர்பில் ஊழல் எதிர்ப்புப் படையணியின் பணிப்பாளர் நாமல் குமார வெளியிட்ட தகவல் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை நடத்தி வருகிறது.
இந்த விசாரணைகள் தொடர்பாகச் சட்டம் மற்றும் ஒழுங்கு பிரதியமைச்சர் நளின் பண்டாரவிடம் கேட்ட போதே அவர் இந்தத் தகவல்களைத் தெரிவித்துள்ளார். (4)

# வறட்சியால் மூடப்பட்டிருந்த ரஜரட்ட பல்கலைக் கழகத்தின் பீடங்கள் இன்று திறக்கப்படும்

கொழும்பு ஒக். 1
வறட்சி காரணமாக மூடப்பட்டிருந்த ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் சில பீடங்கள் இன்று மீண்டும் திறக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
முகாமைத்துவம், தொழில்நுட்பம் மற்றும் பிரயோக விஞ்ஞானம் ஆகிய பீடங்களின் கல்வி நடவடிக்கைகளே இன்று ஆரம்பமாகவுள்ளன.
இதனைத்தவிர, சமூக விஞ்ஞானம், மனித வளம் ஆகிய பீடங்கள், பரீட்சைகளுக்காக நாளைமறுதினம் திறக்கப்படவுள்ளன.
இதனால், விடுதி வசதிகளைக் கொண்ட மாணவர்களை உடனடியாக பல்கலைக்கழக விடுதிக்குச் சமுகமளிக்குமாறு பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது. (4)

கர்தினால் ஆண்டகை சம்பந்தமாக

## நான் கூறிய கருத்து தனிப்பட்டதே அதில் உறுதியாகத்தான் உள்ளேன்

என்கிறார் மங்கள



கொழும்பு, ஒக். 1

கத்தோலிக்கத் திருச் சபையின் பேராயர் கர்தினால் மெல் கம் ரஞ்சித் ஆண்டகை சம்பந்தமாகத் தான் கூறிய கருத்து தனது தனிப்பட்ட கருத்துஎன்றும், அந்த நிலைப்பாட்டில் தான் தொடர்ந்தும் இருப்பதாகவும் நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

மாத்தறையில்நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களிடம் பேசும்போதே அவர் இவ்வாறுகூறியுள்ளார்.

மனிதஉரிமைகளுக்காகப் போராடவே நான் அரசியலுக்கு வந்தேன். மனித உரிமை தேவையற்றதுஎன்றுஎவராவது கூறுவார்கள் எனில் அதனை அருவருப்புடன் நிராகரிக்கின்றேன். கர்தினால் சார்பில் குரல் கொடுப்பவர்கள்போதைப்பொருள்விற்பனையாளர்களே. இது அவருக்குச் செய்யும் அவமரியாதை என்றும்அமைச்சர்மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமைகள் தொடர்பாகக் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை வெளியிட்ட கருத்துத் தொடர்பில் அமைச்சர்மங்களசமரவீர தனதுஎதிர்ப்பைடுவிட்டரில் பதிவு செய்திருந்தார். இதற்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லங்சா வர்ணகுலசூரிய கருத்துவெளியிட்டிருந்தார். (4)

'என்ரப் பிறைஸ் சிறிலங்கா'

# கடன் திட்டத்துக்கு ஆதரவளிக்காத வங்கி அதிகாரிகள் மீது நடவடிக்கை

நிதி அமைச்சர் மங்கள கடும்பிடி



**கொழும்பு, ஒக். 1**
**'என்ரப் பிறைஸ் சிறிலங்கா' அபிவிருத்தித் திட்டத்துக்கு ஆதரவு வழங்காத அரச வங்கி அதிகாரிகளுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.**

15 லட்சம் ரூபா வரையான கடனுக்கு எவருமே பிணை நிற்கத் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மாத்தறை பௌத்த விகாரையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

தொழிற்றுறையில் புதிதாக ஈடுபடுவோருக்கு அரசு முன்வைத்துள்ள கடன் திட்டத்தை உரிய முறையில் வழங்குவதில் அரச வங்கி பின்வாங்குவதாக இந்த நிகழ்வில் கலந்துகொண்ட தொழிலாளர்கள் அமைச்சரிடம் முறையிடப்பட்டனர். அதன்போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். வங்கியில் புதிதாகக் கடன் பெறவரும் இளையோருக்குக் கடன்வழங்காமல்திருப்பியனுப்பவே வங்கி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கின்றனர். அவசியமற்ற கேள்விகளைத் தொடுத்து அவர்களைத் திருப்பி அனுப்பி விடுகின்றனர்.

அரசு முன்வைத்துள்ள இந்தப் புதிய கடன் திட்டத்தில் 15 லட்சத்துக்குக் குறைவாகக் கடன் பெறுபவர்களுக்கு யாரும் பிணை நிற்கத் தேவையில்லை. எந்த வங்கியிலாவது அவ்வாறு கோருவதாயின் எமக்கு அறிவியுங்கள். அவ்வாறு கேட்டவரின் பெயர், வங்கியின் பெயர், எந்தக் கிளை என்பதை அறிவியுங்கள்.

'என்ரப் பிறைஸ் சிறிலங்கா' திட்டத்தின் அவசர தொடர்பு இலக்கம் 2015 ஆகும் - என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (4)

சக பணியாளரைக் கொன்றோரென

## சிப்பாய்கள் இருவர் பணி இடைநீக்கம்

கொழும்பு, ஒக். 1

அம்பேபுஸ்ஸ இராணுவ முகாமில் பணியாற்றிய இராணுவச் சிப்பாய் கொலைக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சக சிப்பாய்கள் இருவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இராணுவ சிங்க ரெஜிமேண்டின் ஆரம்ப விசாரணை நீதிமன்றம் மற்றும் இராணுவ பொலிஸாரின் விசாரணையின் பின்னர் அவர்கள் இருவர் தொடர்பிலும் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்தார். விசாரணைகளுக்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகள் பொலிஸாரிடம் பெற்றுக் கொள்ளப்படவுள்ளன. குறித்த இருவரினதும் சம்பளமும் இடைநிறுத்தப்பட்டுள் ளது.

கடந்த 21 ஆம் திகதி அதிகாலையில் குறித்த சிப்பாய் ஆயுதங்களால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டிருக்கிறார்.

அதே முகாமில் பணியாற்றிய இரண்டு சிப்பாய்களே கடந்த 25ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளனர். கொலை செய்வதற்காகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் கத்தியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொலையின் பின்னர் காணாமல் போயிருந்ததாகக் கூறப்படும் ரி 56 ரக துப்பாக்கியும் கண்டறியப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4)

## ராஜபக்சவினர் ரூபாவை விடவும் பெறுமதி இழந்தே போயுள்ளனர்!

கிண்டலடிக்கிறார் அமைச்சர் அகிலவிராஜ்

கொழும்பு, ஒக். 1

ரூபாவை விட ராஜபக்சவினர் பெறுமதி இழந்துள்ளனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரான அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு கட்டுபொத்த பொலிஸ் நிலையத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. அதில் கலந்துக்கொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு கூறியுள்ளார்.

1994ஆம் ஆண்டு தற்போதைய தலைமை அமைச்சர் அரசைக் கையளிக்கும்போது ஒரு டொலரின் பெறுமதி 49 ரூபாவாக இருந்தது. 2001ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்க ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்போது டொலரின் பெறுமதி 93 ரூபாவாக அதிகரித்திருந்தது. ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் ஆட்சி அதிகாரத்தை 2004ஆம் ஆண்டு கையளிக்கும்போது டொலரின் பெறுமதி 96 ரூபாவாக இருந்தது. மீண்டும் 2015ஆம் ஆண்டு ஆட்சியைப் பொறுபேற்கும்போது டொலரின் பெறுமதி 144 ரூபாவாக அதிகரித்திருந்தது.

2005ஆம் ஆண்டு அரசதலைவராகப் பதவிக்கு வந்த மகாராஜா என்று அழைக்கப்பட்ட மகிந்த ராஜபக்ச 2015ஆம் ஆண்டு பெறுமதி இழந்து தேர்தலில் தோற்றுப் போனார். இதன் பின்னர் தலைமை அமைச்சர் பதவியைப் பெறவும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெறவும் முயற்சித்தார். எனினும் அவர் பெறுமதி இழந்து போனார். இவ்வாறு பார்க்கும்போது ரூபாவை விட ராஜபக்சவினர் கடந்த காலங்களில் பெறுமதி இழந்து போய்விட்டனர் என்று அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் குறிப்பிட்டுள்ளார். (4)



## அடுத்த அரசதலைவர் தேர்தலில் ஞானசார தேரரும் வேட்பாளர்?

கொழும்பு, ஒக். 1

எதிர்வரும் அரசதலைவர் தேர்தலில் பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் போட்டியிட உள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

நீதிமன்ற அவதூறுக் குற்றச்சாட்டில் சிறைத் தண்டனை அனுபவித்துவரும் ஞானசார தேரருக்குப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டால், அவரை அரசதலைவர் தேர்தலில் போட்டியிடச் செய்ய 2 முக்கிய அமைச்சரவை அமைச்சர்கள் முயற்சித்து வருகின்றனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசதலைவர் தேர்தல் நெருங்கும்போது, ஞானசார தேரருக்குப் பொது மன்னிப்பு வழங்குமாறு இந்த அமைச்சர்கள் அரசலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுக்க உள்ளனர் என்றும் தெரியவருகிறது.

அதன் பின்னர் ஞானசார தேரர் அல்லது பொதுபல சேனாவிலிருந்து வேட்பாளர் ஒருவரை அரசதலைவர் வேட்பாளராகக் களமிறக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சவுக்குக் கிடைக்கக் கூடிய சிங்கள பௌத்த வாக்குகளைச் சிதறடிக்கும் நோக்கில் இந்த முயற்சி எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்தத் திட்டத்துக்கு ஞானசார தேரர் இதுவரையில் இணக்கம் தெரிவிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பொது மன்னிப்பு வழங்கப்பட்ட எந்தவொரு நபரும் தேர்தலில் போட்டியிட முடியும் என்றும், அதற்குத் தடை கிடையாது என்றும் கொழும்புப் பல்கலைக்கழக சட்ட பீட மூத்த விரிவுரையாளர் பிரதீபா மஹானாம ஹேவா தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகா, எஸ்.பி.திஸாநாயக்க போன்றவர்கள் அரசதலைவரின் பொது மன்னிப்பின் பின்னர் தேர்தலில் போட்டியிட்டனர் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (4)

# இறக்குமதியைக் குறைப்பதால் மட்டும் டொலரின் பெறுமதி கட்டுக்குள் வராது

அனுர பிரியதர்ஷன எம்.பி. கூறுகிறார்

இறக்குமதிச் செலவீனங்களைக் குறைப்பதன் ஊடாக மாத்திரம் டொலரின் பெறுமதி அதிகரிப்பைக் கட்டுப்படுத்த முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ஷன இதனைத் தெரிவித்துள்ளார்.

சில பொருள்களின் இறக்குமதிகளைக் குறைக்குமாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நிதியமைச்சர் மங்கள சமரவீரவுக்கு ஆலோசனைகள் வழங்கியுள்ளார். அது குறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அனுர பிரியதர்ஷன இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இறக்குமதியைக் குறைப்பதைப் போன்று ஏற்றுமதியை அதிகரிப்பதற்



கான ஊக்குவிப்புக்களையும் அரசு மேற்கொள்ளவேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, ரூபாவின் வீழ்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்காக நேற்றுமுன்தினம் நள்ளிரவு தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் சில நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

இதற்கமைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வாகன இறக்குமதி, அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் செயற்பாடு ஒரு வருட காலத்துக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

நிதி மற்றும் ஊடக அமைச்சு நேற்றுமுன்தினம் வெளியிட்டிருந்த அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சுகள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் மன்றங்களுக்கான வாகனங்களைக் கொள்வனவு செய்யும் செயற்பாடுகள் மீள் அறிவித்தல் வழங்கும் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வாசிப்பை நேசிப்பீர்

வாசிப்பு மாதம் இன்று ஆரம்பமாகிறது. இற்றைக்குப்பத்து வருடங்களுக்குமுன்னர் எம்மத்தியில் இருந்த வாசிப்புப் பழக்கம் இன்று உள்ளதா என்று வினவினால், அதற்குரிய பதில் வருத்தப்படக்கூடியவகையில்மட்டுமேஅமையும். முக்கிய ஆவணமாக, தேடலின் பொக்கிசமாக ஒருகாலத்தில் இருந்த நூலகங்கள் இன்று தேடுவாரற்ற நிலைக்கு படிப்படியாகத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பது மறைக்கப்பட முடியாத, கசப்பான உண்மை. ஆக, நாம் படிப்படியாக இழந்துவரும் 'வாசிப்பு' என்னும் உன்னத பழக்கத்தை மீட்டெடுக்க அனைத்துத் தரப்பினரும் முன்வர வேண்டிய மாதமிது.

இந்த வருடத்தின் வாசிப்பு மாதம் 'இனங்களுக்கிடையில்புரிந்துணர்வினை ஏற்படுத்துவதற்கானவாசிப்பு' என்னும் தொனிப் பொருளை மையமாகக் கொண்டு கடைப்பிடிக்கப்படுகிறது. தேசிய நூலக ஆவணவாக்கல் சபையால் இந்தச் செயற்றிட்டத்துக்காக நீண்டதொரு அறிவுறுத்தல் நூலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. நூலகத்தில் உள்ள புத்தகங்களின் விவரங்களைக் காட்சிப்படுத்தல், மாணவர்கள், சிறுவர்களிடையே வாசிப்பை ஊக்குவித்தல், நூலக அங்கத்தவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் என்பனவற்றை ஒவ்வொரு நூலகமும் செயற்படுத்த வேண்டும் என்பது தான் நூலகவாக்கல் சபையின் நீண்ட அறிவுறுத்தலின் சாராம்சமாக அமைகிறது. வாசிப்பை ஒவ்வொரு நூலகமும் இளம் சமுதாயத்தினரிடையே அதிலும் குறிப்பாகமாணவர்களிடையேஊடுருவச்செய்யவேண்டும் என்பதைத்தான்அழுத்தம்திருத்தமாகவலியுறுத்தியுள்ளது தேசிய நூலக ஆவணவாக்கல் சபை.


சுற்றறிக்கை அனுப்பிவிட்டு தன் கடமை முடிந்தது என்று தேசிய நூலக ஆவணவாக்கல் சபை இருந்து விடக்கூடாது. நாட்டிலுள்ள அதனைத்துநூலகங்களும் தத்தமது கடமைகளை செவ்வனே செய்கின்றனவா என்பதை அது உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இதுவிடயத்தில்சிறந்த செயலாற்றும்நூலகங்களுக்கு உரியமதிப்பையும்அடையாளத்தையும்அந்தச்சபை வழங்க வேண்டும். அதேபோன்று திறனற்ற செயற்பாட்டை வெளிப்படுத்தும் நூலகங்களுக்கு எதிராகவும்கடும்நடவடிக்கைளைதேசியநூலக ஆவணவாக்கல் சபை எடுக்க வேண்டும்.

அதேநேரம், வெறுமனே நூலகங்களிடம் மட்டும் பாரப்படுத்திவிடும் விடயமல்ல இது. அனைத்தாண்டி அனைத்துத்தரப்பினரும்முழுமூச்சாகஈடுபட வேண்டிய விடயம்தான் இது. இது பாரதூரமானது. வாசிப்பு மாதத்தின் கனதித் தன்மையை, அதன் அவசியத்தை பலர் உணராதுள்ளனர். இது துயரத்திலும் பெருந்துயரம். அவர்கள்மட்டில்பெரும்விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் தொண்டு நிறுவனங்கள் மேற்கொள்ளவேண்டும். அதுவும் எமது அடுத்தசந்ததியை வாசிப்பை நோக்கி தள்ளிவிட ஒவ்வொருவரும் திடசங்கற்பம் பூணுவோம்.

''புத்தகங்கள் என்ற அற்புத உலகத்தின் வாசல்களை அவனுக்குத் திறந்துகாட்டுங்கள்'' அமெரிக்காவின் முன்னாள்அதிபர்ஆபிரகாம்லிங்கன்தனதுமகனுக்குக் கற்பித்த ஆசிரியருக்கு எழுதிய பிரசித்திபெற்ற கடிதத்தில் இடம்பெற்றுள்ள ஒரு வாக்கியம்தான் இது. பன்னாட்டுவாசிப்புமாதமான இந்தமாதத்தில்அனைத்துப் பெற்றோரும், ஆசிரியர்களும், பெரியவர்களும் ஆபிரகாம்லிங்கன் ஆசிரியருக்குப் பணித்ததை தாமும் நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ளார்கள். பொறுப்புணர்ந்து செயலாற்றுவோம். புத்தகங்கள் என்ற கலங்கரைவிளக்கங்களை நோக்கி எமது அடுத்த சந்ததியினரையும்அழைத்துக்கொண்டுநாமும்பயணிப்போமாக.

# இலங்கைத் திருநாடு குற்றவாளிகளின் தேசமா?

இந்துமதி




குற்றவாளிகளைப் பாதுகாக்கின்ற செயற்பாட்டில் அரசு தொடர்ந்தும் ஈடுபடுமானால் எதிர்காலத்தில் பாதகமான விளைவுகளை அரசு எதிர்கொள்ள நேரிடும் என்பதைத் துணிந்து கூறலாம். கடந்த ஆட்சிக் காரர்களின் கடன்களையும், சுமைகளையும், பாதகச் செயல்களையும் இந்த அரசு எதிர்கொள்வதைப்போலவே தான் இழைத்து வருகின்ற தவறுகளையும் இந்த அரசு தொடர்ந்தும் எதிர்கொள்ள வேண்டிய நிலை வரும். கடந்த ஆட்சிக் காலத்தில் மிகப்பெரிய அளவில் குற்றச் செயல்கள் இடம்பெற்றன. ஆள்களைக் கடத்திச் செல்வதும், கொலை செய்வதும் மிகச் சாதாரண விடயங்களாகவே மாறிவிட்டிருந்தன. இதில் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருந்தவர்களுக்கும், மிக முக்கிய அரசியல்வாதிகளுக்கும் தொடர்பிருந்ததாக கூறப்பட்டது. ஆனால்உரியவர்கள்விசாரிக்கப்படவுமில்லை, தண்டனைக்கு உள்ளாக்கப்படவுமில்லை என்பது தான் கவலைக்குரிய விடயமாகும்.

> இதேவேளை போர்க்குற்றச் சாட்டிலிருந்து படையினரைக் காப்பாற்றுவதற்கு அரச தலைவர் தவறினால் 20 இலட்சம் படை வீரர்களை ஒன்று திரட்டி நாடு தழுவிய போராட்டத்தில் குதிக்கப்போவதாக படையினரின் அமைப்பு ஒன்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

### தண்டனை வழங்குவதற்குப் பின்னிற்கும் அரசு

தற்போதைய அரசு குற்றமிழைத்தவர்களுக்கு எதிராகப் பாரபட்சமின்றித் துணிவுடன் விசாரணைகளை மேற்கொண்டிருந்தால் குற்றவாளிகளில் பலருக்குத் தண்டனை கிடைத்திருக்கும். ஆனால், அது சாத்தியமாகவில்லை. கடந்த காலங்களில் இடம்பெற்ற கடத்தல் சம்பவங்கள் மற்றும் கொலைகளின் பின்னணியில் முன்னாள் பாதுகாப்புச் செயலரான கோத்தபாயவே இருந்ததாக முன்னாள் இராணுவத் தளபதியும் தற்போது அமைச்சர் பொறுப்பை வகிப்பவருமாகிய சரத் பொன்சேகா கூறியிருந்தார். கோத்தபாய மீது நடவடிக்கை எடுப்பதற்கு இதுவொன்றே போதுமானது. இதேவேளை, போர்க்குற்றச் சாட்டிலிருந்து படையினரைக் காப்பாற்றுவதற்கு அரச தலைவர் தவறினால் 20 இலட்சம் படை வீரர்களை ஒன்று திரட்டி நாடு தழுவிய போராட்டத்தில் குதிக்



கப்போவதாகப் படையினரின் அமைப்பு ஒன்று எச்சரிக்கை விடுத்துள்ளது. இது அரசுக்கு விடுக்கப்பட்ட தொரு வெளிப்படையான மிரட்டலாகும்.

### பாதுகாக்கும் முயற்சிகள்

படையினர் போர்க்குற்றங்களில் ஈடுபட்டிருந்தால் அவர்களைத் தண்டிப்பதில் என்ன தவறு உள்ள தென்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. போர்க்குற்றங்களில் இருந்து படையினரை விடுவிக்கின்ற முயற்சிகள் தற்போது ஜெனிவாவில் முழு வீச்சில் இடம்பெற்று வருகின்றன. இதை முறியடிக்கும் வகையில் தமிழர் அமைப்புக்கள் போர்க்குற்ற விசாரணைகளை வலியுறுத்தி வருகின்றன. சில சிங்கள அமைப்புக்களும் அங்கு முகாமிட்டுத் தமிழர் தரப்புக்குப் போட்டியாகச் செயற்பட்டு வருகின்றன. உரிய நேர்மையான விசாரணைகள் மூலமே ஒருவரைக் குற்றவாளியா? அல்லது நிரபராதியா? எனத் தீர்மானிக்க முடியும். ஆனால் விசாரணையே வேண்டாம் எனக் கூறுவது குற்றங்களை மூடி மறைப்பதற்கானதொரு முயற்சியாகவே கருதப்படும். படையினர் குற்றங்களில் ஈடுபடாதிருந்தால் அவர்கள் எந்தவொரு விசாரணைக்கும் அஞ்ச வேண்டிய அவசியமே கிடையாது. விசாரணைகள் மூலமே அவர்கள் மீதான களங்கத்தைக் களைய முடியும். ஆனால் அதற்கு அவர்கள் முன்வருவதாகத் தெரியவில்லை.

### கொலை முயற்சி

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனா மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலரான கோத்தபாய ஆகியோரைக் கொலை செய்வதற்கான முயற்சிகள் இடம்பெற்றிருப்பதாகத் தெரிவிக்கும் செய்திகள் நாட்டில் உலா வருகின்றன. அரசு இது தொடர்பான உண்மை நிலையை நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும். அதைவிட உண்மையான குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட வேண்டும்.

நாட்டில் குற்றச் செயல்கள் பெருகிவரும் நிலையில் பொருளாதாரமும் மந்த நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. இலங்கை வறுமையின் பிடிக்குள் சிக்கியுள்ளதாக உலக வங்கி எச்சரிக்கும் அளவுக்கு நிலைமை மோசமான கட்டத்தை எட்டிவிட்டது. ஆட்சியாளர்களின் தவறுகளால் நாட்டு மக்கள் அல்லல்களை எதிர்கொள்வதற்காகப் போராடுகின்றனர். அரசியல்வாதிகள் தாம் பதவிக்கு வருவதற்கு மட்டுமே மக்களை நாடிச் செல்கின்றனர். பதவிக்கு வந்ததும் அவர்களை மறந்து விடுகின்றனர். இந்த நிலை மாறும்போதுதான் மக்களின் துயரங்களுக்கு விடிவு கிடைக்கும்.


### குற்றச் செயல்களும் பொலிசாரும்

நாட்டில் குற்றச் செயல்கள் பெருகுவதும், குற்றவாளிகளின் ஆதிக்கம் நிலவுவதும் நல்லதொரு செயற்பாடாகத் தெரியவில்லை. தேவைக்கேற்ப காவல்துறையினர் உள்ளபோதிலும் குற்றங்களைக் கட்டுப்படுத்த முடியவில்லையெனக் கூறுவதை ஏற்றுக்கொள்ளவே முடியாது. பொதுவாகவே காவல்துறைக்கும், குற்றவாளிகளுக்கு மிடையே நெருங்கிய தொடர்புகள் இருப்பதாகக் குற்றம்சாட்டப்படுகின்றது. அதில் உண்மையிருக்குமானால், அதை முதலில் களைந்தெறியவேண்டும். காவல்துறை தனது கடமையைச் செவ்வனே ஆற்றுவதற்கான கடுமையான உத்தரவுகள் வழங்கப்படவேண்டும். எந்த வகையிலும் குற்றவாளிகளைப் பாதுகாக்கும் வகையிலான செயற்பாடுகள் இடம்பெறக்கூடாது. இலங்கை குற்றவாளிகளின் தேசம் என்கின்ற நிலை நீடிப்பது ஆரோக்கியமானதல்ல.

# நிறைவேற்று அரச தலைவர் முறைமை இலங்கைக்குப் பொருந்தாது

செல்வராஜா ரமேஷ்

மறைந்த முன்னாள் அரச தலைவர் ஜே.ஆர். ஜெயவர்த்தனவால் முன் மொழியப்பட்டதே நிறைவேற்று அரச தலைவர் முறைமை. நிறைவேற்று அரச தலைவர் முறைமையை ஜே.ஆர். நடைமுறைக்குக் கொண்டு வந்ததைத் தொடர்ந்து அதை ஆர். பிரேமதாச, சந்திரிகா பண்டாரநாயக்க, மகிந்த ராஜபக்ச எனத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த அரச தலைவர்கள் பயன்படுத்தி வந்தார்கள். இன்றைய அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனகூட மட்டுப்படுத்தப்பட்ட சில சரத்துக்களுடன் அதை நடைமுறையிலேயே வைத்திருக்கிறார். முற்றாக நீக்கிவிடவில்லை. இந்த அரச தலைவர் முறைமை குறித்த வாதப்பிரதிவாதங்கள் இப்போது முன்னிலை பெற்றுள்ளன. பிரான்ஸ், அமெரிக்கா போன்ற நாடுகளை ஒத்த கலப்பு முறைமையை இது கொண்டதாக இருப்பதுடன் சிறுபான்மையினருக்கு எதிரான அரசியல், சமுக, பொருளாதார மற்றும் உட்கட்டுமான விடயங்களைப் பின்தள்ளியது. இன்று வரை புதிய அரசமைப்பு ஊடாகத் தொடர்கிறது இந்த நிறைவேற்று அதிகார முறைமை.





### நீக்குமாறு எழுந்துள்ள குரல்கள்

நிறைவேற்று அரச தலைவர் முறைமையை நீக்குவது தொடர்பாக இலங்கையின் முக்கிய கட்சிகளில் ஒன்றான மக்கள் விடுதலை முன்னணி முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றது. இந்த முறைமையை ஒழிப்பது தொடர்பான எண்ணக்கருப் பத்திரத்தைச் சபாநாயகர் கருஜெயசூரியவிடம் அந்தக் கட்சி அண்மையில் கையளித்துமிருந்தது. 20ஆம் திருத்தத்தை முன்னிறுத்தி நிறைவேற்று அரச தலைவர் முறைமையை ஒழிக்கும் நடைமுறையை மக்கள் விடுதலை முன்னணி முன்வைக்கும்போது அரசைச் சார்ந்துள்ள கல்விமான்களும், அரசியலில் முதிர்ச்சி பெற்றவர்களும் இந்த விடயம் சிறுபான்மையின மக்களைப் பாதிக்குமெனவும் அந்த மக்களது அரசியல் விடயங்களை முன்னி றுத்தாது எனவும் கூறி வருவது குறிப்பிடத்தக்கது.

### ஐக்கிய தேசியக் கட்சி சார்ந்து ஜே.ஆரால் கொண்டுவரப்பட்டது

நிறைவேற்று அரச தலைவர் முறைமையை அறிமுகம் செய்ய வேண்டும் என்ற சிந்தனை 1960-1965ஆம் ஆண்டளவில் ஐக்கிய தேசியக் கட்சியிடம் எழுந்தது. அபிவிருத்தி அடைந்து வருகின்ற ஒரு நாட்டின் வளர்ச்சியை முன்னிறுத்த வேண்டுமாயின் அதற்குப் பலம் பொருந்திய அரச நிர்வாகி இருக்கவேண்டும்என்றநிலைப்பாடும் ஜே.ஆர் கால ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியாளர்களிடம் மேலோங்கிக் காணப்பட்டது. இதனாலேயே 1978ஆம் ஆண்டின் அரசமைப்பு அறிமுகம் செய்யப்பட்டது. நாட்டின் துரித திறந்த பொருளாதாரக் கொள்கையை முன்னெடுத்து அபிவிருத்திக்கு இட்டுச் செல்லும் போது நாடாளுமன்றத்தால் கட்டுப்படுத்தப்படாத நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் பதவி தேவை என்பதும் உணரப்பட்டது.







### நிறைவேற்று அதிகாரம் தொடர்பான எதிர்பார்ப்புக்கள்

மக்களால் தெரிவு செய்யப்பட்டவர் என்ற வகையில் அரச தலைவரால் சிறுபான்மையின மக்களைக் குறைந்த மட்டத்திலாவது பேணக்கூடியதாக இருக்கும் எனப் பொருள்கோடல் செய்யப்பட்டது. அத்துடன் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்படாத விடயத்தை அவர் மக்கள் தீர்ப்பு ஊடாக நிறைவேற்றலாம் என்பது நாடாளுமன்றத்தின் இறைமையைப் பாதிக்கும் செயலாக அமையும் எனவும் கருதப்பட்டது. நாடாளுமன்றத்தைக் கூட்டும் அல்லது கலைக்கும், ஒத்திவைக்கும் அதிகாரமும் அரச தலைவரிடமே இருப்பது நாடாளுமன்றத்தின் இறைமையைப் பாதிக்கும் ஒன்றாகும்.

### தவாறான கையாளுகைக்கும் வழி வகுக்கும்

இந்த அதிகார முறைமையானது சட்டத்துறை, நீதித்துறை, நிர்வாகத்துறை என்பவற்றைக் கட்டுப்படுத்துகின்ற அதிகாரத்தைக் கொண்டிருப்பது அதிகார முறைகேட்டுக்கு வழி வகுப்பதாக இருக்கும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. முக்கியமாக அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்து அமைச்சரவை கலைக்கப்படினும் அரச தலைவர் முறையால் அதைத் தடுக்க முடியும் என்பது சுட்டிக் காட்டப்படுகின்றது.

நிறைவேற்ற அதிகாரங்களால் நீதிமன்றங்களால் வழங்கப்பட்ட தண்டனைகளைக் கூட்டலாம், குறைக்கலாம், அல்லது மன்னிப்பு வழங்கலாம் அரச தலைவர் தனக்குச் சாதகமானவர்களைக் கொண்ட ஆணைக்குழுக்களை ்யும் நியமித்து விசாரணைகளை மேற்கொள்ள முடியும். இவ்வாறாக இந்த முறைமையானது அமைந்திருப்பதால், இதைப் பற்றிய வாதப்பிரதி வாதங்கள் அரசியல் தரப்பில் எழுந்துகொண்டே இருக்கின்றன.

இன்றைய பொருளாதார நெருக்கடியால் அபிவிருத்தி. நிதிப் பெறுமானம் என்பன வீழ்ச்சியடைந்திருக்கின்றன. இதைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின் அரசமைப்பில் 20ஆவது திருத்தத்தை நிறைவேற்ற வேண்டிய கடமை சிறுபான்மைச் சமுகம் உட்பட பெரும்பான்மைச் சமுகத்தினதும் கடப்பாடாகும். நிறைவேற்று அரச தலைவர் முறைமையை ஒழிப்பேன் எனத் தற்போதைய அரச தலைவர் மக்களுக்கு வாக்குறுதி அளித்திருந்தபோதிலும் இதுவரையில் எவ்வித தீர்மானங்களும் அது சார்ந்து நிறைவேற்றப்படவில்லை. இதே வேளை நிறைவேற்று அரச தலைவர் முறையை நீக்கினால் நாடு இரண்டுபட்டு விடும் என்று பெரும்பான்மையினரிடத்தில் ஒரு கருத்து நிலவுகின்றது. இதனால் நாட்டுக்குப் பாதிப்பு ஏற்படுமென்றும் ஒரு சாரார் வாதிடுகின்றனர். ஆனால், பெரும்பான்மையினர், சிறுபான்மையினர் என்ற இரு சாராருக்கும் மத்தியிலும் நிறைவேற்று முறைமை இந்த நாட்டுக்குப் பயனற்றது என்ற கருத்து நிலவுவதும் க்வனிக்கத்தக்கது.

## ஆசிரியருக்கான கடிதம்

# பயன் ஏதும் தராமல் கலையப்போகின்ற சபையும், தலைவரும்!

'குள்ள நரி' என்று சுட்டப்படுகின்ற ஜே.ஆரின் சதிவலையில் 1987ஆம் ஆண்டில் சிக்கிக்கொண்ட கற்றுக்குட்டியான ராஜீவ்காந்தி முன்வைத்த மாகாணசபை முறையை எதிர்த்தார் தலைவர் பிரபாகரன். மேடைக்கு மேடை காண்போம் தனிநாடு என்று கூக்குரலிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் பெருந்தலைவர் அமிர்தலிங்கம் ராஜீவ்காந்திக்கு விசுவாசமாக அதை ஏற்றுக்கொண்டார். கிழக்கில் வரதராஜப் பெருமாள் மாகாணசபையைத் தூக்கிக்கொண்டு காவடியாடினார்.

சிறிது காலத்தில் காவடியை எறிந்து விட்டு அவரும் காணாமல் போனார். வடக்கில் அது சாக்கடையில் கிடந்தது. இன அழிப்புப் போரால் முள்ளிவாய்க்கால் அவலம் மெனிக்பாம் திறந்தவெளிச் சிறைவாசம் எல்லாம் முடிந்து மக்கள் குடியமர்ந்தபின் 2013ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தல் வந்தது. சம்பந்தன் ஐயா இந்தச் சபைக்குத் தலைவராக நீதியரசர் விக்னேஸ்வரனை வலைவீசிப் பிடித்து வந்தார். இவரைப் படத்தில்கூடப் பார்த்திராத மக்கள் சம்பந்தன் ஐயாவின் சொல்லை மதித்து விலைமதிப்பற்ற வாக்குகளை அவருக்கு வழங்கினர். முதலமைச்சர் ஆன அவர் ஒரு வருடத்திலேயே தனது சுயரூபத்தை வெளிப்படுத்திவிட்டார்.


அத்தோடு அவர் தலைமையிலான மாகாணசபையானது கோமாளிகள் கூடிக் கலைகின்ற ஓர் இடமாகவே இருந்து வருகின்றது. சொல்லத்தக்கதாக ஏதும் நடைபெறவில்லை. மக்களின் பணம் களியாட்டத்தில் வீணானது தான் மிச்சம்.

இந்த நிலையில் பளைக் காற்றாலை விவகாரம் பேசப்பட்டது. இந்தக் காற்றாலையால் ஒரு தொகைப்பணம் மாகாணசபைக்கு வழங்கப்பட்டதாகவும் அது காற்றாலை வருமானத்தில் ஒரு சிறு தொகையே என்பதாகப் பலரும் கூறினார்கள். இதைமூடி மறைக்கும் விதமாக அது மாகாணசபைக்குக் கிடைத்த வரப்பிரசாதம் என்று நீதியரசர் கூறினார். இந்தக் காற்றாலை அமைந்துள்ள காணி சபையோரின் அங்கீகாரம் இல்லாமல் முதல்வரின் தன்னிச்சையான முறையிலேயே காணி வழங்கப்பட்டுள்ளதாகவும் கதையடிபடுகிறது.

இந்த நிலையில், இப்படியான கில்லாடிகளின் புகழிடமாகத்தான் தமிழ்மக்கள் பேரவை அமைந்துள்ளதா? என்றும் கருத வேண்டியுள்ளது.

நிலைமை இப்படியே போகுமானால் கடவுளாலும் தமிழ் மக்களைக் காப்பாற்ற முடியாமல் போய் விடும். இதுதான் தமிழ்மக்களின் தலைவிதியா?

*ப.யேசுபாதம்.*



ஸ்ரோபெரி விவகாரம்; தோட்டத்துக்குள் நுழைந்து

## செய்கையாளர்களைத் தட்டிக்கொடுத்த ஆஸ்திரேலியத் தலைமை அமைச்சர்

சிட்னி.ஒக்.1

ஆஸ்திரேலியாவிலிருந்து ஏற்றுமதியாகின்ற ஸ்ரோபெரிப் பழங்களுக்குள் சிறிய ஊசிகள் புகுத்தப்பட்டிருப்பதால், குறித்த பழங்களை இறக்குமதி செய்த நாடுகள் பலவும் அவற்றை ஆஸ்திரேலியாவுக்குத் திருப்பி அனுப்பியுள்ளன. இந்தப் பழங்களின் ஏற்றுமதி பத்து வீதத்தால் குறைந்துள்ளமை ஆஸ்திரேலியாவின் வெளிநாட்டுச் செலவாணியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் ஸ்ரோபெரி உற்பத்தியாளர்களையும் பெரும் அளவில் பாதித்துள்ளது. இந்த நிலையில்தான் ஆஸ்திரேலியாவின் தலைமை அமைச்சரான ஸ்கொட் மேரிஷன் ஸ்ரோபெரிச் செய்கையாளர்களைத் தட்டிக் கொடுக்கும் முகமாக அங்குள்ள ஸ்ரோபெரிப் பழத் தோட்டத்துக்குள் அதிரடியாக இறங்கியிருக்கிறார். சாதாரண மனிதராகத் தோட்டத் தரையில் அமர்ந்த அவர் அங்கு விளைந்த ஸ்ரோபெரிப் பழங்களைச் சுவைத்து உண்டிருக்கிறார். "விளைந்த பழங்களில் எந்தவிதமான ஊசிகளையும் தான் காணவில்லை என்பதைச் சகலருக்கும் கூறுவதன் ஊடாக அந்த நாட்டு விவசாயிகளுக்குப் பக்க பலமாகத் தான் நிற்பதை எடுத்துக் காட்டியுள்ளார்" என்பதாகப் பன்னாட்டு ஊடகங்கள் இதுகுறித்துச் செய்தி வெளியிட்டுள்ளன.

**பின்னணி**

ஆஸ்திரேலியாவின் சந்தைகளில் விற்பனையாகின்ற ஸ்ரோபெரி பழங்களில் சிலர் மெல்லிய ஊசியை நுழைத்து மறைத்துவிடுவதாகத் தகவல்கள் பரவியிருந்தன. ஸ்ட்ரோபெரிப் பழங்களைச் சந்தைகளில் வாங்கிச் சென்று சாப்பிட்ட 3க்கும் மேற்பட்டவர்களுக்குத் தொண்டையிலும், வயிற்றிலும் ஊசி சிக்கிப் பெரும் அவதிக்குள்ளானார்கள். மேலும், பலர் ஸ்ட்ரோபெரிப் பழங்களைச் சாப்பிடும் போது, அதில் ஊசிகள் இருப்பதைக் கண்டுபிடித்தனர்.

இதுதொடர்பாகப் பாதிக்கப்பட்டவர்கள் சமூகவலைத்தளங்களில் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்திருந்தனர். ஸ்ட்ரோபெரிப் பழத்துக்குள் ஊசியை மறைப்பது தீவிரவாதச் செயல். இந்தச் செயலைச் செய்பவர்களுக்குக் கடுமையான தண்டனையாக 15ஆண்டுகள் சிறைத் தண்டனை கிடைக்க வகை செய்யப்படும் என்று ஆஸ்திரேலியத் தலைமை அமைச்சர் ஸ்காட் மோரிஷன் சில நாள்களுக்கு முன்பு எச்சரிக்கை செய்திருந்தார். பின்னர் நியூசிலாந்தில் விற்கப்பட்ட ஸ்ரோபெரிகளில் ஊசிகள் இருந்தமையானது, வாடிக்கையாளர்களை அச்சத்திலும் அதிர்ச்சியிலும் ஆழ்த்தியது. ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஸ்ரோபெரிகள் இவை என்பதால் இறக்குமதி நிறுத்தப்பட்டது.

தொடர்ந்து சிங்கப்பூரில் பழங்களை இறக்குமதி செய்யும் ஒரு பிரபல நிறுவனமும் இதைக் கண்டுபிடித்தது. அதுவும் இறக்குமதி செய்வதை நிறுத்திக் கொண்டது. இந்த நிலையில்தான் இதனால் பாதிக்கப்பட்ட செய்கையாளர்களை நேரில் கண்டு சந்தித்திருக்கிறார் ஆஸ்திரேலியத் தலைமை அமைச்சர்.

# இந்தோனேசியாவில் சுனாமித் தாக்குதல் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை உயர்வு!

ஜகார்த்தா.ஒக்.1

**இந்தோனேசியாவில் நேற்று முன்தினம் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தால் சுனாமி ஏற்பட்டிருந்தது. சுனாமி அலைகள் இந்தோனேசியத் தீவுகளைத் தாக்கியதன் காரணமாகப் பலர் உயிரிழந்துள்ளனர். அதில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 832 ஆக உயர்ந்துள்ளதாகப் பிந்திக் கிடைத்த பன்னாட்டுச் செய்திகள் மூலம் அறிய முடிகிறது.**




இந்தோனேஷியாவின் சுலேவேசியாத் தீவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டிருக்கிறது.

இந்த நிலநடுக்கம் சுலேவேசியாவின் தாங்கலாவில் இருந்து வடகிழக்காக 56கிலோ மீற்றர் தொலைவில் பூமிக்கு அடியில் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் நிகழ்ந்திருக்கிறது.

இந்த நடுக்கம் 7.5 ரிக்டர் அளவில் உணரப்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தகவல் தெரிவித்திருந்தது. சக்தி வாய்ந்த இந்த நிலநடுக்கம் காரணமாகப் பல கட்டடங்கள் கடுமையாகச் சேதமடைந்தன. நிலநடுக்கத்தை அடுத்துப் பல இடங்களையும் கடல் அலைகள் தாக்கின.

பாலு நகரில் 5 அடி உயரத்துக்கு எழுந்த சுனாமி அலைகள் சுமார் 3லட்சத்து 50 ஆயிரம் மக்கள் வசிக்கும் பகுதியைத் தாக்கியது.





நேற்றைய அறிவிப்பு வரையில் நிலநடுக்கம் மற்றும் சுனாமி காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 832ஆகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன் பலத்த காயங்களுடன் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனைகளில் பலர் சேர்க்கப்பட்டிருப்பதால் உயிரிழப்புக்கள் அதிகரிக்கலாம் என்று கருதப்படுகின்றது. மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

# விமானத்தைத் துரத்திச் சென்ற பயணி

டப்ளின்.ஒக்.1

பயணிகள் விமானம் புறப்படுவதற்குத் தயாராகிக் கொண்டிருக்கையில் ஆண் பயணி ஒருவர் பரபரப்பாக விமான நிலையத்துக்குள் நுழைந்திருக்கிறார். அதற்குள் விமானம் புறப்பட்டு விட்டது. இருந்தாலும் அந்தப்பயணி கையில் பயணப்பொதிகளுடன் 'வெயிட்... வெயிட்...' எனக் கத்தியபடி விமானத்தை விரட்டியபடி விமான ஓடுபாதையை நோக்கி ஓடியிருக்கிறார். ஆனால், அவரை விமானத்துக்கு அருகே செல்லவிடாமல் விமான நிலைய ஊழியர்கள் தடுத்து நிறுத்தியிருக்கின்றனர். உடனே அவர் விமான நிலையத்தில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார். இந்தச் சம்பவம் நடந்திருப்பது அயர்லாந்தின் டப்ளின் நகரில். அங்கிருந்து இருந்து ஆம்ஸ்டர் டாம் நகர் நோக்கிப் பயணத்தில் ஈடுபடுகின்ற விமானத்தையே அந்தப்பயணி துரத்திச் சென்றிருக்கிறார். போராட்டத்தில் ஈடுபட்ட அந்த நபரைப் பின்னர் பொலிசார் கைது செய்தனர். அந்த விமானத்தில் பயணிக்க வேண்டிய அவர் தாமதமாக வந்ததால் விமானம் புறப்பட்டு விட்டது. விமான நிலையக் கதவை உடைத்துக் கொண்டு விமானத்தை நோக்கி அதை நிறுத்துவதற்கு முயற்சித்திருந்தமை பொலிஸ் விசாரணையில் தெரியவந்திருக்கிறது.




# "அணு ஆயுதங்களை


## வட கொரியா மறு

பியோங்யாங்.ஒக்.1

வட கொரியா மீது அமெரிக்கா தொடர்ந்து பொருளாதாரத் தடைகளை விதித்து வரும் நிலையில், தங்களிடம் உள்ள ஆயுதங்களைக் கைவிடுவதற்கு வாய்ப்பேயில்லை என்று அந்த நாட்டின் அயலுறவுத்துறை அமைச்சர் ரி யோங்ஹோ எச்சரிக்கைப் பாணியில் கூறியுள்ளார். வட கொரியா மீது விதிக்கப்பட்டு வரும் தொடர் தடைகள் அமெரிக்கா மீதான அவநம்பிக்கையைத் தொடர்ந்து அதிகரித்து வருவதாக ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தில் அவர் கூறியுள்ளார்.



'அமெரிக்காவின் செயல்பாட்டின் மீது நம்பிக்கை ஏதும் இல்லாமல், எங்களது தேச பாதுகாப்பில் சமரசம் செய்ய முடியாது. இந்தச் சூழ்நிலையில், எங்கள் மீதான தடைகளை விலக்குவதற்கு முன்னரே நாங்கள் ஆயுதங்களைக் கைவிடுவதென்பது சாத்தியமில்லை. எங்களைப் பற்றிச் சரியாக அறியாதவர்கள் வடகொரியாவின் மீது விதிக்கப்படும் தடைகளால் எங்களது செயல்பாட்டை முடக்கிவிடலாம் என்று



# சீனாவில் அதிகரிக்கும் எய்ட்ஸ்!

பீஜிங்.ஒக்.1
எச்.ஐ.வி நோய்த் தொற்று மற்றும் எய்ட்ஸ் நோயுடன் வாழ்பவர்களின் எண்ணிக்கை 14சதவீதமாகச் சீனாவில் அதிகரித்திருக்கிறது. இதை அந்த நாடு வெளியிட்ட அறிக்கையில் வெளிப்படுத்தியுள்ளது.

சீனாவில் எச்.ஐ.வி எய்ட்ஸ் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளவர்களின் எண்ணிக்கை 8இலட்சத்து.20ஆயிரம் என்று அந்த நாட்டுச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். 2018ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் மட்டும் 40ஆயிரம் பேருக்குப் புதிதாக எய்ட்ஸ் நோய் ஏற்பட்டுள்ளது. ஆண்டுதோறும் சராசரியாகச் சீனாவில் எய்ட்ஸ் நோயுள்ளவர்களின் எண்ணிக்கை சுமார் ஒரு லட்சம் சதவீதம் அதிகரித்து வருகிறது.

நோய்த் தொற்று உள்ள குருதியை முறையாகப் பரிசோதனை செய்யாமல் உடலில் செலுத்துவதால் கடந்த காலங்களில் எய்ட்ஸ் பரவுவது சீனாவில் அதிகமாக இருந்தது. ஆனால், தற்போது ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்குப் பாதுகாப்பற்ற உடலுறவே முக்கிய காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 2003ஆம் ஆண்டில் எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ் நோய்க்கான மருந்துகள் அனைவருக்கும் கிடைக்க வழிவகை செய்யப்படும் என்று சீன அரசு உறுதி அளித்திருந்தது. ஆனாலும் சீனாவில் எயிட்ஸ் நோயின் தாக்கம் அதிகரித்து வருவதே தொடர்கிறது.

# வன்புணர்ந்ததாகப் பொய்யுரைத்த பெண் எகிப்தில் 2 ஆண்டுகள் சிறை

கெய்ரோ.ஒக்.1
தான் வன்புணரப்பட்டதாக முகப்புத்தகத்தில் காணொலியைப் பதிவிட்டுப் பரபரப்பை ஏற்படுத்திய பெண்ணுக்கு எகிப்திய அரசால் 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.



எகிப்து நாட்டைச் சேர்ந்த அமல் பேதி என்ற பெண் தனது முகப்புத்தகப் பக்கத்தில் 12 நிமிடங்களைக் கொண்ட காணொலி ஒன்றை வெளியிட்டு இருந்தார். அதில் தான் ஒரு தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த பெண் என்றும், தான் வங்கியில் பணிபுரிந்தபோது பாலியல் கொடுமைக்கு ஆளானதாகவும், பல்வேறு தகவல்களை வெளியிட்டு இருந்தார். இது எகிப்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதுபற்றி விசாரணை நடத்தியதில், அவர் வெளியிட்ட தகவல்கள் அனைத்தும் பொய்யானவை எனத் தெரியவந்திருக்கிறது. இதையடுத்து அந்தப் பெண் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்.

# ளைக் கைவிடுவதற்கு வாய்ப்பேயில்லை'

## றுபடியும் வீர வசனம்



கனவு காண்கின்றனர்' என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

**பின்னணி**

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பும் வட கொரிய அதிபர் கிம் ஜோங் உன்னும் ஜூன் மாதம் சிங்கப்பூரில் சந்தித்துப் பேசியிருந்தனர். அந்தக் கூட்டத்தின் முடிவில் அணு ஆயுதத் திட்டங்களையும், செயற்டுகளையும் வட கொரியா கைவிடுமென்று கிம் தெரிவித்திருந்தார். இதைத்தொடர்ந்து இரண்டு நாடுகளுக்கிடையேயான உறவில் முன்னேற்றம் ஏற்பட ஆரம்பித்தது. ஆனால், அணு ஆயுதங்களைக் கைவிடுவதற்கான காலவரையறையோ அல்லது அந்தச் செயற்பாட்டைக் கண்காணிக்கும் முறை பற்றியோ எவ்வித தகவல்களும் வெளியிடப்படவில்லை. இந்த நிலையில், இந்த மாதத்தின் ஆரம்பத்தில் தென்கொரிய அதிபர் மூன் ஜே இன் மூன்று நாள் சுற்றுப்பயணமாக வட கொரியாவுக்குச் சென்றிருந்தபோது, பன்னாட்டு நிபுணர்களின் முன்னிலையில் அணு ஆயுதங்களை அழிப்பதற்கு வடகொரிய இணக்கம் தெரிவித்திருந்தது.

இதையடுத்து வட கொரியாத் தலைவருடனான இரண்டாவது சந்திப்புக்கு 'வெகு காலம் இல்லை' என்று நம்,புவதாக ட்ரம்ப் கூறியிருந்தார். இந்த நிலையிலேயே வடகொரியாவின் அணு ஆயுதம் தொடர்பான இந்தப் புதிய நிலைப்பாடு வெளிப்பட்டிருக்கிறது. இது மீண்டும் அமெரிக்கா எதிர் வடகொரியா எனும் போர்க்களத்தைத் தோற்றுவிக்கின்ற புள்ளியாகவே தெரிகிறது.

# இந்தியா – பாகிஸ்தான் பேச்சு முன்னெடுப்பும் எதிரொலியும்

இந்தியா - பாகிஸ்தான் ஆகிய அயல்நாடுகளுக்கிடையே நீடிக்கின்ற முரண்பாடுகளைத் தீர்க்கும் நோக்குடன் பாகிஸ்தானின் புதிய தலைமை அமைச்சரான இம்ரான் கான் அமைதிப்பேச்சுக்கு இந்திய அரசுக்கு அழைப்பு விடுத்திருந்தார். சில காரணங்களை முன்வைத்து இந்தியா அதை நிராகரித்திருந்தது. அது குறித்து இம்ரான்கான் காட்டமாகப் பேசியிருந்தார். இப்போது வரை இந்திய - பாகிஸ்தான் அமைதிப் பேச்சுக்கான அழைப்பு அந்த நாடுகளில் பேசுபொருளாகத் தொடர்ந்துகொண்டே இருக்கிறது.

## இந்தியத் தரப்பு நியாயம்




பயங்கரவாதத்தைப் புனிதப்படுத்துபவர்களுடன் எப்படி பேச்சு நடத்துவது? என்பதாகக் கருத்து வெளியிட்டிருக்கிறார் இந்திய மத்திய அயலுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ். ஐ.நாவின் 73ஆவது கூட்டத்தொடரில் உரையாற்றியபோது அவர் இதைத் தெரிவித்திருக்கிறார். தீவிரவாதிகளைப் புனிதப்படுத்தி, எங்கள் நாட்டை குருதிச் சகதியாக்கும் பாகிஸ்தானுடன் நாங்கள் எவ்வாறு பேச்சு நடத்துவது?, அமைதிப்பேச்சை நாங்கள் குலைக்கிறோம் என்பது பாகிஸ்தானின் பச்சைப் பொய் என்று குறிப்பிட்டிருக்கிறார் சுஷ்மா சுவராஜ்: பாகிஸ்தானின் புதிய தலைமை அமைச்சர் இம்ரான் கான் பதவி ஏற்றவுடன் எங்கள் நாட்டுத் தலைமை அமைச்சர் மோடிக்குக் கடிதம் எழுதி இரண்டு நாட்டு அயலுறவு அமைச்சர்கள், ஐ.நா. பொதுக்கூட்டத்தின் போது பேச்சு நடத்த வேண்டும் என்று ஆலோசனை தெரிவித்திருந்தார். இந்தியாவும் அந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டது. ஆனால், இது நடந்த சில மணி நேரங்களில் இந்தியச் சிப்பாய்கள் 3 பேரைப் பாகிஸ்தான் தீவிரவாதிகள் கடத்திச் சென்று சுட்டுக்கொலை செய்திருக்கிறார்கள்.



நான் கேட்கிறேன் இதுதான் பேச்சு வார்த்தை நடத்துவதற்கான விருப்பமா? நாங்கள் மட்டுமல்ல இதற்கு முன் இருந்த இந்திய அரசுகளும் கூட அமைதியில்தான் ஆர்வம்காட்டின என்றும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார். சுஷ்மா சுவராஜ் மாத்திரமன்றி இந்தியாவுக்கான நிரந்தர உறுப்பினராக ஐ.நா வில் இடம்பிடித்திருக்கின்ற ஈனம் கம்பீரும் பாகிஸ்தானை விமர்சித்துப் பேசியுள்ளார். இந்தியா மீது அபாண்டமான பழி சுமத்துகிறது பாகிஸ்தான். புதிய பாகிஸ்தான் எந்தவிதத்திலும் இன்னும் மாறவில்லை என்றிருக்கிறார் அவர்.

## பதிலுக்குப் பாகிஸ்தான்



பாகிஸ்தானின் அயலுறவுத்துறை அமைச்சர் ஷா மெகமூத் குரேஷி, கடந்த 2014ஆம் ஆண்டு பாகிஸ்தானில் பெஷாவர் நகரில் இராணுவப் பள்ளிக்குள் நுழைந்த தலிபான் தீவிரவாதிகள் பள்ளிக்குழந்தைகள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கியால் சுட்டனர். இதில் 150க்கும் மேற்பட்ட குழந்தைகள் கொல்லப்பட்டனர். அந்தத் தீவிரவாதிகளுக்கு ஊக்கம் கொடுத்தது இந்தியாதான். இப்போது புதிய தலைமை அமைச்சர் இம்ரான் கான் தலைமையில் புதிய பாகிஸ்தான் பிறந்துள்ளது. அது அண்டை நாடுகளுடன் அமைதியை விரும்புகிறது. பல்வேறு முக்கிய பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தை மூலம் பேசித்தீர்க்க முனைகிறது. அதற்கு அண்டைநாட்டுக்கு விருப்பமில்லை என்று தனது குற்றச்சாட்டை முன்வைத்திருக்கிறார். அத்துடன் இந்தியாவுடனான பிரச்சினைகளைப் போரால் தீர்க்க முடியாது என்றும் அவர் கூறியுள்ளார். மத்திய கிழக்கு நாடுகளில் மிகவும் பிரசித்திபெற்ற 'அல் ஜசீரா' தொலைக்காட்சிக்கு அவர் சமீபத்தில் அளித்த பேட்டியியேலே இதைத் தெரிவித்திருக்கிறார். அமைதிக்கான வழியில் இந்தியா ஓரடி முன்னெடுத்து வைத்தால் பாகிஸ்தான் இரண்டடி எடுத்து வைப்பதற்குத் தயாராக இருப்பதாகப் பாகிஸ்தான் தலைமை அமைச்சர் இம்ரான் கான் முன்னர் தெரிவித்திருந்ததைச் சுட்டிக் காட்டிய அவர், இரண்டு நாடுகளுக்கும் இடையில் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. இரண்டு நாடுகளுமே அணு ஆயுத வலிமைமிக்க நாடுகளாக இருக்கும் நிலையில் பிரச்சினைகளைப் போரால் சரிசெய்ய முடியாது. போர் என்பது இதற்குத் தீர்வாகாது. பேச்சுவார்த்தை மட்டும் தான் ஒரே தீர்வாகும் எனக் குறிப்பிட்டிருக்கிறார். இந்தியா - பாகிஸ்தான் அமைதிப் பேச்சுவார்த்தை இப்படியாகத் தொடர்ந்து பயணித்துக் கொண்டே இருக்கிறது.



# "நடிப்புத் தான் முக்கியம், உடல் எடையல்ல" நித்யா மேனன்!

'ஓ காதல் கண்மணி', 'மெர்சல்' உட்படப் பல படங்களில் நடித்தவர் நடிகை நித்யா மேனன். மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் வாழ்க்கைவரலாற்றில் இவர் தற்போது நடித்து வருகிறார்.
இந்த நிலையில், இவரது உடல் எடை குறித்துச் சமூக வலைத்தளங்களில் கிண்டல் செய்து வந்தனர். இதனால் ஆத்திரமடைந்த நித்யாமேனன் "எனது உடல் எடை குறித்து மற்றவர்கள் ஏன் கவலைப்பட வேண்டும். நடிப்பு தான் முக்கியம், உடல் எடையல்ல" எனக் கூறியுள்ளார்.

## நாளை

**02.09.2018**

செவ்வாய்க்கிழமை

**புரட்டாதி 16**

திதி: அட்டமி பி.இ. 12.34 வரை
நட்சத்திரம்: திருவாதிரை மு.இ. 10.37
சுபநேரம்: 10.32 – 12.02 வரை
ராகுகாலம்: 3.02– 4.32 வரை

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சிலரது பேச்சால் சங்கடத்திற்கு ஆளாவீர்கள். தொழில், வியாபார நடைமுறை சராசரி அளவில் இயங்கும். லாபம் சீராக இருக்கும்.

**இடபம்:** மனதில் நிம்மதி நிலைக்கும். தொழில் வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பணியாளர்கள் பணி விஷயமாக வெளியூர் செல்வர்.

**மிதுனம்:** பொது இடங்களில் விவாதம் தவிர்க்கவும். தொழிலில் பங்குதாரர்களின் ஆலோசனையை ஏற்று முன்னேறுவீர்கள்.

**கடகம்:** செயலில் நேர்மை வெளிப்படும். தாமதமான பணியும் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள். லாபம் அதிகரிக்கும்.

**சிங்கம்:** குடும்பத்தினரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி திருப்திகரமாக இருக்கும். லாபம் உயரும்.

**கன்னி:**திட்டமிட்டு செயல்பட்டு முன்னேறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர புதிய வாய்ப்பு உருவாகும். பணியாளர்கள் நிர்வாகத்தின் பாராட்டைப் பெறுவர்.

**துலாம்:** சுற்றுப்புறச்சூழல் உணர்ந்து செயல்படுவது நல்லது. தொழிலில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையால் திண்டாடுவர்.

**விருச்சிகம்:**செயலில் உற்சாகம் வெளிப்படும். தொழில், வியாபாரத்தில் தடை விலகி நன்மை வளரும். உபரி வருமானம் கிடைக்கும்.

**தனுசு:**மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் பன்மடங்கு உயரும். பிள்ளைகள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**மகரம்:** உங்களால் நன்மையடைந்தவர் நன்றி மறந்து நடப்பார். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேற கூடுதல் முயற்சியுடன் செயல்படுவீர்கள்.

**கும்பம்:** திட்டமிட்ட செயல் நிறைவேற கூடுதல் உழைப்பு தேவை. தொழில், வியாபாரம் சராசரி அளவில் இருக்கும். லாபம் சுமாராக இருக்கும்.

**மீனம்:** புதிய முயற்சி கூடுதல் வெற்றியை பெற்றுத் தரும். இடையூறாக இருந்தவர்கள் விலகிச் செல்வர். புதிய வீடு, வாகனம் வாங்க யோகமுண்டு.




## பார்வை

கண் பார்வையற்ற ஒருவன் நீண்ட நேரமாகப் பிச்சையெடுத்துக் கொண்டிருந்தான். தனக்கு அருகாமையில் இருந்த பலகையில் "கண் தெரியாத எனக்கு உதவுங்கள்" என்று எழுதப்பட்டிருந்தது. பலரும் பார்த்துச்சென்றனர். சிலர் மட்டுமே பிச்சையிட்டனர்.
அந்தவழியேசென்றஒருவர். அந்தப்பிச்சைக்காரனின்பலகையில் இருந்ததைஅழித்தார். பின்ஏதோ எழுதிச் சென்றான். அதிலிருந்து அந்த வழியே சென்ற ஒவ்வொவரும் நிறையப் பணம் போட ஆரம்பித்தனர்.
அவன்அப்படிஎன்னதான்பலகையில் எழுதியிருப்பான்... "நீங்கள் மிகவும் அழகாக இருக்கீர்கள். உங்களைப் பார்க்கும் வாய்ப்பு தான்என்கண்களுக்குஇல்லை!"

எப்போது அன்பு ஏற்றுக்கொள்ளப் படவில்லையோ நகர்ந்து செல். எப்பொழுது அன்பு பாராட்டப்படவில்லையோ விலகிச் செல். எது உண்மையான அன்பு என்று காலம் கற்றுக் கொடுக்கும்.

மிகுதி ஒரு ரூபாவை நடத்துநர் தராதபோது, ரூபாயின் மதிப்பு சட்டென்று உயர்ந்து விடுகிறது.

அதுவாக வளரும்போது காசு குடுத்து வெட்டுகிறோம்...



அதுவா கொட்டும்போது காசு குடுத்து வளர்க்கிறோம்.

குழந்தைகள் வீணாப் போகக் காரணம் கைபேசி....



கைபேசி வீணா போகக் காரணம் குழந்தைகள் தான்...

மேதாவி: உங்க வீடுரொம்ப அழகா இருக்கே. எப்படி இவ்வளவு பெரிய வீடு கட்டினீங்க?

அதிமேதாவி: என் மூளையை வைச்சுத்தான்!

மேதாவி: களிமண்ணாலயா இவ்வளவு பெரிய வீடு கட்டினீங்க ரொம்ப வியப்பா இருக்கே.


## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 5 | 2 | | 4 |
| | 8 | 5 | | | | | | |
| 9 | | | 4 | | | | 5 | |
| | | | | | 2 | | | 9 |
| | 3 | 4 | | | | 1 | 8 | |
| 1 | | | 5 | | | | | |
| | 6 | | | | 3 | | | 5 |
| | | | | | | 4 | | 7 |
| 8 | | 3 | 9 | 5 | | | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 9 | 7 | 5 | 6 | 2 | 8 | 1 | 3 |
| 1 | 2 | 3 | 9 | 7 | 8 | 5 | 6 | 4 |
| 8 | 6 | 5 | 1 | 4 | 3 | 7 | 9 | 2 |
| 3 | 5 | 9 | 4 | 2 | 1 | 6 | 8 | 7 |
| 2 | 7 | 1 | 3 | 8 | 6 | 9 | 4 | 5 |
| 6 | 4 | 8 | 7 | 5 | 9 | 2 | 3 | 1 |
| 9 | 1 | 2 | 8 | 3 | 5 | 4 | 7 | 6 |
| 7 | 8 | 6 | 2 | 1 | 4 | 3 | 5 | 9 |
| 5 | 3 | 4 | 6 | 9 | 7 | 1 | 2 | 8 |



# போட்டிச் சண்டை

சிறிய குட்டையொன்றில் தண்ணீர் குடிப்பதற்குச் சிங்கமும் பன்றியும் வந்து நின்றன. குட்டையில் இருந்த நீர் இரண்டுக்கும் போதுமானதாக இல்லை. எவர் முதலில் குடித்தாலும் மற்றவருக்குப் போதிய நீர் தாகம் தீர்க்கக் கிடைக்காது.

இதை உணர்ந்த சிங்கமும் பன்றியும் யார் முதலில் நீரைக் குடிப்பது என்று யோசித்தன. சிங்கம் நீர் குடிக்கத் தொடங்கியது. பன்றியும் குடித்தது. பன்றி நீர் குடிப்பதைப் பார்த்த சிங்கம் தான் குடிப்பதை நிறுத்திவிட்டு பன்றியுடன் சண்டை போடத் தோடங்கியது. பன்றியும் விடவில்லை மும்முரமாகச் சண்டை போட்டது. சண்டை உக்கிரம். அடைந்த நிலையில் பசியுடன் இரைதேடி வந்த கழுகு ஒன்று குட்டையில் அருகில் நின்ற ஆலமரத்தில் வந்து அமர்ந்தது. மரத்தின் உச்சிக் கொப்பில் அமர்ந்து சிங்கத்தையும் பன்றியையும் பார்த்தது. இரண்டும் சண்டைபோட்டு ஒன்றை ஒன்று கொன்ற பின் அவற்றின் இறைச்சியைத் தானுண்ணலாம் என எதிர்பார்த்துக் காத்திருந்தது.

சண்டையைச் சகித்துக் கொண்டிருந்தது கழுகு. இப்போது சண்டையிட்டு களைத்துப் போன பன்றியும் சிங்கமும் தரையில் படுத்துச் சற்று வேளை இளைப்பாறத் தொடங்கின. அப்பொழுது தற்செயலாக ஆலமரப் பக்கம் மேலே அண்ணாந்துபார்த்த சிங்கம் அங்கே உட்கார்ந்திருந்த கழுகைக் கண்டது. கழுகு மரத்தின் உச்சியில் இருப்பதை ஜாடையால் பன்றிக்குக் காட்டியது. இரண்டுக்கும் இப்போது கழுகு அமைதியாகத் தங்களையே பார்த்துக் கொண்டு இருப்பதன் நோக்கம் புரிந்தது. அப்போது சிங்கம், "அதோ கழுகு. நாம் சண்டை போட்டு எப்போது இறப்போம். அப்போது தான் எமது இறைச்சியை உண்டு பசியாறலாம் என்று காத்துக் கொண்டிருக்கிறது. எமது இறப்பு கழுகுக்கு எவ்வளவு மகிழ்ச்சியைத் தருகிறது. இதனது தீய தான சிந்தனையையும் மகிழ்ச்சி அக்கழிப்பையும் நாம் எமது ஒற்றுமையால் உடைத்தெறிய வேண்டும். நாம் சண்டையிட்டு அதற்கு இரையாவதை விடச் சமாதானமாகி நண்பர்களாகி இருக்கும் நீரைப் பகிர்ந்து அருந்தி உயிர் வாழ்வோம் வா'' என்று பன்றியை அழைத்தது.

இப்போது இரண்டும் எழுந்தன. மீண்டும் சண்டை ஆரம்பமாகப் போகிறது என எண்ணிய கழுகு தனது நீண்ட சிறகுகளை அடித்து ஆர்ப்பரித்தது. ஆனால் கழுகு நினைத்தது நடக்கவில்லை. குட்டையில் இறங்கிய சிங்கமும் பன்றியும் நீரைப் பங்கு போட்டு அருந்தின. தனது தீய நோக்கம் நிறைவேறாமல் போகவே கழுகு அவ்விடம் பறந்துபோனது.

எமக்குள் ஏற்படும் பிரச்சினைகளை நேரிலே சமாதானமாகப் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும். இல்லையேல் அது எமது எதிரிக்குச் சாதகமான வாய்ப்பாகிவிடும். எமக்கு அழிவு தான்.



## வெற்றிக் கொடி

கற்பதால்
நல் பயனை
விரைவில்
காணலாம்

வெற்றி எனும்
மந்திரத்தை
மனதில்
கொள்ளுங்கள்

தோல்விகளைக்
கண்டு துன்பம்
கொள்ளாதீர்

தோல்விகளின்
முதுகில் ஏறி
விண்ணைத்
தொடுங்கள்

## ஆஸ்திரேலியா



1. உலகின் மிகப் பெரிய தீவு இந்த நாடு. மிகச் சிறிய கண்டமும் இந்த நாடுதான்.
2. இந்த நாட்டின் தலைநகரம் கான்பெரா.
3. உலகின் மிகப் பெரிய பவளத்திட்டுகள் இந்த நாட்டின் கடல் பகுதி யில்தான் இருக்கின்றன.
4. தேசிய விலங்கு கங்காரு. தேசியப் பறவை ஈமு.
5. கோலா, வாம்பட், வால்லரு போன்ற விலங்குகளும் இந்த நாட்டின் சிறப்பு உயிரினங்கள்.
6. மழைக் காடுகளும் பாலைவனமும் இங்கே இருக்கின்றன.
7. உலகிலேயே மிக அதிகமான (750) ஊர்வன உயிரினங்கள் இந்த நாட்டில்தான் இருக்கின்றன.
8. 1956ஆம் ஆண்டுமெல்போர்னிலும் 2000ஆம் ஆண்டு சிட்னியிலும் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்ற நாடு.
9. நிலக்கரியை அதிகம் ஏற்றுமதி செய்யும் நாடு.
10. புகழ்பெற்ற கிரிக்கெட் வீரர் டான் பிராட்மேன் இந்த நாட்டைச் சேர்ந்தவர்.





# சிறுவர் தினம்

- இன்று உலக சிறுவர் தினமாகும்
- பதினெட்டு வயதுக்கு உட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் சிறுவர்கள் எனப்படுவர்.
- சிறுவர்கள் நாட்டின் அருஞ்செல்வங்கள்
- இன்றைய சிறுவர்களே நாட்டின் வருங்காலத் தலைவர்கள்.
- சிறுவர்கள் நல்லவர்களாக, வல்லவர்களாக வளர வேண்டும்
- சிறுவர்களுக்குப் பல உரிமைகள் உள்ளன
- கல்வி கற்பது சிறுவரின் பிறப்புரிமை
- சிறுவர்களை எவரும் தண்டித்தல் ஆகாது
- சிறுவர்களைக் கற்க விடாது சிலர் பெரியவர்கள் போல பாவித்து வேலைக்கு அமர்த்தினார்கள். சிலர் தேவையின்றிச் சிறுவர்களைத் துன்புறுத்தினார்கள். கடும் வேலைகளைச் செய்வித்தார். இவையெல்லாம் சிறுவர் துன்புறுத்தல்கள் எனப்பட்டன.
- சிறுவர்கள் பெற்று வரும் துயரங்களைப் போக்குவதற்கு நல்ல மனமுடைய சிலர் முன் வந்தார்கள்.
- இவர்களின் முன்வருதலால் ஐக்கிய நாடுகள் சபை சிறுவர் உரிமைப் பட்டயம் ஒன்றைத் தயாரித்தது.
- இதனடிப்படையில் சிறுவர்கள் கட்டாயமாகக் கல்வி கற்கும் உரிமை அறிவிக்கப்பட்டது.
- சிறுவர்களின் தேவைகளுக்கு மதிப்பளிக்கப்பட்டது.
- சிறுவர்களின் உரிமைகளை வலியுறுத்தி ஒக்ரோபர் முதலாம் திகதியை சிறுவர் தினமாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.
- இதன்படி ஆண்டு தோறும் சிறுவர்களின் உரிமைகளை உலகுக்கு எடுத்துக் காட்டவே சிறுவர் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

# முதியோர் தினம்



- ஒக்ரோபர் முதலாம் திகதியான இன்று முதியோர் தினமாகும்
- தம் வாழ்நாளில் 60 வருடங்களைப் பூர்த்தி செய்த அனைவரும் முதியோர் எனப்படுவர்.
- இவர்கள் வயோதிபர், விருத்தாப்பியர் என்றும் கூறப்படுவர்.
- முதியோர் எமது நாட்டின் முதுகெலும்புகள் எனப்படுவர்
- இவர்கள் தம் முதுமைக்கு முன்னர் நாட்டுக்கும் வீட்டுக்கும் உழைத்த உத்தமர்கள்.
- இவர்கள் வயதானபின்பும் வீட்டில் இருந்தபடி எமக்காக உழைக்கி றார்கள்.
- இன்றைய இளைஞர்களே நாளை முதியவர்கள்.
- முதியோர்கள் முதுமையடைந்து. உடல் தளர்ந்து. ஓடியாடித் தொழில் முயற்சிகளைச் செய்ய முடியாது விடினும் அவர்கள் தம் வாழ்க்கையில் பெற்ற அனுபவ அறிவும், கற்றுக் கொண்ட கல்வி அறிவும் குறையாமல் அவர்களிடம் இருக்கும்.
- ஆதலால் முதியவர்களை எதற்கும் முடியாதவர்கள் என்று நாம் மூலையில் முடக்குதல் ஆகாது.
- முதியவர்களை மரியாதை செய்து அவர்களைப் பேணிப் பாதுகாப்ப தோடு அவர்கள் தம் வாழ்வில் பெற்றுக் கொண்ட அனுபவங்கள் மூலம் எமக்கு வழங்கும் ஆலோசனைகளின் படியும் நடக்க வேண்டும்.
- முதியோர் கட்டித்தந்த வீடுகளில் வாழ்கிறோம்.
- அவர்கள் தமது இளமைக் காலத்தில் நட்ட மரங்களில் நாமும் எமது பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் பயன் பெறுகிறோம்.
- அவர்கள் எழுதி வைத்துப் போன நல்லவற்றைக் கற்கிறோம்.
- ஆனால் அவர்கள் முதுமையடைந்ததும் அவர்களை மட்டும் புறக்கணிக்கிறோம்.
- இன்று அவர்களுக்கு முதுமை என்றால் அந்த இடம் நாளை எமக்குமே.
- இன்று ஒரு குடும்பத்தில் கணவன்- மனைவி என்று இருவரும் தொழில் புரியச் செல்கிறார்கள்.
- இந்த நிலையில் இவர்களீன் பிள்ளைகளைப் பராமரிப்பது, அன்பாக அரவணைப்பது, உணவளிப்பது, பாடசாலைக்கு அழைத்துச் செல்வோரெல்லாம் முதியோரே.
- இன்று எம்மவரில் பலர் முதியோரை மதிக்கத் தவறி அவர்களை முதியோர் இல்லங்களில் விட்டு விடுகிறோம்.
- அங்கே அவர்கள் பிள்ளைகளின் அன்புக்காக ஏங்கித் தவித்து உயிர் விடுகின்றனர்.
- முதியோரைக் கனம் பண்ணாத சமுதாயம் ஒருபோதும் உருப்படாது.
- நாம் அவர்களை மதித்துநடந்தால்தான் எமது பிள்ளைகளும் எம்மை மதித்து நடப்பவர்.
- இந்த உண்மையை மனதில் கொண்டு முதியோர் தினத்தில் மட்டுமல்ல என்றென்றும் அவர்களை மதித்து வாழ்வோம்.

# முதுமையில் விழுதல்



தங்கவடிவேலு கிருபாகரன்

"உலகில் நூறு கோடிக்கும் மேற்பட்ட மூத்தோர்கள் வாழ்கின்றார்கள். இத்தகைய எமது அனுபவப் பெட்டகங்களைப் பராமரிப்பது எமது கடமையாகும். மூத்தோர் படுக்கையில் விழுவதனால் தான் பராமரிப்பு என்பது சவாலாகின்றது. ஆம், மூத்தோர் வாரத்தின் முதலாம் நாள் இன்றாகும். அந்தவகையிலே 1991ஆம் ஆண்டு ஐ.நா ஆலோசனைக்கு அமைவான வியன்னா சம்மேளனப் பரிந்துரையின் அடிப்படையில், இலங்கையில் 2000ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டம் பேசுகின்ற பேசு பொருளின் கருவூலத்தை மனதில் ஞாபகம் கொள்வோம். இன்றைய தினத்தில் மூத்தோரின் பராமரிப்பை எளிதாக்கவல்ல விடய்மொன்றைப் பற்றிச் சிந்திப்போம்."

மூத்தோர்களின் இறுதி வாழ்க்கைப் பயணங்கள் போராட்டம் நிறைந்ததாக அமைந்துவிடுவதற்குப் பல்வேறு விடயங்கள் காரணமாக அமைந்துள்ளன. இதில் முதன்மையானது இறப்பு. இந்த இறப்புக்கு 'விழுதல்' என்ற செயற்பாடு அடிப்படைக் காரணமாக இருந்துள்ளதை ஆய்வுகள் நிரூபித்துள்ளன. 'விழுதல்' என்ற செயல்வினை இயற்கையாகவும், செயற்கையாகவும் நிகழ்கின்றது.

ஆரோக்கியம் இன்மையே இதற்கான அடிப்படைக் காரணமாகச் சொல்லப்படுகின்றது. உடல், உள, சமூக, ஆன்மிக ஈடாட்டங்கள், இடைவெளிகள் என அத்தனையும் முதுமையில் வெறுமையாகும்போது, இந்தத் தோற்றப்பாடு மேலெழுந்து நிற்கின்றது. அவ்வகையிலே மூத்தோர்கள் இந்தநிலையில் இருந்து விடுபட்டுக்கொள்ள முடியுமா என்பது பற்றி இங்கு நோக்குவோம்.

**விளைவு**

மூத்தோர்களின் உள்ளத்தில் ஏக்கமும் தாக்கமும் அலைமோதுகின்றபோது இத்தகைய தோற்றப்பாடுகள் தோன்றுகின்றன. விழுவது என்ற செயல் வினையே சாவை நோக்கிய பயணத்தின் படிக்கல்லாக அமைகின்றது. உளரீதியில் வழுவுற்ற தன்மை ஏற்படின் நிச்சயமாக எழுந்திருக்கவே முடியாது போய்விடுகிறது.


படுத்த படுக்கையில் முதுமையைக் கழிப்பது என்பது படுமோசமான நிலையாகும். கண்காட்சியில் வருவதுபோல நடைமுறைகள் அமைந்துவிடுகின்றன. என்ன நடந்தது என்று ஆயிரம் பேர் கேட்பார்கள். அவர்கள் அனைவருக்கும் நடந்த சம்பவம் தொடர்பில் விளக்கம் தருகின்ற போது ஆழ்மனதில் பய உணர்வு ஏற்படுகின்றது. இயலாமை என்பது நிரந்தரமாகிவிடுகின்றது. நண்பர் ஒருவர் இந்தநிலையைப் போக்குவதற்கு நடந்த சம்பவங்களை அப்படியே கைத்தொலைபேசியில் ஒளிப்படமாக்கி வருபவர்கள் கேட்பவர்களுக்குப் போட்டுக்காட்டிக் கொண்டார். இதன் மூலம் அவரும் விரைவாகத் தாக்கத்திலிருந்து மீண்டு எழுந்து கொண்டார். இது நவீன உலகின் புதுவழியாகத் தெரிகிறது.

**வேண்டத்தகாத மனோபாவம்**

அத்தோடு இயலாமையின் உச்சத்தில் தத்தளித்துக்கொண்டுள்ள மூத்தோரைப் பார்த்துவிட்டு சுகநலன் விசாரிக்க வருகின்ற உற்றார், உறவினர்கள் நாவடக்கம் இன்றி செயலாற்றுகின்றனர். "என்ன ஆள் இன்னும் முடியேல்லையோ?, என்ன இவ்வளவு நாளும் படுத்த படுக்கையாய் கிடக்கிறாரோ?" என்று நளின மனோபாவம் புனைகின்றனர். இங்கு முதுமையின் பேறான நோயின் தன்மையால் அசைவியக்கமின்றி இருப்போர் எழுந்து நடமாடக்கூடாது என்ற கொள்கை உருவாக்கம் முன்னிலைப்படுத்தப்படுகின்றது. இந்தநிலைமைகள் மாற்றம் பெற வேண்டும்.

**அனுபவம்**

இவ்விடம் முதியோர் இல்லத்தில் நடந்த சம்பவம் ஒன்றையும் நினைவுபடுத்துவது பொருத்தமானதாக அமையும். முதியவர்



களை இறப்பின் பின் தரிசிப்பதில் சமூகம் காட்டுகின்ற அலாதி ஆர்வம் ஆச்சரியத்திற்குரியது. ஆம், தனக்குரித்தாக இருந்த அனைத்துச் சொத்துக்களையும் ஒருவருக்கும் பகிர்ந்தளிக்காது முதியோர் இல்லத்தை நாடி வந்து தஞ்சம் புகுந்தவர் அந்தப் பெரியவர். இயலாமையின் வேதனைகளை அனுபவித்தபடி படுத்த படுக்கையாக இருந்தார். அடிக்கடி நோயாளிகள் காவு வண்டி மூலம் மருத்துவமனைக்குச் சென்று மருத்துவப் பரிசோதனைகளையும் சிகிச்சையையும் மேற்கொண்டு வந்தார். அவருக்குரிய பராமரிப்பு நடவடிக்கைகள் சிறந்த முறையிலே மேற்கொள்ளப்பட்டன.

ஆனாலும் அவருடைய உறவினர்கள் எவரும் வருகை தந்து பார்ப்பதில்லை. மூத்தோரை மதித்திருக்கத் தெரியாத உறவினர் ஒருவர் நிலைமைகளை அவதானித்துவிட்டு மிகுந்த கண்காணிப்போடும் பராமரிப்போடும் இருக்கின்ற அந்தப் பெரியவர் இறந்துவிட்டதாகக் கூறி அகமகிழ்ந்தபடி முதியோர் இல்லத்துக்கு ஓடிவந்தார். உண்மையில் சாவோடு போராடியபடியே வாழ்நாளைக் கழித்துவருகின்ற அந்த முதியவர் இறந்துவிட்டதாகக் கூறிய போது நாம் கலக்கமடைந்தோம்.

இந்தநிலையிலே வந்த நபர் முதியவர் உயிருடன் இன்னமும் இருப்பதை அறிந்துகொண்டு மிகுந்த சோகத்தில் ஆழ்ந்தார். அந்த முதியவரைப் பார்க்க மறுத்து தலைதெறிக்க ஓடினார். இப்படியான மனிதர்களின் செய்கைகள் அநாகரிகமானவை.

**அன்பும் அரவணைப்பும் வேண்டும்**

படுக்கையில் வருடக்கணக்கில் கிடப்பவர்கள் நோயின் உச்சத்தாக்கத்தால் சாவை வரவழைத்து வேதனைப்படுகின்றார்கள். முன்பு மருத்துவத்தில் கருணைக் கொலை இருந்தது. தற்போது உயிர்பிரியும் தறுவாயிலும் மருத்துவ சிகிச்சை வழங்குகின்ற நிலையே காணப்படுகின்றது. பிராணவாயு இறுதிமூச்சில் கலந்து நின்று கடைசி நிமிடங்களை நகரவிடாமல் தடைசெய்கின்றது. மருத்துவ உலகின் மறுபரிசீலனைக்கு இவ்விடயம் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியுள்ளது.

படுக்கைப் புண்கள் ஏற்படும்போது மிகக் கொடுமையான நிலை ஏற்படுகின்றது. இறப்பின் வடிவம் பிறப்பின் வடிவமாக மாறிவிடுகின்றது. உணவின்றி நீர் ஆகாரமின்றி இறுதி நிலையில் நீர் மட்டும் வேண்டப்படுகின்ற நிலை ஏற்படுகின்றது. குழந்தை பிறக்கும்போது பூமிக்காற்றுப் பட்டு தாய்ப்பாலுக்காக அழுகின்றான். அவன் மனிதனாகி இறக்கும்போது ஒரு சொட்டு நீருக்காக அழுகின்றான். அதுவும் அன்பான உறவுகளின் கரங்களால் இந்த எதிர்பார்க்கை அமைந்து நிற்கின்றது.

இங்கு முதுமையில் தனிமை மிக வலிதான கொடுமை. அதிலும் அன்பில்லா உறவுகளின் சேர்க்கை அதைவிடவும் கொடுமை.

இவ்வாறாக விழுவதன் மூலம் சாவின் கதவுகள் திறக்கப்பட்டு, இன்னல்களின் இருப்பிடம் ஏற்படுத்தப்பட்டு, உறவுகளின் மூலமாக மிலேச்சத்தனங்கள் அரங்கேற்றப்பட்டு, மனிதன் என்று சொல்லி மார் தட்டி நின்ற நிலை மழுங்கடிக்கப்பட்டு, விலங்குகளை விட மோசமான நிலை ஏற்படுத்தப்பட்டு, வாழ்க்கையில் நடந்து வந்த பாதைகள் அனைத்தும் சிதைவுற்று, படைப்பின் அர்த்தங்கள் நிலைபெறாது முதுமையின் கனவுகளில் உடைவுகள் உள்வாங்கப்பட்டு மனிதத்தின் புனிதம் எங்கு சென்றது என்ற கேள்வியோடு மூத்தோர்களின் இறுதிப் பயணம் இனியும் தொடர வேண்டுமா? சிந்தித்துச் செயலாற்றுங்கள்!

**ஆரோக்கியமான செயற்பாடுகள்**

விழுதலைத் தவிர்க்க ஒவ்வொரு மனிதனும் நேரிடையான எண்ணங்களை உள்வாங்குதல் வேண்டும். ஐம்பது முதல் அறுபது வயது வரை இந்தத் தயார்ப்படுத்தலை செய்தாலே போதுமானது. முடியாது என்ற மனோபாவத்தைத் தவிர்த்து, சாதகமானதாக அனைத்தையும் நினைக்கப்பழக வேண்டும். ஏற்றுக் கொள்ளும்; பண்பை வளர்க்க வேண்டும்.

உடலை வலுப்படுத்த உடற்பயிற்சிகள், ஆகாரக் கட்டுப்பாடு, தேவையான சிகிச்சைகளை மேற்கொண்டு உடலைக் கவனத்தோடு பேணுதல் வேண்டும். உள்ளத்தைத் திடகாத்திரமாக வைத்துக் கொள்ள மனதளவில் உறுதியும் நம்பிக்கையும் கொண்டு வாழப் பழகிக்கொள்ள வேண்டும். இதற்கு ஆன்மிகத் தேடலும், நாடலும் அருமருந்தாக அமையும். சமூக ஈடுபாடு, சமூக நிகழ்வுகளில் பங்காற்றுதல் எனச் சமூகத்துடன் ஏற்படுகின்ற ஊடாட்டம் என்பது வாழ்வில் மகிழ்வையும் நிம்மதியையும் தரும். இதுவே அகமகிழ்வாக மாறி ஆரோக்கியம் காத்திட வழிதரும். நேர்மறையான எண்ணங்களாலும், செயல்களாலும் ஆரோக்கியத்தைத் தக்க வைத்துக்கொள்ள முடியும். இதன்வழியே 'விழுதல்' என்ற நிலைப்பாட்டில் இருந்து விலகி புதிய பாதையில் பயணிக்க முடியும்.

மூத்தோர்கள் சமூகத்தில் முன்னுதாரணமானவர்கள். அவர்களின் வாழ்க்கை என்பது சமூகத்தில் புதிய அனுபவங்களைப் பறைசாற்றவல்லது. அவர்கள் கொண்ட ஒவ்வொரு அசைவும் ஆயிரமாயிரம் அர்த்தங்களைப் பரிசளிப்பது. அன்பான, பண்பான, எளிமையான, இனிமையான நிகழ்வுகளால் அலங்கரிக்கப்பட்ட மூத்தோரின் வாழ்வியல் பக்கங்கள் என்றும் உறுதியானவை என்பதில் எந்த விதமான மாற்றுக் கருத்துக்களும் இருக்கமுடியாது.

**வேண்டப்படும் பணி**

மதிப்பார்ந்த மூத்தோர்களின் சமூகப்பாதுகாப்பு, இறுதி நேரப் பராமரிப்பு போன்றவை சமூகத்தில் சவாலாகியுள்ளன. எனினும் சமூகம் சார்ந்த குடும்ப உறவுகள் நெருக்கத்துக்குரிய விதத்திலும், உருக்கத்துக்குரிய விதத்திலும் செயற்பாடுகளை அமைத்து மூத்தோரைக் காத்திருக்க வேண்டும். நாகரிகமான முறையில் நன்றிக்கடனை நினைந்து பேரன்புக்குரியவர்களாக, பண்பாளர்களாக அன்புடமை கொண்டவர்களாகப் பிள்ளைகள் மாறும் நிலைவரும்போது மூத்தோர்கள் விழுதல் என்ற நிலை வீழ்ச்சிகாணும்.

முதியவர் ஒருவர் இறந்தபின் ஒப்பாரி சொல்லி அழுது தீர்ப்பதை விடுத்து, உயிருடன் இருக்கும்போது எந்தளவு தூரம் அவரை மகிழ்ச்சிப்படுத்த முடியும் என்பது தொடர்பில் நாம் சிந்திக்க வேண்டும். முதுமையின் கண்ணீரைக் குறைப்பதற்கு எவர் ஒருவர் முயல்கின்றாரோ, அவரே சிறந்த குடிமகன் ஆவார். மூத்தோரைக் காத்தோர் இறையன்புக்கு உரியவராவார்.

*தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல்*
*வன்மையுள் எல்லாம் தலை!*

**கட்டுரையாளர்:**
**அத்தியட்சகர், அரச முதியோர் இல்லம், கைதடி.**

## வர்ண இரவு விருது 2018
## விளையாட்டுத்திணைக்களம்
## வடமாகாணம்

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ள வர்ண இரவு விருது வழங்கல் நிகழ்வுக்காக பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரி வடமாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவராகவும் அவர் பங்குபற்றிய விளையாட்டு நடப்பாண்டில் நடைபெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

வர்ண இரவு விருது வழங்கலுக்கான விண்ணப்பப்படிவம் மற்றும் யாப்பு என்பவற்றினை மாகாணக் கல்வித்திணைக்களத்திலோ அல்லது மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தரிடமோ அல்லது www.edumin. np.gov.lk எனும் இணையத்தள முகவரி யூடாக பதிவிறக்கம் செய்வதன் மூலமாகவோ பெற்றுக்கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விணணப்பங்களை பணிப்பாளர், விளையாட்டுத் திணைக்களம், வடமாகாணம், 25, செம்மணி வீதி, நாயன்மார்க்கட்டு, நல்லூர் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்க வும்.

முழுமையாக பூர்த்திசெய்யப்படாத, புகைப்படம் இணைக்கப்பட்டிராத, வங்கிப்புத்தக முன்பக்கப்பிரதி இணைக்கப்படாத மற்றும் உரிய காலப் பகுதிக்குள் அனுப்பிவைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளின் விபரங்களை 30.11.2018 ஆந் திகதி தொடக்கம் www.edumin.np.gov.lk எனும் இணைய முகவரியில் பார்வையிடலாம்.

**விண்ணப்ப முடிவுத்திகதி:- 31.10.2018**

**பணிப்பாளர்,**
**விளையாட்டுத் திணைக்களம்,**
**வடமாகாணம்.**

(in.7929) (13)

**பந்தல் விற்பனைக்கு**
**100 அடி சொக்கட்டான்**
**பந்தல்** மற்றும்
**மணவறைகள்** விற்பனைக்குண்டு.
077 367 8019 இளவாலை

**நாகபூஷணி திருமணசேவை**
மிகப் பொருத்தமான மணமக்கள்
ஜாதகங்கள் உடன் தெரிவு
செய்து தரப்படும்.
**257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**021 222 9306, 077 138 7596**

## மு/புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு பெண்கள் தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## பொருள் கொள்வனவுக்கான கேள்விப்பத்திரம்

மு/புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு பெண்கள் தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பயனாளிகளுக்கு வழங்குவதற்கு பின்வரும் பொருள்கள் கொள்வனவு செய்ய வேண்டிய தேவை காணப்படுவதால் அதற்கான கேள்விப்பத்திரம் கோரப்படுகிறது.

1. **Specification Of Electric Moter**

| | |
|---|---|
| Product | :- Electric Motor |
| Size Inches | :- 2x2 |
| Max Head Feet | :- 80 |
| Out Put | :- GPh-300<br>AT Feet Hear-60 |
| HP | :- 2 |
| Amp | :- 9.4 |
| RpM | :- 2850 |

2. **Specification Of Certification Pump**

| | |
|---|---|
| Product | :- Centric Water Pump |
| Size inches | :- 3 |
| Max Head Feet | :- 54 |
| Output | :- GPH -10200<br>At Feet Head – 25 |
| HP | :- 3 |
| RPM | :- 3000 |
| Fuel Type | :– Kerosene |

3. **Specification Of Submersible Pump**

| | |
|---|---|
| Delivery Pipe Diameter | :- 11/2" |
| Maximum Total Head | :- 20M |
| Horse Power | :- 1.0 |
| Phase | :- Single |
| Mid Range Output | :- 3200 GPH |
| Make | :- Showfou – Taiwan |
| Model | :- SF– SHA112N |
| Warranty | :-One Year |

**நிபந்தனைகள்**

01. கொள்வனவுக்கான கூறுவிலைகள் அனைத்தும் மூடிய கூறுவிலைகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.
02. கொள்வன்வுக்கான பொருட்கள் அதில் குறிப்பிட்ட விபரக்குறிப்புக்களுக்கு அமைவாக (Specification) முழுமையான விவரங்களை உள்ளடங்கியதாக இருத்தல் வேண்டும்.
03. மேற்படி கொள்வனவுக்கான கேள்விப்பத்திரம் 2018.10.15ஆம் திகதி பி.ப 2.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். பிந்திய கேள்விப்பத்திரம் எதுவும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. கேள்விப்பத்திர உறைகள் 2018.10.16ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு கேள்வி கேட்பவர்கள் /அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
04. கேள்விக்கான பத்திரங்கள் பிரதியுடன் ஒவ்வொரு கேள்விக்கும் வெவ்வேறு உறையிலிட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் வழங்கப்படும் பொருளின் விவரம் குறிப்பிடப்படல் வேண்டும்.
05. இவ் கேள்விப்பத்திரமானது 2018.10.15ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் மு/புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு பெண்கள் தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையாளருக்கு கிடைக்க தக்கதாக **பொதுமுகாமையாளர், மு/புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு பெண்கள் தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கம், A 35, பரந்தன் பிரதான வீதி, கைவேலி புதுக்குடியிருப்பு.** என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலக வேலை நேரத்தில் நேரிலோ இதற்கான கேள்விப் பத்திரத்தை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பொதுமுகாமையாளர்**
**மு/புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு பெண்கள்**
**தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கம்**

(AKN/546)(10/15)

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
21 . 01 . 1949



ஆண்டவன் அடியில்
30 . 09 . 2010

### அமரர் Dr.K.V. துரைராஜா (அகஸ்தியர்)

(ஓய்வுபெற்ற சுகாதார முகாமைத்துவ உதவியாளர் - யாழ்.போதனா வைத்தியசாலை,
ஸ்தாபகர் - அகஸ்தியர் வைத்தியசாலை & மருந்தகம்
(சித்த ஆயுள்வேத வைத்தியர்)

**திதி: சப்தமி (01.10.2018)**

எங்கள் பாசமுள்ள அன்பின் உருவே! பண்பின் பிறப்பிடமே! ஆண்டுகள் எட்டு ஆனாலும் உங்கள் பிரிவால் எம் நெஞ்சம் நெஞ்சுருகி கண்ணீர் சிந்துகின்றோம் அப்பா! அப்பா என்று உறவாட யாரும் இல்லை. அன்பான வார்த்தை பேசவும் நீங்கள் இல்லை அப்பா– ஆயிரம் சொந்தங்கள் வந்து நின்றாலும் அன்பான எங்கள் அப்பாவுக்கு நிகராகுமா? தூய வாழ்க்கை நடத்தி வந்தீர்கள் அப்பா! நமக்கெல்லாம் உற்ற துணையாய், நிழலாய் நம்மை இணைக்கும் ஓர் பாலமாய் இருந்தீர்கள் அப்பா! காலமெல்லாம் உங்களுக்காக கண்ணீர்ப் பூக்கள் சொரிகின்றோம். அம்மாவும் நாங்களும் உங்கள் உயிரோடு உயிராகக் கலந்த உறவே. என் உயிர் அப்பா! தங்கள் உயிருடன் நான் சங்கமிக்கும் நன்னாள் வரும்வரை உங்கள் நிஜமான நினைவுகள் என் உள்ளத்துள் வாழும், வளரும். உங்கள் ஆத்மா சாந்தியடைய நானும் உங்களது பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் சுட்டி வேரகத்து அம்பாளை மனதார வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
17 . 05 . 1983



ஆண்டவன் அடியில்
27 . 09 . 2014

### அமரர் Dr.T. கோபிநாத் (J.P)

(உரிமையாளர் - **அகஸ்தியர்** வைத்தியசாலை & மருந்தகம் -
சித்த ஆயுள் வேத வைத்தியர்)

**திதி: திருதியை (11.09.2018)**

பாசமுள்ள தாய்க்கும், தந்தைக்கும் உயிருக்கும் உயிரான மகன் நீ, அன்பு நிறைந்த அக்காவுக்கு செல்லமான தம்பி நீ, பாசம் நிறைந்த தம்பிமாருக்கு அருமையான அண்ணா நீ, உன் பாச மலர்களிலே பூத்த அழகான மருமக்களுக்கு அன்பான பெரிய மாமா நீ, ஐயா கோபி இப்படியாக எல்லாருடைய இதயத்தையும் கொள்ளை கொண்டவன் நீ. ஆண்டுகள் நான்கு ஆனாலும் இதைப்போல் எத்தனை ஆண்டுகள் ஆனாலும் எந்நாளும் எந்நேரமும் எங்கள் இதயத்தில் இருப்பாய் கோபி, உன்னுடைய அன்பான சிரிப்பையும் உன்னையும் பார்க்க என்னுள்ளம் ஏங்குதடா மகனே, கோபி உன்னுடைய அம்மா உன் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென்று நீ வணங்கிய தெய்வங்களிடம் வேண்டுகிறேன் மகனே. உன் ஆத்மா சாந்தியடையட்டும்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்**

**பிராமணோடை**
**கோப்பாய் வடக்கு, கோப்பாய்.**
**077 100 7567**

**குடும்பத்தினர்.**

(CS/20186)(11)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஆசைக்கிளி அன்பு



இல.16/1. சிவன்பண்ணை வீதி. கொட்டடி. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆசைக்கிளி அன்பு .நேற்று (30.09.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்புவின் அன்பு மனைவியும். விக்கினேஸ்வரன் (ஜேர்மனி). விசயச்சந்திரன் (பிரான்ஸ்). விமலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2018) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**இல.16/1, சிவன்பண்ணை வீதி,**
**கொட்டடி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

(CS/20234)(11)

---

தோற்றம் 27 . 07 . 1945



உதிர்வு 19 . 09 . 2018

## பொன்னுத்துரை தனபாலசிங்கம்

(மெக்கானிக்)

யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியைப் பிறப்பிடமாகவும். ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை தனபாலசிங்கம் (மெக்கானிக்) கடந்த 19.09.2018 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் புவனேஸ்வரி (பிரான்ஸ்) தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும் மெர்லின் ரோஷ்மணியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2018) திங்கட்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:-**
**முரளீஸ்வரபவான் (முரளி-மகன்)**
**தயாளன் கூல்பார் மற்றும்**
**குடும்பத்தினர்.**

**32/2, 3ஆம் ஒழுங்கை,**
**மின்சாரநிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்.**

---

பிறப்பு 28 . 02 . 1935



இறப்பு 30 . 09 . 2018

## திருமதி சத்தியபாமா இராமநாதன்

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சத்தியபாமா (இந்திரா) இராமநாதன் 30.09.2018 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குலத்துங்கம் - சௌந்தரநாயகி தம்பதியரின் அன்பு மகளும். காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற இராமநாதனின் பாசமிகு மனைவியும். சுகந்தி. முகுந்தன் (Executive Foreman - Built Element Ltd (Mascons). சாந்தன் (பேராசிரியர்- பேராதனை பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயும். காலஞ்சென்ற சீதாதேவி மற்றும் வில்லவராஜா. நாகச்சந்திரன். இராஜகுலதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும். சுகந்தி. ஜெயந்தி (இளைப்பாறிய ஆசிரியை - யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தி.) ஆகியோரின் அன்பு மாமியும். வத்சலன். திவ்சலன். மதுறமி - ரெஸலின். நிறோஷா, சானுஜா, கஜாணனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2018) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கனகசபை வீதி,**
**மானிப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(c 7956)

**077 790 9318. 077 472. 7361**

---

# சிங்கள வகுப்புகள் ஆரம்பம்

## சாவகச்சேரி - மீசாலையில்

அரச உத்தியோகத்தர்கள் மற்றும் க.பொ.த உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவர்கள் பதிவுசெய்யவும்

இடம் : இராமாவில் மீசாலை வடக்கு கொடிகாமம். (கொடிகாமத்திலிருந்து 2 ஆவது புகையிரதக் கடவை வீதி –A9 வீதியிலிருந்து 50 m தூரம்)

**ஆரம்பம் : 06.10.2018 சனிக்கிழமை முற்பகல் 10.30 மணி**

ஆசிரியர்: **என் திருக்குமாரன் - MA**
நீதிமன்ற உரைபெயர்ப்பாளர். சத்தியப்பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர், சிங்கள மொழிவளவாளர்.

(in.7953) (13) **077 417 1382**

---

# வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்

## ஆதனப் பெயர்மாற்றம்

## 278, டச்சுவீதி, வட்டாரம் - 02

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட வட்டாரம் 02, டச்சு வீதியில் உள்ள இல. 278 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் நாராயணப்பிள்ளை கதிரவேலு என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனமானது நாகலிங்கம் சிவசுப்பிரமணியமும் பெண் கனகம்மாவும் ஆகியவர்கள் தமது சகோதரியும், மைத்துனருமான நாராயணப்பிள்ளை கதிரவேலுவுக்கும் பெண் மனோன்மணிக்கும் சொந்தமாக விருந்து பின்னர் வாய்ச்சொல் மூலமாகத் தமக்கு குறித்த ஆதனத்தை நன்கொடையாக வழங்கியிருந்தார்கள் எனவும் குறித்த ஆதனம் 40 வருடங்களுக்கு மேலாக தங்களால் ஆட்சிசெய்யப்பட்டு வந்தது எனவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு மு.சபாநாதன் முகதாவில் 4548/14.06.1997 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியுள்ளார்கள்.

சிவசுப்பிரமணியம் கணேஸ்வரன் பிரசித்த நொத்தாரிசு து.பாக்கியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2700/ 27.03.2000 ஆம் இலக்க உறுதியால் குறித்த நாகலிங்கம் சிவசுப்பிரமணியமும் பெண் கனகம்மாவும் ஆகியவர்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்தின் ஒருபகுதி ஏற்கனவே அறுதியாக விற்கப்பட்ட நிலையில் குறித்த சிவசுப்பிரமணியம் கணேஸ்வரன் ஆகியவர் ஆதனப் பெயர்மாற்றத்துக்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரி விப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சிவசுப்பிரமணியம் கணேஸ்வரன் ஆகியவருக்குப் பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தவிசாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை**

(CS/20231)(11)

---

# வாகனம் விற்பனைக்கு

3 கியூப் TATA டிப்பர். 6 Wheel லங்கா அசோக் லேடன் லொறி என்பன விற்பனைக்குண்டு.

**தொடர்பு -075 656 3907**

---

**ES Printers**

**மக் பிரிண்ட் (MUG) 450/=**






**021 492 7471, 021 492 7472**

esprintersjaffna@gmail.com

**357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

---

# கேள்வி அறிவித்தல்

# வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை - வட மாகாணம்

## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் (PSDG)

01. பிரதேச சபையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது
02. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு. வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை. தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட வீதி வேலைக்காக கோருகின்றார்.
03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
04. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு. சித்தி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் 04/2016(i)ம் இலக்க 30.09.2016ஆம் திகதிய பொதுச்சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) வீதி வேலை செய்வதற்கான கீழே அட்டவணையில் காட்டப்பட்டபடி பொருத்தமான தரத்தில் பதிவினை மேற்கொண்டிருப்பதுடன் வடக்கு மாகாணத்திற்குள் செல்லுபடியான வியாபார/கம்பனி பதிவினையும் கொண்டிருத்தல் வேண்டும்
05. தேவையான தகமைகள். கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர்/ செயலாளர். வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை. நேரியகுளம் வீதி. நெளுக்குளம். வவுனியா (தொலைபேசி: 0242225737. தொலைநகல்- 0242050067. மின்னஞ்சல் npvstps@yahoo.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 15.10.2018 ஆம் திகதி வரை மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் காலை 09.00 மணி முதல் மாலை 14.00 மணி வரை கேள்விப் ஆவணத்தினை பார்வையிடலாம்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணங்களை ஆங்கில மொழியில் **தலைவர்/ செயலாளர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா** எனும் இடத்திலிருந்து **01.10.2018** திகதியிலிருந்து **15.10.2018** வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000/= (வரிகள் நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாக செலுத்தப்பட வேண்டும்.
08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர்/ செயலாளர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம் வவுனியா எனும் முகவரிக்கு 15.10.2018 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு** முன்பதாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது. கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
09. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 49 (நாற்பத்தி ஒன்பது நாள்கள் 02.12.2018) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்
10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ)மில்லியன் | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/43(5)/5.5 /05-14/18 | கற்குளம் படிவம்-02, படிவம்-03, படிவம்-04 உள்ளக வீதி கிரவலிடல் | 3.457 மில்லியன் | 45 நாள்கள் | C8 வீதி வேலை | 35,000.00 | 02.12.2018 |

11. கேள்வி கோரல் பற்றிய முன்னோடிக் கூட்டம் 12.10.2018 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபைக் கட்டடத்தில் நடைபெறும் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்தச் செலவில் கலந்து கொள்ள முடியும்.

**தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு**
**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை,**
**நெளுக்குளம். வவுனியா**
**01.10.2018**

(C/7734)(11)

# பனைமர தேசத்தில் சேமிப்பின் ஒளிக்கீற்று




மிகவும் சிறப்பான செயற்திறன் வாய்ந்த வங்கிச் சேவையை வழங்குவதற்காக இன்று தொடக்கம் கீழ்வரும் புதிய முகவரிகளில் இயங்கும் இலங்கை வங்கிக் கிளைகளுக்கு உங்களை அன்புடன் வரவேற்கிறோம்

**மல்லாவி நகரில் எமக்கான இடத்தில் தொடங்கும் இலங்கை வங்கியின் புதிய கிளை துணுக்காய் வீதி, மல்லாவியிலும்**

இளவாலை இலங்கை வங்கிக் கிளை **இன்று தொடக்கம் பண்டத்தரிப்பு நகரில் சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பிலும்**

ஆண்டான் குளம் இலங்கை வங்கிக் கிளை **இன்று தொடக்கம் அடம்பன் சந்தி, அடம்பனிலும் இன்றிலிருந்து இயங்கும்**

**இலங்கை வங்கி** ATM / CDM **தன்னியக்க வங்கியியல் சேவை கிளை** பிரதேச செயலகம், பூநகரியில் புதிதாக திறக்கப்படும் **இச்சேவை 365 நாட்களும் 24 மணிநேரம்**

1975 BOC CALL CENTRE

www.boc.lk

தலைமை அலுவலகம், "இலங்கை வங்கி சதுக்கம்" இல. 01, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 01.

இலங்கைவங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## கண்ணீர் அஞ்சலி

எமது போதனா வைத்தியசாலையில் விடுதிச்சகோதரியாக கடமை-புரியும் **திருமதி நிர்மலா இன்பராஜா** அவர்களின் அன்புத்தந்தையார்

### அப்புத்துரை சிவராஜா

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரிக்கூட்டுறவுச்சங்கம், யாழ்ப்பாணம்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி சூரியகலா ஸ்ரீஸ்கந்தராஜா**
அவர்களின் அன்புத்தாயார்
திருமதி **தற்பரானந்தம் பாக்கியம்**
அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதா-பங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிச்சங்கம், யா /யாழ் இந்து ஆரம்பபாடசாலை.**

## 15 ஆம் ஆண்டு நினைவு நாள்

பிறப்பு 07 . 06 . 1951



இறப்பு 01 . 10 . 2003

### திருமதி சறோஜினி தங்கலிங்கம்

எங்களுக்காக பல அர்ப்பணிப்புகள்
செய்த அன்னையே! அதில்
ஒன்றைக்கூட எங்களை
செய்யவிடாமல் பாதியில்
சென்றதை நினைத்து
தினம் வருந்துகிறோம் தாயே!

**உமது பிரிவால் துயருறும்**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்**

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி சண்முகநாதன் (கனகேஸ்வரி)



யாழ். கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி சண்முகநாதன் கடந்த (29.09.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி கனகம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி உடையார் செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் கலாவாணி, கிருபாகரன்(U.K), ஜெயவாணி (இளைப்பாறிய ஆசிரியை), பிரிதர்சினி (U.K), பிரபாகரன் (U.K) ஆகியோரின் அன்புத்தாயும் மாசிலாமணி, பத்மநாதன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் பாலகுமாரன், நளாயினி, விவேகானந்தன், ராகவன் ஆகியோரின் அன்பு மாமியும் கஜனி, கஜானந்தா, மிதுன், திவ்வியன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.10.2018) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல 28 /33, மணல்தரை ஒழுங்கை, கந்தர்மடம்.** **தகவல் : குடும்பத்தினர்.**

## வயற்காணியும் தோட்டக்காணியும் விற்பனைக்கு

வடமராட்சி கிழக்கு, குடத்தனைச் சந்திக்கு அருகில் குடத்தனை வயல், குடத்தனைக் காடு என்னும் நிலப்பரப்பில் 10 ஏக்கர் காணி உடன் விற்பனைக்கு உண்டு. **தொடர்பு :**

**077 956 1525, 021 226 3130, 077 193 0232**

## SPOKEN ENGLISH
### WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை A/L எழுதியோர், பல்கலை புகுமுக மாணவர்கள்
இளைஞர், யுவதிகள் மற்றும் தொழில்புரிவோருக்கான

**3 மாத சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 13.10.2018 சனி**

| | | | |
|---|---|---|---|
| 1. காலை | 08.00-10.00 | 3. பி.பகல் | 01.00-03.00 |
| 2. காலை | 10.00-12.00 | 4. மாலை | 03.00-05.00 |

வாரநாள் (செவ்வாய், வியாழன்) பயிற்சி ஆரம்பம் 03.10.2018
பிரிவு1: 08-10 பிரிவு2: 10-12 பிரிவு3: 03-05

கலைத்தலுக்கு தேவையான முறைமையான ஆங்கிலம் கற்பிக்கப்படும்
07.10.2018 ஞாயிறு வரை மட்டுமே பதிவுகளைமேற்கொள்ளமுடியும்.

SAAMSON 403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோயிலடி, யாழ்நகர். 021 320 3313 077 621 4567

## ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்
### வலிகாமம் தெற்கு பிரதேசசபை, உப அலுவலகம், சுன்னாகம்
### வட்டாரம் - 01, வருசப்புலம் வீதி, ஆதன இல. 29/23

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் உப அலுவலகத்துக்குட்பட்ட வரியப்புலம் சுன்னாகம் என்னும் முகவரியில் அமைந்துள்ள ஆதனமானது எமது ஆதனப் பதிவேட்டில் வட்டாரம் - 01, வருசப்புலம் வீதி, ஆதன இல. 29/23 இல் A.வைத்திலிங்கம் என்னும் பெயரில் உள்ளது.

பிரசித்த நொத்தாரிசு A.நாகேந்திரா முகதாவில் வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப்பகுதி உடுவில் கோவிற் பற்று சுன்னாகம் இறை, வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவு, J/195 கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள "வரிசைப்புலம் கிணற்றடி" எனக் குறிப்பிடப்பட்டுள்ள சொரியலாய் நிலப்பரப்பு 04 உடைய ஆதனமானது 1942.07.07 ஆம் திகதிய 206 ஆம் இலக்க உறுதி மூலம் வேலு சின்னத்தம்பி பெண் சேதுப்பிள்ளை என்பவரால் சீதன உறுதியால் வழங்கப்பட்டுள்ளது.

**அதன் எல்லைகளாக**

கிழக்கு - வரதராஜன் பெண் குமுதினிக்கும் சிவபாலன் பெண் சரோஜினிக்கும் உரிய ஆதனம்
வடக்கு - சுந்தரலிங்கம் பெண் வில்வராணியின் ஆதனம்
மேற்கு - ஒழுங்கை
தெற்கு - ஒழுங்கை

மேலும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஆ.சண்முகநாதன் அவர்களால் 2018.08.28 இல் அளந்து தயாரிக்கப்பட்ட 2355 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 நிலப்பரப்பு 03 குளி 07.93 ஆகும். இவ் ஆதனத்தைப் பிரசித்த நொத்தாரிசு A.M திருவாதவூரன் அவர்கள் மூலம் 30.04.2000 ஆம் திகதிய 131 ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதியால் வருசப்புலம் சுன்னாகம் என்னும் இடத்தைச் சேர்ந்த வைத்திலிங்கம் குணாளன் ( 501803510V) என்னும் பெயரில் பெயர்மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித்துள்ளனர்.

எனவே இப்பெயர்மாற்றம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் எவராவது இருந்தால் இன்றிலிருந்து 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு எவரும் ஆட்சேபனை தெரிவிக்கவோ உரிமை கோரவோ இல்லையெனில் குறித்த ஆதனமானது வைத்திலிங்கம் குணாளன் என்னும் பெயருக்குப் பெயர்மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுக்கும் வலிகாமம் தெற்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தவிசாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.** **27.09.2018**

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை பாஸ்கரன்



இரண்டாம் மைல் கல் கச்சாய் வீதி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பாஸ்கரன் (29.09.2018) சனிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சு.பு.கணபதிப் பிள்ளை மற்றும் யோகாம்பிகை தம்பதியினரின் அன்பு மகனும் பாலயமுனாவின் அன்புக் கணவரும் புகழ்யா, தர்மியா, பாலுசங்கர் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கலைவாணி, கலைச்செல்வி, யோகேந்திரன் (லண்டன்), அனுசியா (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோ-தரரும் நாகேஸ்வரன், அருந்திரகுமார், பூபாஜினி (லண்டன்), வேலழகன் (நோர்வே) ஆகியோரின் அன்பு மைத்துனரும் நரேஸ், கஜானி ஆகியோரின் அன்பு மாமனாரும் அவினேஷ், மீனாட்சி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**அ.கலைச்செல்வி (செல்வி, சகோதரி))**
**கவிஞர் த. நாகேஸ்வரன்**

### இளைஞனை...

செய்துள்ளனர். ஆடியபாதம் வீதியில் இளைஞன் ஒருவனை 4 உந்துருளிகளில் வந்த 8பேர் கொண்ட கும்பல் விரட்டியுள்ளது. தாக்குதல் கும்பலிடமிருந்து தப்புவதற்காக இளைஞன் ஓடியுள்ளார். தாக்குதல் நடத்த வந்த கும்பலும் கலைத்துச் சென்றுள்ளது. தப்பி ஓடிய இளைஞன் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்துள்ளார். கிணற்றுக்குள் கல் எறிந்து இளைஞன் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இளைஞனை குழு ஒன்று விரட்டிச் செல்வதை அவதானித்த கோப்பாய் பொலிஸாரும், கலைத்துச் சென்றிருந்தனர். இளைஞன் மீது கிணற்றுக்குள் கல் எறிந்து தாக்குதல் நடத்தப்படுவதை அவதானித்த பொலிஸார், தாக்குதல் நடத்திய குழுவை பிடிப்பதற்கு முயற்சித்தனர். 4 உந்துருளிகளிலும் அவர்கள் தப்பி ஓடியுள்ளனர். விரட்டிச் சென்ற பொலிஸார், ஒரு உந்துருளியை உதைந்து விழுத்தி அதில் பயணம் செய்த மூன்று பேரைக் கைது செய்துள்ளனர். அவர்களிடமிருந்து ஒரு வாள் மற்றும் கத்தி மீட்கப்பட்டன. (5,8,105)

### அரசியல்...

காலை 7 மணி முதல் மாலை 7 மணிவரை வவுனியா பண்டாரவன்னியன் சிலைக்கு முன்பாக இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் போராட்டத்தில் தமிழ் அரசியல் தலைமைகள், மாகாண சபை உறுப்பினர்கள், அரசியல் கட்சிகள், உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்கள், பொது அமைப்புக்கள், பொது மக்கள் என அனைவரும் எந்தப் பேதமும் இன்றிக் கலந்துகொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள 10 அரசியல் கைதிகள் இரு வாரங்களுக்கு மேலாகத் தொடர் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் தம்மைக் குறுகிய கால மறுவாழ்வின் பின்னர் விடுவிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். உணவு ஒறுப்புப் போராட்டத்தால் அவர்களின் உடல் நிலை மோசமடைந்து செல்கின்றது. அவர்களில் இருவர் அநுராதபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ற-110)

### மேலும்...

ஒறுப்புப் போராட்டத்தில் குதித்துள்ளனர். 9 ஆண்டுகளுக்கு மேலாக சிறைவாசம் அனுபவித்து வரும் தம்மை குறுகிய கால மறுவாழ்வு வழங்கியாவது விடுவிக்குமாறு கோரி கடந்த மாதம் 14ஆம் திகதி 8 அரசியல் கைதிகள் உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர். அதன் பின்னர் மகசின் சிறைச்சாலையிலிருந்து வழக்குக்காக அநுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட இரண்டு தமிழ் அரசியல் கைதிகளும், உணவு ஒறுப்புப் போராட்டத்தில் இணைந்து கொண்டனர்.

இந்தநிலையில், அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மேலும் இரண்டு தமிழ் அரசியல் கைதிகள் நேற்றுத் தொடக்கம் உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

ம.சுலக்சன், இ.திருவருள், சூ.ஜெயசந்திரன், இரா.தபோரூபன், சி.தில்லைராஜ், இ.ஜெகன், சி.சிவசீலன், த.நிமலன் ஆகியோர் கடந்த 14ஆம் திகதியிலிருந்தும், மகசின் சிறைச்சாலையிலிருந்து அநுராதபுரம் சிறைச்சாலைக்கு கொண்டுவரப்பட்ட ந.சபேஸ்வரன் மற்றும் அப்துல் ஹமீட் உமர்காயாய் இருவரும் கடந்த 23 ஆம் திகதியிலிருந்தும், பு.அரவிந்தன், ந.சிவலிங்கம் ஆகிய இருவரும் நேற்றுமுதலும் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (5)


### தமிழ்க்...

தெரிவித்தார்.

கொழும்பு ஆங்கில ஊடகத்துக்கு அவர் வழங்கிய செவ்வியில் மேலும் தெரிவித்துள்ளதாவது, எனது செயற்பாடுகள் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள சிலர் மகிழ்ச்சியடையவில்லை என்பது எனக்குத் தெரியும். நான் திரும்பத் திரும்ப, ஒரு நாடாளுமன்ற உறுப்பினரால் விமர்சிக்கப்படுகிறேன். முரண்பாட்டு அரசியலைத் தொடர நான் விரும்பவில்லை.

எனக்கு அளிக்கப்பட்ட ஆணையின் படியே செயற்பட்டிருக்கிறேன். எனது ஆற்றலைக் கொண்டு, அதனைச் செய்திருக்கிறேன். எமது மாகாணசபையின் ஆயுட்காலம் முடிவதற்கு முன்னர், அதன் செயற்பாடுகள் தொடர்பான அறிக்கையை வெளியிடுவேன் என்றார்.

அதேவேளை, புதிய கூட்டணியை அமைப்பது குறித்து முதலமைச்சர் விக்னேஸ்வரனுடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருவதாகவும், அவரிடம் இருந்து தமக்கு சாதகமான பதில் கிடைத்துள்ளது என்றும் ஈபிஆர்எல்எவ் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். (5)





# இது புதுசு

பெண்களுக்கான புதிய வகைக் 'கைப் பேர்ஸ்' அறிமுகமாகி யுள்ளன. இவை ஆயிரத்து 950 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

## தமிழ்...

மக்களின் வாழ்வாதார மேம்பாட்டு விடயங்களில் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் தல்லமையிலான மாகாணசபை கோட்டைவிட்டு விட்டது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள் ளார்.

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கடந்த 5 ஆண்டுகளில் தமிழ் மக்களின் அரசியல் வேணவாக்களை உரத்துச் சொல்லியிருக்கின்றார் என்பது எனது கணிப்பு. மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில், நெருக்கடியான பயங்கரமான அந்தச் சூழலில் அவர் தனது ஆளுமையைப் பயன்படுத்தி, பன்னாட்டுச் சமூகத்துக்கு அவர் மேல் இருந்த எண்ணத்தைப் பயன்படுத்தி மிகச் சிறப்பாக வேணவாக்களை உரத்துச் சொல்லியுள்ளார். போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் வாழ்வாதார மேம்பாட்டுக்காகவும் அவருக்கு ஆணை வழங்கியிருந்தார்கள். துரதிஷ்டவசமாக அந்த விடயத்தில் எதுவுமே அவர்கள் செய்யவில்லை - என்றார்.

(5,8,105)

## மானிப்பாய்...

கூறுகின்றனர்.

மானிப்பாய் செல்லமுத்து மைதானத்துக்கு அருகில் உள்ள வீடொன்றின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. சத்தத்தைக் கேள்வியுற்று அங்கு வந்தவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. இனந்தெரியாத குழுவினர் இதனை முன்னெடுத்திருந்தனர்.

ஆவாக் குழுவிலிருந்து பிரிந்து தனுரொக் குழுவில் செயற்பட்ட ஒருவரது வீட்டின் மீதே தாக்குதல் நடத்தியதாகப் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

சம்பவத்தையடுத்து நேற்றுமுன்தினம் இரவு தொடக்கம் யாழ்ப்பாணத்தின் வலிகாமம் பகுதியில் பல இடங்களில் பொலிஸார், சிறப்பு அதிரடிப் படையினர் சோதனை மற்றும் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் வட்டுக்கோட்டைப் பகுதியிலுள்ள ஆலய வளாகத்திலிருந்து சந்தேகநபர் ஒருவரை நேற்று அதிகாலை கைது செய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். அவரிடமிருந்து 2 வாள்கள் மற்றும் ஒரு உந்துருளி என்பன மீட்கப்பட்டுள்ளன.

தனுரொக் குழுவைச் சேர்ந்தவர் கட்டாரில் தற்போது உள்ளார் எனவும் அவரை இங்கு வரவைப்பதற்காகவே அவரது வீட்டின் மீது தாக்குதல் நடத்தியதாக, கைதான சந்தேகநபர் பொலிஸ் விசாரணையில் தெரிவித்துள்ளார். மேலும் 8 பேர் இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டதாகவும் அவர் பொலிஸாருக்கு வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

(5,7,26)

ராசி அதிர்ஷ்டம்
திகதி 30.09.2018 | வெற்றி வாரம் 2374 | வர்ணம் ஊதா
சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 20 32 37 50
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 12, 246, 076/=
2018.10.02 ம் திகதி செவ்வாய்க் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 862
சீட்டிழுப்பு திகதி 2018.09.29 சனிக்கிழமை
C 02 15 42 54
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,756,788/-
ஊதா நிற டிக்கட்டுகள் 2018.10.01ம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

கோடிபதி சனிதா KOTIPATHI SHANIDA
சீட்டிழுப்பு வாரம்: 348
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2018.09.30
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 96,415,273/-
ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்
J 07 34 66 80
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 389
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2018.09.30
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 55,827,530/-
வெற்றி இலக்கங்கள் 13 17 51 61
ஆங்கில எழுத்து R
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

# மரண அறிவித்தல்

## சேவியர் டொன்பொஸ்கோ (பாபு)



யாழ்ப்பாணம் குருநகரைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் பரீஸை வசிப்பிடமாகவும் கொண்ட சேவியர் டொன் பொஸ்கோ (பாபு) கடந்த 18.09.2018 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சேவியர் - நவமணி தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவரான சூசைப்பிள்ளை (பாபு) மற்றும் சின்னமலர் தம்பதிகளின் அன்பு மருமகனும், ஸ்ரேல்சியா தயாவின் அன்புக் கணவரும், ஸ்ரெபீனா, ஷிரோமி, செவ்றின் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ராஜன், நிர்மலா, கலா, ஜொய்லா ஆகியோரின் அன்புச் சகோதரரும், வவா, வின்சலோஸ், செல்வம், றெஜிஸ், றீடா, அருணா, சுரேஸ், ஜதீஸ், மதன், றஜின், சுதா, சுதர்சன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (01.10.2018) திங்கட்கிழமை பிரான்ஸில் நடைபெறும். அன்னாரின் ஆன்மசாந்திக்கான இரங்கல் திருப்பலி நாளை (02.10.2018) காலை 5.45 மணிக்கு குருநகர் புதுமை மாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். திருப்பலியைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் ஆன்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.445, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.** (CS/20233)(11)

தகவல்
**நிர்மலா வின்சலோஸ் (சகோதரி)**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்





செல்வி
**மேனகா கிருஷ்ணபிள்ளை**
(B.A, PGDE MED, SLPS - 2, PRIMARY SP.Trd)
(நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை)

யா /நாரந்தனை கணேச வித்தியாசாலை. கொழும்பு மாநகரின் பாடசாலைகளிலும் ஆசிரியராகவும். கொழும்பு பிராந்திய நிலைய திறந்த பல்கலைக்கழக ஆலோசகராகவும் பின் கொ /விபுலானந்த வித்தியாலயம். கொ/ இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி பிரதி அதிபராகவும். யாழ். மண்ணில் யா/ வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை உபஅதிபர். பிரதி அதிபராக கடமையாற்றி பலரது பாராட்டுக்களைப் பெற்று இன்று 01.10.2018 இல் அகவை அறுபதில் ஓய்வு பெறும் நாரந்தனை மண்ணின் புதல்வியை பாராட்டுவதுடன் தனது கிராமத்தில் சமய. சமூகப்பணிகளில் நாரந்தனை மக்கள் சங்க பொருளாளராகவும். நாரந்தனை கல்வி நிலைய ஆலோசகராகவும் செயற்பட்டுவரும் வேளையில் தொடர்ந்து இச்சேவையை செய்ய வேண்டும் என வாழ்த்துவதுடன் மேலும் பல்லாண்டு காலம் வாழ இறைவனை வேண்டுகின்றோம்.

**நாரந்தனை மக்கள் சங்கம், நாரந்தனை இலவசக்கல்வி நிலையம், நாரந்தனை.**

# விதை உருளைக்கிழங்கு மானியம் கிடைப்பதற்கு உதவிய கௌரவ அங்கஜன் இராமநாதன் பிரதிவிவசாய அமைச்சர் அவர்களை

# பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யாழ். மாவட்ட விவசாயிகள் உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கை முயற்சியை ஊக்குவிப்பதற்கும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவதையும் நோக்கமாகக் கொண்டு நாங்கள் முயற்சித்த வேளையில் சாதகமான பதில் கிடைக்கவில்லை. இந்த நிலையில் பிரதி விவசாய அமைச்சர் **கௌரவ அங்கஜன் இராமநாதன்** அவர்களை அனுகி எமது கோரிக்கையை சமர்பித்தோம். எமது கோரிக்கையை ஏற்றுக்கொண்ட அமைச்சர் விதை உருளைக்கிழங்கு விவசாயிகள் 50 வீத மானிய விலையில் பெற்றுக்கொள்ளவதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளார். அமைச்சர் அவர்களை பாராட்டி எமது மனமார்ந்த நன்றிகளையும் வா்ழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

விதை உருளைக்கிழங்கு கோரி பதிவு செய்த விவசாயிகளுக்கு விதை உருளைக்கு 50 வீத மானிய விலையில் அமைச்சரின் நேரடி கண்காணிப்பின் கீழ் பிராந்திய கமநல சேவை நிலையங்களில் வைத்து வழுங்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**தலைவர் இ. தெய்வேந்திரம் - 077 628 2578**
**யாழ். மாவட்ட உருளைக்கிழங்கு உற்பத்தி விற்பனை கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம், யாழ்ப்பாணம். 01.10.2018**

# மரண அறிவித்தல்

## திருமதி கனகம்மா சிவகுரு



மாரீசன் கூடலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா சிவகுரு கடந்த (28.09.2018) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு சிவகுருவின் அன்பு மனைவியும் சந்திரசேகரம், குணசேகரம், மாலதி, ஞானச்சந்திரன் (பண்டத்தரிப்பு பரிஷ் கூட்டுறவுச் சங்கம்), கலாநிதி, கௌசலா (ஆசிரியர் இளவாலை மெய்கண்டான்), சிவகுமார் (துர்க்கா ரேடர்ஸ், கொக்குவில்), சறோ ஜினி (சுவிஸ்), புஷ்பவதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயும் விஜய பாலன், மங்களராணி, ஜெயகுமாரி, ரதீஸ் வரன், நவநீதன், சிவகுமார், விஜிகலா, தவமணிதேவி ஆகியோரின் அன்பு மாமியும் தர்மதன், குகதர்சி, பிரியங்கா, கஜேந்தினி, சாரங்கா, அபிநயன், நமிதா, கீர்த்தனன், சயன், றாகவி, அயன், ஹம்சவர்த்தினி, சாகரி, நதுமிதன், காவியன், ஓவியா காலஞ்சென்ற சயிந்தன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2018) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மாரீசன்கூடல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மாரீசன்கூடல், இளவாலை.**
**021 225 1727, 076 802 7770**


தகவல்:
**குடும்பத்தினர்.**

தமிழ்கோ

# வாழும் உயிரிகள்



இந்த உலகம் உருவாகி அண்ணளவாக 454 கோடி ஆண்டுகள் ஆகின்றன். சூரியனுடைய வயதும் இதை ஒத்ததாகவே அமைந்துள்ளது. இந்தக் கோளில் மட்டும்தான் உயிர்கள் வாழ்வதற்கான சூழமைவுகள் காணப்படுகின்றன. இங்கு ஒட்சிசனைச் சுவாசிக்காத உயிரினங்களும் கூட உண்டு. அதே போல கொதிக்கும் நீரிலும், கரிக்கும் உப்பிலும், உறையும் பனியிலும் வாழும் உயிரினங்களும் அதிகமாகவே இருக்கின்றன. மனித இனம் வாழ்வதற்காகத்தான் இந்த உலகம் உருவானதா? என்ற கேள்விகளை கேட்டிருந்தால் பதிலானது இல்லை என்றே வெளிப்படும். ஏனெனில் நாம் அனைவருமே இந்தப் பூமியில் இயக்கமுறும் வழிப்போக்கர்கள்தான். ஆனாலும் புவி அலங்காரம் செய்கின்ற இயற்கையை ஆட்டிப் படைக்கிறோம்.




### வெள்ளை நிறத் தொப்பி

பூமியின் இரு துருவங்களும் பனித் தொப்பிகளை மாட்டிக் கொண்டு திரிகின்றன. ஆனாலும் அதன் உள்ளாய் அமைந்துள்ள மையப்பகுதியானது இரும்பு,நிக்கல் கலந்த குழம்பினால் கொதித்துக் கொண்டு இருக்கிறது. அதனால் பூமி காந்தப்புலனையும் கொண்டமைந்துள்ளது. பூமியின் வட துருவம் ஆட்டிக் என்றும், தென் துருவம் அந்தாட்டிக்கா என்றும் அழைக்கப்படுகிறது. இவை கொண்டுள்ளதானா அதிக தாது வளங்களும், அதன் விளைவாய் உருவான உயிரினங்களும் மனித சமுதாயத்துக்குப் பெரிதும் உதவுகின்றன.

### முதல் உயிரியும் வாயுப்பரிணாமமும்

பூமியின் ஆற்றல் மிகுந்த வேதியியல் பரிணாமம் காரணமாக அண்ணளவாக 400 கோடி ஆண்டுகளுக்கு முன்பாக தானாகவே இரட்டிப்பான ஒரு மூலக்கூறின் மூலம் உலகின் பொது மூதாதையரான ஓர் உயிரி உருவானதாகக் கூறப்படுகிறது. அதன் பின்பு உயிரினங்களின் தொடக்க காலப் பரிணாமங்கள் முதல் ஒளிச் சேர்க்கை உயிரி வந்ததன் பின்பாகவே தொடக்கமுற்றன. ஒளிச் சேர்க்கையின் வயது 350 கோடி ஆண்டுகள். அதற்கு முன் வாழ்ந்த உயிரிகள் எல்லாமும் ஐதரசன் அல்லது ஐதரசன் சல்பைடைப் பயன்படுத்தி உயிர் வாழ்ந்தன என்றே சொல்லப்படுகிறது.

அண்ணளவாக 30 கோடி ஆண்டுகளுக்கு முன் வந்த சயனோபக்ரீயா என்ற நீலப் பச்சைப் பாசி என்றே கூறப்படுகிறது. இந்த உலகை ஒட்சிசன் நிறைந்த உலகம், ஒட்சிசன் உள்ள வளி மண்டலம் என உலகின் முகவமைப்பையே மாற்றிய ஜாம்பவான்களாக இவையே விளங்குகின்றன. நாம் சுவாசிப்பதற்கான ஒட்சிசனை உருவாக்கிய பெருமை இந்த நீலப் பச்சை பாசிகளுக்கே உண்டு. இதன் பின்னான காலப்பகுதியிலேயே உயிரினப் பரிணாமம் பெரும் வீச்சுடன் நடைபெற்றது. அது போலவே 350 கோடி ஆண்டுகளுக்கு முன்பாக பூமியின் காந்தப் புலன் அல்லது பரப்பு உருவானது. அதன் ஈர்ப்பு விசை கொண்டே வளிமண்டலம் ஓடிப்போகாதிருக்கப் பணிக்கப்பட்டது. காப்பாற்றப்பட்டுள்ளது என்றே சொல்லலாம்.

### அழிவோடு மீண்டு வரும் பூமி


உலகம் உருவானதிலிருந்து ஏராளமான பேரழிவுகள் ஏற்பட்டுள்ளன. அவை மூலம் ஒட்டுமொத்த உயிரின அழிவுகள் இடம்பெற்றுள்ளான. இதுவரை உருவான உயிரினங்களில் அண்ணளவாக 98 வீதமானவை இந்தப் பேரழிவுகள் கொண்டுதான் உலகத்தின் முகத்திலிருந்து துடைத்து எறியப்பட்டன. அதிலும் பெர்மியன்(பேர்மியன்) காலத்தில் நிகழ்ந்த அழிவுகள்தான் பெரும் சாவு நிறைந்த பேரழிவு என்று சொல்லப்படுகிறது.

இந்த மகா அழிவு அண்ணளவாக 250 கோடி ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்தது. இந்த அழிவின்போது 96 வீதமான கடல் வாழ் உயிரிகளும், 70 வீதமான நிலவாழ் உயிரினங்களும் இந்த உலகை விட்டுச் சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது. பூச்சிகளையும் இந்த ஆழிப்பேரலை அழிவுகள் விட்டு வைக்கவில்லை. அழிந்து போனவைகளில் முக்கியமா னவை பாலூட்டிகள் போலிருந்த ஊர்வன என்றே சொல்லப்படுகிறது. இந்த அழிவுக்குப் பின்பாக அண்ணளவாக 30 கோடி ஆண்டுகளுக்குப் பின்பாகத்தான் முதுகெலும்பிகள் தங்களின் இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளன.

### வாழும் உயிரிகள்

இன்றைய உலகில் லைக்கன்ஸ் காளான்கள், பக்ரீரியா என அனைத்துத் தாவர விலங்கினங்களை உள்ளடக்கியதாக அண்ணளவாக 1.13 கோடி உயிரின வகைகள் இந்தப் புவியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இவற்றில் பூச்சிகளில் மட்டுமே அண்ணளவாக 50,000,000 இனங்கள் உள்ளன. முதுகெலும்பில்லாதவை 67 இலட்சத்து 55 ஆயிரத்து 830 இனங்கள் உள்ளன. முதுகெலும்பிகளில் அண்ணளவாக 80 இலட்சத்து 500 வகையினங்க்ள் உள்ளன. மொத்த தாவர இனங்களுள் 3 இலட்சத்து 90 ஆயிரத்து 700 வகைகள் உள்ளன.

# தென்கோடி உலகம்





கொஞ்சம் சாய்ந்து வெளித் துரத்திக் கொண்டிருப்பது போன்றதான உலகின் தென்திசை வெளியே அந்தாட்டிக்க எனும் பனிக் கண்டம். இது தென்பகுதி உலகின் அந்தாட்டிக்கா வட்டத்தை தன் வசம் வைத்துள்ளது. இதனைச் சுற்றியதாக தென் பெருங்கடல் உள்ளது. 1.4 கோடி சதுரக் கிலோ மீற்றர்கள் பரப்புடைய அந்தாட்டிக்கா பகுதி உலகின் ஐந்தாவது பெரிய கண்டமாகும். இது ஆஸ்திரேலியாவை விடவும் இரண்டு மடங்கு பெரியது. அந்தாட்டிக்காவில் 98 வீதமான பகுதி பனியால் மூடப்பட்டுள்ளது. தரைமேல் அண்ணளவாக 1.6 மீற்றர் உயரத்துக்குப் பனிப்பாளம் உள்ளதாகக் கூறப்படுகிறது.

### குணமும் நிறமும்

அந்தாட்டிக்கா உலகிலேயே மிகவும் குளிர்ந்த, உலர்ந்த, காற்று அதிகம் உள்ள கண்டம். அது மட்டுமன்றி அனைத்துக் கண்டங்களை விடவும் மிக உயரத்தில் இருக்கிறது. இங்கு அதிக தாவரங்கள் இல்லாத காரணம் கொண்டு இவை பனிப் பாலைவனம் என்றே அழைக்கப்படுகின்றன. வருடத்தில் 200 மில்லி மீற்றர்கள் அளவுடையதான மழைப் பொழிவு மட்டுமே உண்டு. ஆனாலும் இங்குள்ள குளிர்ச் சூழல் அதிக உடல் உறைவைத்தரும்.

இங்கு வெப்பநிலை 89 பாகை செல்சியஸ் ஆகக் காணப்படும். மனித வாழ்க்கை இங்கு சாத்தியமற்றது. குளிரைத் தாங்கும் உயிரினங்கள் மட்டுமே வாழ்கின்றன. ஆல்காக்கள், பாக்டீரியா, பூஞ்சைகள், விலங்கு உண்ணிகள், தட்டைப் புழுக்கள், சீல், மற்றும் பெங்குவின்கள் இந்தக் குளிர்ப் பரப்பில் உலவித் திரிகின்றன. பனிப்பாளத்தை இரசனைக்குட்படுத்தி மகிழ்வுற்று வாழ்ந்து கொண்டிருகின்றன. இங்கு பனிக் கரடிகளோ, எஸ்கிமோக்களோ இல்லை என்றே ஆய்வாளர்கள் சொல்கின்றனர்.

### சூரியக் கதிரை மிரட்டும் பனிப்பாறை

1821 ஆம் ஆண்டு முதன் முதலாக அந்தாட்டிக்காவுக்கான பயணங்கள் இடம்பெற்றன. அங்குள்ள பனிப் பாறைகள் 5 கிலோ மீற்றர்கள் உயரம் வரை அமைந்துள்ளன. இவற்றிலிருந்து 70 வீதமான நல்ல நீரைப் பெற்றுக்கொள்ள முடியும். இவை கரைந்தால் கடல் மட்டம் 50 தொடக்கம் 60 மீற்றர் வரை உயரும். பனிப்பாறைகள் மிகப் பெரிய பனியாறுகளாக ஊற்றெடுக்கும். இவை மிகக் குறைந்த வேகத்தில் கடலை நோக்கிச் செல்கின்றன. இந்தக் கண்டம் கடல் மட்டத்திலிருந்து அண்ணளவாக 2 ஆயிரத்து 300 மீற்றர்கள் உயரமாக அமைந்துள்ளது. சூரியனிலிருந்து வருவதான சூரியக் கதிர்களைப் பனிப்பாறைகள் 80 வீதமும் திருப்பி அனுப்பி விடுகின்றன. விரட்டியடிக்கின்றன. மீதமுள்ள 20 வீதமான சூரிய வெப்பம் வளிமண்டலம் மற்றும் மேகங்களால் உட்கிரகிக்கப்படுகின்றன.

### ஆய்வகம்

அந்தாட்டிக்காவில் அதிக கனிமங்கள் உள்ளன. எண்ணெய் வளமும் ஆழ்ந்து கிடக்கிறது. உலகின் அற்புதமான ஆய்வகமாக அந்தாட்டிக்கா சித்தரிக்கப்படுகிறது. உலகின் பல பகுதிகளிலிருந்தும் விஞ்ஞானிகள் தொடர்ந்து வந்த வண்ணம்இருக்கின்றனர். இங்கு அறியப்படாமல் இருக்கும் வளங்கள், உயிரிகளை ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர். இங்குள்ளதான மாசுபடாத சூழலைக் கருத்தில் கொண்டு வெப்ப நிலை மாற்றத்துக்கும், பிரபஞ்ச உருவாக்கத்துக்குமான காரணங்கள் தேடல் பெற்றுள்ளன.



# பாதீட்டில் பாதுகாப்புக்கு அதிக நிதி ஒதுக்கம்

2019 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில், பாதுகாப்பு அமைச்சுக்கே அதிக ளவு நிதி ஒதுக்கப்படவுள்ளது என்று நிதி ஒதுக் கீட்டுச் சட்ட வரைபில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2019ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. 2019ஆம் ஆண்டில் பாதுகாப்புக்கு 306.1 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. 2018 ஆம் ஆண்டில் பாதுகாப்புச் செலவினங்களுக்காக, 290 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. அடுத்த ஆண்டில் இது மேலும் அதிகரிக்கவுள்ளது. இலங்கை இராணுவம், வான் படை, கடற் படை, கடலோரக்காவற் படை மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்களம் ஆகியவற்றை உள்ளடக்கிய பாதுகாப்பு அமைச்சுக்கே இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத் தில் விவசாய அமைச்சுக்கான ஒதுக்கீடு மூன்று மடங்கு அதிகரிக்கவுள்ளது. இந்த ஆண்டில் 23 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்ட நிலையில், அடுத்த ஆண்டு இது 63 பில்லி யன் ரூபாவாக அதிகரிக்கப்படும் என்று தெரி விக்கப்படுகின்றது.

போக்குவரத்து, சிவில் வானூர்திச் சேவை, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல், சுகாதாரம், ஊட்டச்சத்து மற்றும் சுதேச மருத்துவம், பெண்கள் மற்றும் சிறுவர் கள் விவகாரம், சிறிலங்கா அதிபர் செயலகம் உள்ளிட்டவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகளும் அடுத்த ஆண்டில் அதிகரிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

2019ஆம் ஆண்டுக்கான மொத்த அரச செலவினங்கள், 2 ஆயிரத்து 281.5 பில்லி யன் ரூபாவாக (ரூ. 2,281,682,472,000) ஆக இருக்கும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. நிதியமைச்சால் அரசிதழில் வெளியிடப்பட் டுள்ள நிதி ஒதுக்கீட்டுச் சட்ட வரைவு அடுத்த மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். எதிர்வரும் நவம்பர் 5ஆம் திகதி நாடாளுமன் றத்தில் 2019ஆம் ஆண்டுக்கான வரவுசெல வுத் திட்டத்தை நிதியமைச்சர் மங்கள சமரவீர சமர்ப்பிக்கவுள்ளார். (ற)

# ரி.ஐ.டியினருக்கு கொமாண்டோ பயிற்சி வழங்கக் கோரினார் நாலக சில்வா

## விசாரணையில் வெளிவந்தது தகவல்

கொழும்பு, ஒக். 1

பொலிஸ் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த ஒரு குழுவினருக்கு, கொமாண்டோ பயிற்சி அளிக்குமாறு, அதன் பொறுப்பதிகா ரியாக இருந்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக சில்வா தம்மிடம் கேட்டார் என்று, சிறப்பு அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி லதீப் தெரிவித்துள்ளார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு வழங்கி யுள்ள வாக்குமூலத்திலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அரச தலைவர், முன்னாள் அரச தலைவர் மற்றும் அவரது குடும்பத்தினரைக் கொல்லும் சதித் திட்டம் தொடர்பாக, பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக சில்வாவுக்கு எதிராக நடத்தப்ப டும் விசாரணைகளின் போதே சிறப்பு அதிர டிப்படையின் கட்டளை அதிகாரி மேற்கண்ட வாறு சாட்சியம் அளித்துள்ளார்.

பொலிஸ் மா அதிபரின் அனுமதியுடனேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்திருந்தார் என்றும் சிறப்பு அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி லதீப் தெரிவித்துள்ளார். (5)

பொதுவில் அமைச்சரவைப் பத்திரங்களுக்கு நிதி அமைச்சின் அவதானம் பெறப்பட்டே, அனுமதி வழங்கப்படும். அதனடிப்படையில் பலாலி வானூர்தித் தள அபிவிருத்தி அமைச் சரவைப் பத்திரமும் நிதி அமைச்சின் அவதா னத்துக்காக கையளிக்கப்பட்டுள்ளது.

25 இற்கு மேற்பட்ட அமைச்சரவைப் பத்திரங் கள் நிதி அமைச்சில் உள்ளதால், பலாலி அபிவிருத்திக்குரிய அமைச்சரவைப் பத்திரத் துக்கு அவதானம் வழங்குவது தாமதமடைவ தாகத் தெரிவிக்கப்படுகின்றது. (5)

## விபத்தில் பொலிஸார் காயம்

கொடிகாமம், ஒக். 1

ஆலயத்துக்குச் சென்று திரும்பி நடந்து வந்த பொலிஸ் உத்தியோகத்தரை அந்த வழியே வந்த உந்துருளி மோதியதில் பொலிஸ் உத் தியோகத்தரும் உந்துருளியில் அமர்ந்தி ருந்த பெண்ணும் காயமடைந்தனர்..

இந்தச் சம்பவம் நேற்று இரவு 8.30 மணிய ளவில் ஏ9 முதன்மைச் சாலையில் சாவகச் சேரி பிரதேச சபையின் தலைமையகத்துக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். பொலிஸ் உத் தியோகத்தர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப் பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். காயமடைந்த பெண் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் கடமை யாற்றும் தலவாக்கலையைச் சேர்ந்த பாரதன் முத்து கம்புல் (வயது-46) என்பவர் இராமா வில் கந்தசாமி கோவிலுக்கு நடந்து சென்று வழிபாடு முடித்துக் கொண்டு திரும்புகையில் சாவகச்சேரியிலிருந்து கொடிகாமம் பெரிய நாவலடியைச் சேர்ந்த தம்பதியினர் சென்ற உந்துருளி மோதியதெனத் தெரிவிக்;கப்பட் டது. உந்துருளியில் பயணித்த அதே இடத் தைச் சேர்ந்த செல்வரத்தினம் வசந்தாதேவி (வயது-50) என்பவரும் காயமடைந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (5.9.159)

## அரசியல் கைதிகள்...

அரசியல் கைதிகள் தொடர் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். அவர்களின் விடுதலை தொடர்பில் கடந்த புதன் கிழமை பேச்சு நடத் தப்பட்டது. அப்போது அரசு ஆட்சிக்கு வந்தபோது, அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் ஏற்படுத்தப்பட்ட உடன்பாட்டுக்கு அமைவாக பெருமளவானோர் மறுவாழ்வு வழங்கி விடு விக்கப்பட்டுள்ளார்கள். தற்போதுள்ளவர்கள் பாரதூரமான குற்றச்சாட்டுக்களுடன் தொடர் புடையவர்கள் என்று சட்டமா அதிபர் தெரிவித் திருந்தார்.

அவர்கள் ஒவ்வொருவரதும் வழக்குகளைத் தனித் தனியாக ஆராய்ந்து அவர்களை எவ் வாறு விடுவிக்கலாம் என்பது தொடர்பில், நாளை செவ்வாய்க் கிழமை பேச்சு நடத்த வுள்ளோம். நீதி அமைச்சர் தலதா மற்றும் சட்டமா அதிபருடன் நானும் அந்தச் சந்தி பில் பங்கேற்கவுள்ளேன்.

ஆனால், எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனுக்கு இதில் உடன்பாடு இல்லை. அவரைப் பொறுத்தவரையில், அரசியல் கைதிகள் விடயத்தில் அரசியல் ரீதியான தீர்மா னம் எடுக்கப்பட வேண்டும். அதுவே நிலைப் பாடு. இது தொடர்பில் அரச தலைவருடன் பேச்சு நடத்தப்படும் - என்றார். (5.8.105)

## வடக்கு...

அனுப்பப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. மிக நீண்ட இழுபறியின், சுமார் ஓராண்டு தாமதமாக வடக்கு கிழக்கு வீடமைப்பு பணி ஆரம்பமாகவுள்ளது. எந்த அமைச்சின் கீழ் முன்னெடுப்பது என்ற சிக்கல் நிலமை எழுந் திருந்தது. இறுதியில் தலைமை அமைச்சர் தலைமையிலான குழு நியமிக்கப்பட்டு அதன் கீழ் இதனை முன்னெடுக்கத் தீர்மானிக்கப் பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் 25 ஆயி ரம் கல் வீடுகள் அமைக்கப்படும். முதலில் 15 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படும். அந்தப் பணி ஆரம்பித்து ஒன்றரை மாதங்களுக்குள் எஞ்சிய 10 ஆயிரம் வீடுகளையும் அமைக் கும் பணி ஆரம்பமாகும். ஒரு வருடத்துக்குள் 25 ஆயிரம் வீடுகளும் அமைத்து முடிக்கப் படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒவ் வொரு மாவட்டத்துக்கும் எவ்வளவு வீடுகள் என்பது பங்கிடப்பட்டுள்ளன. மக்கள் மீளக்கு டியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அதி களவான வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

வீடுகளை அமைக்கும் பணி, யுனொப்ஸ், யுன் ஹபிட்டாட் நிறுவனங்களே முன்னெடுக்க வுள்ளன. அந்த நிறுவனங்களுடன் புரிந்து ணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவேண்டும். அது தயாரிக்கப்பட்டு சட்டமா அதிபரின் அவதா னத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த வாரம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவ தற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மேலும், தலைமை அமைச்சர் தலைமையிலான வீடமைப்பு விட யத்தை ஆராயும் குழுவும் இந்த வாரம் முதல் தடவையாகக் கூடும் என்று தெரியவருகின் றது. (5)

## பலாலி...

பிராந்திய வானூர்தி நிலையமாகத் தர முயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது. உடனடி யாக அந்தப் பணிகளை ஆரம்பிக்கத் திட்டமி டப்பட்டது. ஆரம்பத்தில் இந்தியா ஊடாக இதனைச் செய்ய தீர்மானித்திருந்தாலும், தற்போதுள்ள நிலையிலிருந்து பிராந்திய வானூர்திச் சேவையை ஆரம்பிக்கும் அள வுக்கான அபிவிருத்திப் பணிகளை மாத்திரம் இலங்கை சிவில் வானூர்தித் திணைக்களம் முன்னெடுக்க முடிவு செய்யப்பட்டது.

இதற்காக ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக் கப்பட்டது. சுற்றுலாத்துறை அமைச்சு, சிவில் வானூர்திப் போக்குவரத்து அமைச்சு, தலைமை அமைச்சரின் அமைச்சு ஆகிய மூன்றும் இணைந்து இந்த அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்திருந்தன.

## மைத்திரிபாலவே...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள் ளது.

போரின் இறுதி இரண்டு வாரங்களிலும் நடந் தது தனக்குத் தெரியும் என்றும், அப்போது முன்னாள் இராணுவத் தளபதி, முன்னாள் அரச தலைவர், முன்னாள் பாதுகாப்புச் செய லர் உள்ளிட்ட யாரும் நாட்டில் இருக்க வில்லை என்றும் அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன அமெரிக்காவில் கருத்து வெளியிட்டிருந்தார்.

இது தொடர்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன் நேற்று நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

அவர் தெரிவித்ததாவது,

இறுதிப் போரின்போது நடந்த விடயங்கள் அரசதலைவர் மைத்திரிபாலசிறிசேனவுக்குத் தெரியும் என்றால், நிலைமாறு கால நீதிப் பொறிமுறையின் உண்மையைக் கண்டறி யும் குழுவின் முன்பாக அவர் முதலில் சாட்சி யமளிக்கவேண்டும். போரின் இறுதிக் கட்டங் களில் பன்னாட்டு மனித உரிமைச் சட்டங்கள், மனிதாபிமானச் சட்டங்கள் இரு தரப்பினரா லும் மீறப்பட்டதாக இரண்டு அறிக்கைகள் கூறுகின்றன. எனவே அரச தலைவர் மைத் திரிபால சிறிசேன, இறுதிப் போரில் நடந்தவை பற்றி சாட்சியமளிக்கவேண்டும் என்றார்.

வடக்கில் வாள்வெட்டுக் குழுக்களைக் கட்டுப் படுத்த இராணுவத்துக்கு மேலதிக அதிகாரம் வேண்டும் என்ற இராணுவத் தளபதியின் கோரிக்கைக்கு இணங்குவதாக இராஜாங்க அமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்த கருத் துத் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு, இராணுவத்தினருக்கு சட்டம் ஒழுங்கு விவகா ரத்தில் தலையிடுவதற்கு எந்தவொரு சந்தர்ப் பமும் வழங்க முடியாது. மாகாணத்துக்கு வழங்கப்பட்ட பொலிஸ் அதிகாரம் பிரயோகிக் கக் கூடியதாக இருந்திருந்தால் இந்தச் சம்ப வங்களைக் கட்டுப்படுத்தியிருக்க முடியும் - என்றார். (5.8.105)

## கண்டுபிடிக்கப்பட்ட...

அமைப்பின் தலைமைப் பொறுப்பை இலங்கை ஏற்றுள்ளதன் காரணமாக தனது நாட்டில் கொத்துக்குண்டுகள் பயன்படுத்தப் பட்டமைக்கான ஆதாரங்கள் கிடைப்பது குறித்து தெளிவுபடுத்தவேண்டும் இவ்வாறு பன்னாட்டு மனித உரிமைச் செயற்பாட்டாள ரும் பன்னாட்டு நீதி மற்றும் உண்மைக்கான திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான யஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையின் உள்நாட்டுப் போரின் இறுதி தருணத்தில் பொது மக்களிற்கான பாதுகாப்பு வலயங்கள் என்று அறிவிக்கப்பட்ட பகுதியில் கொத்துக்குண்டுகள் பயன்படுத்தப்பட்டதை அனைத்து ஆதாரங்களும் உறுதி செய்கின் றன. இலங்கைப் படையினர் தடை செய்யப் பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்தினர் என்ற குற்றச்சாட்டுகள் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டன. 2016ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரே இதற்கான சுயாதீன பன் னாட்டு விசாரணையை கோரியிருந்தார். அது நடைபெறவில்லை.

தடைசெய்யப்பட்ட ஆயுதத்தினை முற்றாக ஒழிப்பதற்காக குரல்கொடுக்கும் அமைப்பின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்டுள்ள இலங்கை அதன் கடந்த காலத்தை மறைக்க முடியாது. ஐக்கியநாடுகளுக்கும் நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் அமைப்புகளுக்கும் பணியாற்றியுள்ள தமிழர்கள் தாங்கள் நேர டியாக கிளஸ்டர் குண்டுகளை பார்த்ததாக தெரிவித்துள்ளனர்.

போர் இடம்பெற்ற பகுதியில் பணியாற்றிய மருத்துவர்கள் பெண்ணொருவரின் காலில் இருந்து கிளஸ்டர் குண்டுகளின் சிதறல்களை அகற்றியுள்ளனர்.

இலங்கை அரசு தொடர்ந்தும் தான் கொத்துக் குண்டுகளை பயன்படுத்தியதை மறுத்துவரு வதன் மூலம் அதன் காரணமாக பாதிக்கப்பட் டவர்களுக்கு அவர்களது குடும்பத்தவர் களுக்கும் அவமரியாதை செய்கின்றது - என் றார். (5)

## மின் தாக்கி...

கண்டி, வத்தேகமவைச் சேர்ந்த 21 வயதான இராணுவச் சிப்பாயே உயிரிழந்துள்ளார். இது தொடர்பான விசாரணைகளை பூனாவ பொலிஸார் மேற்கொண்டனர். (ற-110)

## 2 கிலோ...

பாலத்துக்கு அருகில் மறிக்கப்பட்டுப் பொலி ஸாரால் சோதனையிடப்பட்டது.

பேருந்தில் பை ஒன்றில் மறைத்து வைக்கப் பட்டிருந்த 2 கிலோ கேரளக் கஞ்சா கைப்பற் றப்பட்டது. அதை வைத்திருந்தார் என்ற குற் றச்சாட்டில் மொனறாகலையைச் சேர்ந்த 30 வயதான ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசார ணைகள் நடைபெற்று வருகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-110)

## தொடருந்து...

குறைந்த தொடருந்துக் கட்டணங்களில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

கட்டண அதிகரிப்பின்படி கொழும்பு - யாழ்ப் பாண 3ஆம் வகுப்புக் கட்டணம் 320 ரூபா வில் இருந்து 350 ரூபாவாக அதிகரிக்கப்பட் டுள்ளது.

கொழும்பு - பதுளை கட்டணம் 205 ரூபாவில் இருந்து 275 ரூபாவாக அதிகரிக்கப்படுகி றது. கொழும்பு - மட்டக்களப்பு கட்டணம் 235 ரூபாவில் இருந்து 315 ரூபாவாக அதிகரிக் கப்படுகிறது.

கொழும்பு - திருகோணமலை கட்டணம் 210 ரூபாவில் இருந்து 280 ரூபாவாக அதிகரிக் கப்படுகிறது. கொழும்பு - புத்தளம் கட்டணம் 120 ரூபாவில் இருந்து 155 ரூபாவாக அதிக ரிக்கப்படுகிறது. கொழும்பு - கண்டி கட்டணம் 110 ரூபாவில் இருந்து 140 ரூபாவாக உயர்த் தப்படுகிறது.

கொழும்பு சிலாபம் கட்டணம் 80 ரூபாவில் இருந்து 100 ரூபாவாக அதிகரிக்கப்படுகிறது. கொழும்பு - குருநாகல் கட்டணம் 95 ரூபா வில் இருந்து 115 ரூபாவாக அதிகரிக்கப்பட வுள்ளது. (ற)

# வென்றது மகாதீபம்

யாழ்ப்பாணம், ஒக். 1
கிளிநொச்சி மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் கிளிநொச்சி பிறிமியர் லீக் துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மகாதீபம் அணி வெற்றி பெற்றது.
கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மகாதீபம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதியத்து.
முதலில் துடுப்பெடுத்தாடிய இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி 19.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 98 ஓட்டங்களைப் பெற்றது.
பந்துவீச்சில் மகாதீபம் அணியின் சார்பில் தனுசன் 4 இலக்குகளையும், நிரோசன், தயாபரன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மகாதீபம் விளையாட்டுக் கழக அணி 16.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 103 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. (ம-23)




# ஊரெழு றோயல் அணி அரையிறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஒக். 1
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் வடக்கின் கில்லாடி வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணி வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.
அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா கோலொன்றைப் பதிவுசெய்ததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் ஊரெழு றோயல் அணி வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. ஆட்டநாயகனாக ஊரெழு றோயல் அணியின் சன்சயன் தெரிவானார். (ம-23)



யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் திரைச் சீலையை யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக்கின் தலைவர் இ.ஆனல்ட், யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக்கின் செயலளார் அஜித்குமார் ஆகியோர் இணைந்து நேற்றுமுன்தினம் திரைநீக்கம் செய்து வைத்தனர். அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது. (ம-23)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஒக். 1
நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் காலிறுதியாட்டத்தில் நீர்வேலி காமாட்சி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் சென்றல் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)





வட்டக்கச்சி மத்திய கல்லூரியால் நடத்தப்படும் வட்டக்கச்சி பிறிமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் வட்டக்கச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. இறுதியாட்டத்தில் வி.சி.சி பீனிக்ஸ் அணியை எதிர்த்து யங்ஸ்ரார் அணி மோதவுள்ளது. பரிசளிப்பு நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலக திட்டமிடல் பணிப்பாளர் ரி.கௌரிபாலன், மதிப்புறு விருந்தினராக பிரபல வர்த்தகர் வி.செல்வகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம23)

# பப்ரிஸ் அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 1
கிளிநொச்சி மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் கிளிநொச்சி பிறீமியர் லீக் துடுப்பாட்டத் தொட்ரில் பப்ரிஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.
கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பப்ரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தூய தமிழ் விளையாட்டுக் கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய தூயதமிழ் விளையாட்டுக் கழக அணி 13.4 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 67 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பிரசாந் 30 ஓட்டங்களைப் பெற்றார்.
பந்துவீச்சில் சுஜீவன் 3 இலக்குகளையும், கஜன், பிறின்ஸ் இருவரும் தலா 2 இலக்குகள்ள வீழ்த்தினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பப்ரிஸ் விளையாட்டுக் கழக அணி 10.2 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 68 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. (ம-23)

## பங்களாதேஷ் அணிக்கு விராட்கோக்லி பாராட்டு!




ஆசியக் கிண்ணத் தொடரில் இறுதியாட்டம் வரை முன்னேறிய பங்களாதேஷ் அணியை வாழ்த்தியுள்ளார் இந்திய அணியின் தலைவர் கோக்லி.
இறுதியாட்டம் தொடர்பில் தனது சமூக வலைத் தளங்களில் கோக்லி, "இந்திய அணிக்கு என் வாழ்த்துக்கள். ஏழாவது தடவையாக ஆசியக் கிண்ணத் தொடரைக் கைப்பற்றியுள்ளோம். அதேநேரம் பங்களாதேஷ் அணிக்கும் என் வாழ்த்துக்கள்.
இறுதியாட்டம் வரை முன்னேறியமைக்கும், இறுதியாட்டத்தில் கடும் சவாலை வழங்கியமைக்கும் பங்களாதேஷைப் பாராட்டியே ஆக வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார். (ம)

## உள்ளூர் ஆட்டத்தில் விளையாட வேண்டும்

### டோனிக்குக் கவாஸ்கர் அறிவுரை



"டோனி உள்ளூர் ஆட்டங்களில் கட்டாயம் விளையாட வேண்டும்" என்று தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் தலைவர் கவாஸ்கர்.
ஆசியக் கிண்ணத் தொடரில் இலக்குக் காப்பில் சிறப்பாகச் செயற்பட்ட போதிலும் துடுப்பாட்டத்தில் டோனி தடுமாறினார். இதையடுத்தே இவ்வாறு தெரிவித்தார் கவாஸ்கர்.
"டோனி உள்ளூர் கிரிக்கெட் தொடரில் விளையாட வேண்டுமா என்று கேட்டால், கட்டாயம் டோனி விளையாட வேண்டும் என்றுதான் கூறுவேன். நான்கு நாள்கள் கொண்ட உள்ளூர் தொடரில் விளையாடினால், வளர்ந்து வரும் ஜார்க்கண்ட் வீரர்களுக்கு அது உதவிகரமாக இருக்கும்.
50 பந்துப்பரிமாற்றங்கள் கிரிக்கெட்டில் குறைந்த வாய்ப்புகள்தான் கிடைக்கும். ஆனால் நான்கு நாள்கள் கொண்ட போட்டியில் விளையாடினால் நீண்ட இன்னிங்ஸ் விளையாட வாய்ப்பு கிடைக்கும். அது ஒருநாள் ஆட்டங்களுக்குப் பயன்படும்" என்று கவாஸ்கர் மேலும் தெரிவித்தார். (ம)



# மே.தீவுகளுக்கு எதிரான இந்திய அணி அறிவிப்பு

இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடருக்கான இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டது.
ஆசியக் கிண்ணத் தொடருக்காக கட்டாய ஓய்வு கொடுக்கப்பட்ட இந்திய அணித் தலைவர் விராட் கோக்லி மீண்டும் அணிக்குத் திரும்பியுள்ளார். அதேநேரம் தொடர்ச்சியாக விளையாடிவரும் இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் தவான் மற்றும் வேகப் பந்து வீச்சாளர்களான பும்ரா, புவனேஸ்வர் குமார் இருவருக்கும் கட்டாய ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. அதேநேரம் அகர்வால், சிராஜ் இருவரும் அணிக்குள் சேர்க்கப்பட்டுள்ளனர்.
இந்திய அணியின் விவரம் - கோக்லி (தலைவர்), ராகுல், ஷா, மயங் அகர்வால், புஜாரா, விஹாரி, பன்ட், அஸ்வின், ஜடேயா, குல்தீப், சமி, உமேஸ் யாதவ், சிராஜ், சர்துல். (ம)

International Cricket Council

## பன்னாட்டு கிரிக்கெட் சபையால் புதிய விதிமுறைகள் நடைமுறை

பன்னாட்டு கிரிக்கெட் சபை சில புதிய விதிமுறைளை நடைமுறைப்படுத்தியுள்ளது. டக்வேர்த் லூயிஸ் முறை, வீரர்களுக்கான ஒழுக்காற்றுப் புள்ளி என்பனவற்றில் அந்த புதிய விதிமுறைகள் நடைமுறைக்கு வருகின்றன.
கடந்த நான்கு ஆட்டங்களில் நடைபெற்ற மட்டுப்படுத்தப் பட்ட ஆட்டங்களின் விவரங்கள் குறிப்பாக சராசரிகள் கருத்தில் கொள்ளப் பட்டு டக்வேர்த் லூயிஸ் விதிமுறையில் மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது.
அதேபோல் வீரர்களில் ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பிலும் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.
நேற்று முதல் இந்த புதிய நடைமுறைகள் நடைமுறைக்கு வந்தன. (ம).

## ரியல் – அத்லெட்ரிகோ ஆட்டம் சமநிலையில்!

ஸ்பானியக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ரியல் மட்ரிட் - அத்லெட்ரிகோ மட்ரிட் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிந்தது.
ஆட்டம் ஆரம்பித்தது முதல் இரண்டு அணிகளும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தின..
கோல்கள் இல்லாமல் முடிந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் மாற்றங்கள் ஏற்படவில்லை.
நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் கோல்கள் எதையும் பதிவு செய்யாததை அடுத்து ஆட்டம் சமநிலையானது. (ம)





## பங்களாதேஷ் அணியை பாராட்டுகிறார் சேவாக்!

ஆசியக் கிண்ணத் தொடரில் இறுதியாட்டம் வரை முன்னேறிய பங்களாதேஷ் அணிக்கு தனது பாராட்டை தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் வீரர் சேவாக்.
தனது சமூக வலைத்தளத்தில் பங்களாதேஷ் அணியைப் பராட்டி பதிவொன்றைப் பதிவிட்டுள்ளார் சேவாக். "பங்களாதேஷ் அணிக்கு அருகில் வந்த வெற்றி மீண்டும் தள்ளிப்போனது. முக்கிய வீரர்களை இழந்தபோதிலும் பங்களாதேஷ் வெளிப்படுத்திய உணர்வுபூர்வமான ஆட்டம் அபாரம். அந்த அணியை வாழ்த்தியே ஆக வேண்டும்" என்று தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார் சேவாக். (ம)




நிகழும் விளம்பி வருடத்தில் இன்று (01.10.2018) திங்கட்கிழமை
12.00 – 1.30 மணிக்குமிடையேயுள்ள சுபவேளையில்


**சண்ஜெஸ் A - Z - மார்ற்**
**SUNJEYS A - Z - Mart**

என்னும் சுப்பர் மார்க்கெற் 102, அரசடி வீதி சந்தி, யாழ்ப்பாணம் (இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில்) என்னும் முகவரியில் திறக்கப்படவுள்ளதால் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அன்பர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குறிப்பு:- இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட அசல் தோல் சப்பாத்து, இடுப்புப்பட்டி, பேர்ஸ் மற்றும் பாதணிகளும் உண்டு.
- 10KM சுற்று வட்டாரத்துக்குள் உள்ள வாடிக்கையாளர்கள் 5000/- இற்கு மேல் கொள்வனவு செய்தால் இலவசமாக வீட்டுக்குப் பொருள்கள் கொண்டு செல்லப்படும்.
- இதுமட்டுமல்லாது தொலைபேசி மூலம் 5000/- இற்கு மேல் ஓடர் செய்பவர்களுக்கும் இலவச விநியோகம் உண்டு.

**உரிமையாளர் - ல்யன்.அ.ஜெயந்திரன்**
**021 - 20 - 53 - 077, 0777 - 474 - 111**


## மரண அறிவித்தல்



**நீக்கிலாப்பிள்ளை அகஸ்ரின் (சின்னையா)**

04 ஆம் வட்டாரம் நெடுந்தீவு மேற்கு, நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், இல.03, ஐயனார்புரம் வன்னேரிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நீக்கிலாப்பிள்ளை அகஸ்ரின் கடந்த (28.09.2018) காலமானார்.

அன்னாரின் இன்று (01.10.2018) திங்கட்கி ழமை மு.ப. 10 மணிக்கு பூதவுடல் ஐயனார்புரம் பொது சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.


**போட்டிப் பரீட்சை மாலை நேர வகுப்புகள்**

ஆசிரியர் தெரிவு மற்றும் PGDE, M.Ed தெரிவு பரீட்சைகளுக்கு
செவ்வாய், வியாழன்
பி.ப. 5.00 → 6.30 மணி
கணக்காய்வு பரீட்சகர் கணித வினாத்தாளுக்கு
புதன்
பி.ப.5.00 மணி
தொடர்புகளுக்கு
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 01.09.2018 சனிக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

**அமரர் முருகையா ஆனந்தரட்ணராஜா**

(பல்துறைசார் தொழில்நுட்பவியலாளரும்,
ஆனந் இசைக்குழுவின் உரிமையாளரும், கராத்தே ஆசிரியரும்)

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (01.10.2018) திங்கட்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெறவிருப்பதால் அவரது ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொண்டு அனைவரையும் சமுகம் அளிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

ஆலங்குழாய்,
சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்.

குடும்பத்தினர்
077 286 6644, 077 600 8447





**குழந்தைகள் தங்கள் வாழ்வில்
இருந்து கற்றுக்கொள்கிறார்கள்**

தேசமாக ஒன்றிணைந்து

World Vision


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.10.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.